# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2000, ஆனி 15 உ. ஞாயிறு (29-6 69) ந. ஆகிர் 13 புத்தகம் 23 இதழ் 35



மில்க்வைற்
MILK WHITE SOAP
ஆரோக்கியத்திற்கு ஆடைகள் சுத்தத்திற்கு
உள்நாட்டு உற்பத்திக்கு அளிக்கும் ஆதரவு; நாட்டின் பொருளாதார விருத்திக்கு அளிக்கும் ஆதரவாகும்.


## கதிர்காமத்தில் இந்து ஆலயம் ஆக்கிரமிப்பு

# மத உரிமையை பறிக்க திட்டமா?

சிங்களம் மட்டும் சட்டத்தின் மூலம் இந்நாட்டில் தமிழ் மொழியின் உரிமையைப பறித்தது போல, இந்நாட்டுச் சிறுபான்மை மக்களிடமிருந்து அவர்களது வழிபாட்டு மதஉரிமைகளையும் பலாத்காரமாகப் பறிப்பதற்கு சிங்கள பௌத்த வெறியர்கள் புதிய சதித்திட்டம் தீட்டியுள்ளார்களா?

ஆண்டாண்டு காலமாக சைவமக்களின் வழிபாட்டுத் தலமாக விளங்கி வரும் கதிர்காமம் உச்சிமலை முருகன ஆலயத்தை பலாத்காரமாக கைப்பற்ற நடந்தமுயற்சிகள் எதிர்காலத்தில் இந்நாட்டில் நடைபெறப் போகும் சம்பவங்களுக்கு முன்னோடியாக விளங்குகிறதா?

வரலாற்றின் படியும் புராண இதிகாசங்களின்படியும் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக சைவமக்களின் வழிபாட்டுத்தலமாகவிளங்கிவரும் கோணேசர் ஆலயம் இருந்த இடத்தில் பௌத்த விகாரை இருந்ததாக நடத்தபபட்டு வரும் பிரசாரங்களும் கடந்தவாரம் கதிர்காமம் உச்சி மலைக் கோவிலில் நடைபெற்ற வன்முறைச்சம்பவங்களும், இநநாட்டு பௌத்த வெறியர்கள் சிறுபான்மை மக்களின் மத வழி பாட்டுரிமை மீது—குறிப்பாக இந்து ஆலயங்களின் மீது கை வைக்க ஆரம்பித்துவிட்டார்கள் என்பதைக் காட்டுகிறதல்லவா?

—இக்கேள்விகள் தமிழ் மக்களின்—குறிப்பாக சைவ மக்களின் உள்ளங்களிலெல்லாம் இன்று எழுந்துள்ளன.

கதிர்காமம் உச்சிமலை முருகன் ஆலயத்தைப் பலாத்காரமாகக் கைப்பற்றச் சிங்கள பௌத்த வெறியர்கள் சிலர் முயற்சி செய்ததும், அதன் பயனாக இன்று அவ்வாலயம் பூசையின்றிப் பூட்டப்பட்டுக் கிடப்பதும் தெரிந்ததே. இதுபற்றிக் கொழும்பிலுள்ள பிரபல இந்துப் பிரமுகரான திரு. பட்டக்கண்ணு குமாரசுவாமி பின்வரும் அறிக்கையைச் சுதந்திரனுக்கு விடுத்துள்ளார்.

"ஈழத்தின் பழம்பெரும் ஆலயமான தென்கோடியின் மலை உச்சியில் குடிகொண்டிருக்கும் கதிரமலைக் கந்தனின் பேரொளிப் பெருங் கோவிலைச் சென்ற வாரம் பௌத்த பிக்குவும் அவரது உதவியாளர்களும், அங்கு பூசை செய்து வந்த பூசாரிமார்களைப் பலாத்காரமாக வெளியேற்றிவிட்டுக் கைப்பற்றியுள்ளதை எல்லோரும் அறிந்திருப்பீர்கள்.

இந்தப் பிக்கு கதிரமலையின் உச்சிக்குச் சமீபத்தில் ஒரு புத்த சிலையையும் வைப்பித்து அங்கு செல்வதற்குப் புதிய பாதை ஒன்றையும் அமைத்துள்ளார். அந்தப் பாதையால் தான் மலைக்குச் செல்ல வேண்டுமென யாத்திரிகர்களைப் பலவந்தப் படுத்தியும் தொந்தரவு செய்தும் வந்துள்ளார்.

இத்தனை அக்கிரமங்களையும் பெருந்தன்மையுடன் பொறுத்துக் கொண்டு வந்த சைவசமயத் தலைவர்களின் பொறுமையையும் கண்ணியத்தையும் இன்னும்சோதிப்பதற்கு முறபட்டுள்ளார் புத்த பிக்கு.

இந்த அக்கிரமச் செயலைச் சைவ உலகம் தடுத்து நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லாவிடில் சைவசமயம் மங்கி மறைந்து விடும்.

பௌத்த மதத்தை மக்கள் மத்தியில் பரப்புவதற்காக அனாதிச் சமயமான சைவ சமயத்தை ஒழித்துக் கட்டுவதற்கு முற்பட வேண்டாம்"

(13-ம் பக்கம் பார்க்க)

## நாம் தமிழர் இயக்கத்துக்கு நிதி திரட்டப் படுகிறதாம்

"நாம் தமிழர் இயக்கத்தைப் பரப்புவதற்காகச் சில அரசாங்க ஊழியர்கள் பணம்திரட்டுகிறார்கள் என்ற குற்றச்சாட்டைப்பற்றி ஆராயுமாறு எல்லாத் திணைக்களங்களின் தலைவர்களும் கோரப்பட்டுள்ளனர்.

"விலை மதிப்புத் திணைக்களத்தில் தான் இதற்கான இரகசிய இயக்கம் இயங்குகிறது என்று கூறப்பட்டுள்ளது.

"நாம் தமிழர் இயக்கத்தைப் பரப்புவதற்காகச் சிங்களவர்களல்லாத அரசாங்க ஊழியர்கள் பிரசாரத்திலும், பணம் சேர்ப்பதிலும் ஈடுபட்டுள்ளனர் என்ற வதந்தியை அடுத்துத் திறைசேரி இந்த விசாரணை உத்தரவை அனுப்பி இருக்கிறது."

—இப்படியொரு செய்தியை 'சன்' ஆங்கிலஏடு 26-6-69ல்வெளியிட்டுள்ளது.

## தமிழ் காத்த நாவலர்



ஈழத்தில் சைவத்தையும் தமிழையும் அழிவிலிருந்து காத்த பெருந்தகை திருப்பெரு திரு ஆறுமுக நாவலர் அவர்களின் உருவச்சிலையின் ஒய்யாரத் தோற்றம் இது! இச்சிலையே இன்று நல்லூர்த் திருநகரில் நிறுவப்படுகிறது! (நாவலர் பெருவிழாச் சிறப்பிதழ் உள்ளே)

## ஜீ.ஜீ. மீது நீதியரசர் பாய்ச்சல்!

நாவலர் விழாவை அரசியல் மேடையாக்கி பிரச்சினைக்குரிய அரசியல் கருத்தை வெளியிட்ட திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தை நாவலர் சபைத் தலைவர் நீதியரசர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் பகிரங்கமாகக் கண்டித்தார். பொன்னம்பலம் தமக்கு கொடுக்கப்பட்டிருந்த வரம்பை மீறி அரசியல் பேசியதாக அவர் மீது பாய்ந்தார் நீதியரசர்.

இச்சம்பவம் பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் நடைபெற்ற நாவலர் சிலை வழியனுப்பு விழாவின்போது நடைபெற்றது.

இவ்விழாவில் பேசிய திரு. பொன்னம்பலம் யாழ்ப்

(13ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது தொடர்கதை

# அத்தியாயம் (24)

ஒரு சிலர் வாழ்க்கையில் அனுபவிப்பதற்கென்றே பிறக்கிருர்கள். இன்னும் ஒருசாரார் துன்பப்படுவதற்கென்றே பிறவி எடுக்கிருர்கள். இது அவரவர் அதிர்ஷ்டதைதப் பொறுத்தது. வேதாந்திகளிடங் கேட்டால் முன்வினைப்பயன் என்பார்கள்: ரகுவைப் பொறுத்தவரையில் அதுதான் தன்விதி என்ற முடிவுக்குத்தான் அவனால் வர முடிந்தது. தன்னைப்பற்றியோ தான் துன்பப்படுவதைப் பற்றியோ அவன் கவலைப்படவில்லை. தன்னுல் பிறிதொருவர் கஷ்டப்படுவதை அவனுல் பொறுக்க முடியவில்லை. உமாவைத் துன்புறுத்துவற்கென்றே தான் பிறந்திருப்பதாக நினைத்து நினைத்துக் கவலைப்பட்டான் உமாமட்டும் ஜெயநாதனுடன் இன்பமாக வாழ்க்கை

உமாவினது இந்தப் பேச்சில் இருந்து அவள் வாழ்ந்து வந்த நரக வாழ்க்கையை அவன் பூரணமாக உணர்ந்து கொண்டான். பவானியை ஜெயநாதனிடம் ஒப்புவித்த அடுத்த நிமிடத்தில் இருந்து உமாவின் பொறுப்பு தன்னுடையது எனத் தீர்மானித்துக் கொண்டான். அந்த நிலைவோடு அவன் பவானியையும் குழந்தையையும் அழைத்துக் கொண்டு வந்தான். அவன் கையில் இருந்த குழந்தை உமாவைக் கண்டதும் கெக்காளமிட்டுச் சிரிக்கத் தொடங்கியது. வா தங்கச்சி... இப்படி உட்கார்... வந்திருப்பதாக ரகு கூறவேயில்லை. உன்னை அழைத்து வரும்படி கூறியதன் பின்னர் தான் நீ வெளியில் காத்து நிற்பதாகக் கூறினுர். அது தான் உன்னை உடனடியாக அழைத்துக் கொள்ள முடியவில்லை என்னை மன்னித்து விடு என்று உமா சம்பந்தமில்லாமற் பேசியபோது பவானிக்கு எதுவுமே புரியவில்லை. ஏதோ படத்திற்கு அழைத்துப் போவதாகக் கூறி ஒரு வீட்டுக்குத் தன்னை அழைத்து வந்ததோடல்லாமல் ஏதோ சம்பந்தமில்லாத பேச்சுக்களையும் ஒரு பெண் மூலம் கேட்கவேண்டி வந்து விட்டதே என சிந்திக்கத் தொடங்கினுள். அவள் மனப் போராட்டத்தை அவள் முகம் பிரதிபலித்துக் காட்டியபோது அப்படி உட்கார் இருந்து மறைக்கப் பார்க்கிருர். இவர்களிடையே ஏதோ மர்மம் சூழ்ந்துள்ளது. அது என்னவாக இருக்கும் என பவானியின் உள்ளம் ஆராயத் தொடங்கியது. சற்று முன்பு ரகு அந்தப் பெண்ணை உமா என அழைத்தபோதே அவள் சந்தேகப்படவே செய்தாள். ஆரம்பத்தில் அவன் குழந்தையைத்தான் அழைக்கிருன் என்று எண்ணியவளுக்கு மிகுதிப் பேச்சும் முடிந்த பின்னர்தான் அவன் அந்தப் பெண்ணைத்தான் என்பதும் அந்தப்பெண்ணுக்கும் பெயர் உமாதான் என்பதும் தெரிய வந்தது.

அதற்குள் உள்ளே ஜெயநாதன் குளித்து விட்டுவரும் காலடி அரவங்கேட்டு உமா எழுந்து உள்ளே சென்ருள். அவள் போகும்போது குழந்தையைப் பவானியிடம் கொடுத்துவிட்டுச் சென்ருள் அவள் உள்ளே செல்லும் போது ரகுவைப் பார்த்துச் சென்ற பார்வையில் ரகுவும் ஏதோ புரிந்து கொண்டவன் போல் எழுந்து கடைக்குச் சென்று வருவதாகக் கூறி விட்டுத்தெருப்பக்கம் நடந்து சென்ருன். புதிய இடம்' புதிய ,சூழல் புதிய மனிதர் என்ற நிலையில் பவானி சிந்தித்துக் கொண்டிருந்த போது உள்ளேயிருந்து யாரோ இருமுங் குரல் கேட்டது. அந்தக் குரல் ஓர் ஆணுடையதாக இருக்கவே அது யாராக இருக்கும்என்று எண்

பவானி தன் கண்ணில் இருந்து நீர் ஆருகப் பாய விக்கி விக்கி அழத் தொடங்கினுள். அவள் அழுவதை கண்ட குழந்தையும் ஒன்றும் புரியாமல் கதறத் தொடங்கியது. அவர்கள் இருவரையும் ஆற்றுவதே ஜெயநாதனுக்குப் பெரும்பாடாகி விட்டது குழந்தையைத் தன் தோளில் போட்டுத்தட்டியபடி அவன் பவானியை ஆற்றினுன். 'நீங்கள் என்னை ஏமாற்றிவிட்டீர்கள் உங்களை நம்பி என் பெண்மையைப் பறிகொடுத்து விட்டு நான் பட்டபாடு என ஆரம்பித்து ரகுவைச் சந்தித்தது முதல் யாவற்றையும் ஒரு கதை போலக்கூறிவிட்டு இப்போது எங்களுக்கு என்ன முடிவு சொல்கிறீர்கள் என்பது போல் ஜெயநாதனைப் பார்த்தாள் பவானி.

அவள் கூறியவற்றையெல்லாம் பொறுமையுடன் கேட்ட ஜெயநாதன் யோசிக்கத் தொடங்கினுன். இனிமேல் பவானியைக் கைவிடுவது அழகல்ல என்பதை அவன் உணர்ந்தான் அத்துடன் அவளைப் பிரிந்து தன்னுல்வாழமுடியாது என்பதும் அவனுக்குப் புரிந்தது. அதனுல் அவன் அவளைப்பார்த்து அழாதே பவானி. சந்தர்ப்ப வசத்தால் உன்னைப் பிரிய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதே தவிர உன்னை நான் நினைக்காத நேரமோ நாளோ கிடையாது. என் உன்னைப் பற்றி அறிந்து கொள்வதற்கு எவ்வளவோ முயற்சி எடுத்தேன். என் முயற்சி எதுவித பலனும் அளிக்கவில்லை. கடைசியாக என் பெற்றோரைத் திருப்திப்படுத்தும் ஒரே நோக்கத்தை மனதில் வைத்து தற்போதைய என் மனைவியாக உமாவைக் கைப்பிடித்தேன். எனக்கு மாலையிடுவதற்கு முன் அவளும் யாரோ ஒருவனைக் காதலித்ததாகவும் அவளது பெற்ருேர் அதை எதிர்க்கவே அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக என்னை மணந்துகொண்டதாகவும் திருமணத்திற்கு முன்பே அறிந்துகொண்டேன். அது எனக்கு ஒரு நல்ல ஆயுதமாக அமைந்தது. என் குற்றத்தை அவளிடம் ஒப்புக்கொடுக்கும் திராணியற்று அவள் இழைத்த அந்தச் சின்னத் தவறை எனக்குச் சாதகமாக்கிக் கொண்டேன். அதனுல் அவள் வாழ்ந்தாள். நானும் வாழ்ந்தேன். இப்போது என் நிலை மிகவுந் தர்மசங்கடமாகிவிட்டது. நான் யாரை ஏற்பது யாரைத் துறப்பது என்று புரியாமல் தத்தளிக்கிறேன். பைத்தியம் பிடித்து விடுமோ என்றுகூடப் பயமாக இருக்கிறது. இரத்த வேகத்தில் உணர்ச்சிக்கு அடிமைப்பட்டு நாம் செய்த தவறு இந்தப் பச்சிளம் பாலகனை எங்கே பாதித்து விடுமோ என்று பயமாக இருக்கிறது. இதற்கு ஒரே

# எங்கே நீ போனாலும் அங்கே உன்னைதேடு!

நடத்திக் கொண்டிருந்திருந்தால பவானியை அவன நிட்சயம் அங்கு கூட்டி வந்திருக்கவேமாட்டான்: பவானியையும்ஜெயநாதனையும்இணைப்பதால் உமாவுக்கு விடுதலை கிடைக்கும் என அவன் நிட்சயமாக நம்பினுன். ஆயினும் அவளது எதிர்காலத்தை நினைத்தபோது அவனுல் சிந்திக்காமல் இருக்க முடியவில்லை. அவளுக்கு ஏதாவது வழிவகுத்துக் கொடுப்பது இனி தன் பொறுப்பு என்பதை உணர்ந்தான். யாருடைய நலனுக்காக அவன் தன் பிறந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டானே அந்த அவளுக்காகவே இனித் தன் வாழ்க்கையை அர்ப்பணிக்கப் போகிறேம் என்றுநினைத்தபோது அவன் மெய் சிலிர்த்தது.

உமாவுடன் பேசிக்கொண்டிருந்தபோது கடந்த இரவு அவளை விட்டு அவன் பிரிந்து சென்றபின் ஏதாவது அசம்பாவிதங்கள் நடை பெற்றதா என்று அவன் கேட்டதற்கு அவள் கொடுத்த பதில் அவளது உயர்ந்த பண்பையும் பொறுமையையும் எடுத்துக் காட்டியது. மதுவாடை அவர் உடலில் இருக்கும் வரைதான் அவர் மிருகமாக இருப்பார். அந்த நெடி அவர் உடலை விட்டு அகன்றதும் அவர் திரும்பவும் மனிதனுகி விடுவார். அதன்பின் எங்களுக்குள் எதுவிதமான சச்சரவுக்கும் இடமிருப்பதில்லை. கணவன் மனைவியென்ற உறவற்று ஏதோ சந்தர்ப்ப வசத்தால் இணைக்கப்பட்ட ஜோடிகள் என்ற அளவோடு பழகிக்கொள்வோம். பேசிக்கொள்வதற்குத்தான் சந்தர்ப்பமும் இடம் கொடுப்பதில்லையே. அவர் குளித்துச் சாப்பிட்டதும் அலுவலகம் புறப்பட்டால் திரும்பவும் வீடு வரும்போது மிருகமாகத்தான் வருவார். அவரிடம் அப்படியொரு பலயீனம். தன்மேல் நம்பிக்கையற்ற ஒருதாபம் ஏதோ ஊருக்கும் உலகத்திற்காகவும் நாங்களும் கணவன் மனைவியாக வாழ்க்கை நடத்துகிறேம்.

ந்து கொள் தங்கச்சி என்று ரகு பணித்தான். எங்கண்ணு கூட்டிவந்திருக்கிறீர்கள் என பவானி தன் ஆசையை அடக்க முடியாமல் கேட்டதற்கு நாம் வரவேண்டிய இடத்துக்குத்தான் வந்திருக்கிறேம் அம்மா...இனித்தான் படம் ஆரம்பமாகும் என்று கூறி விட்டுத் தனக்குள்ளாகவே சிரித்துக் கொண்டான்.

என்ன படமா...... யாருடைய படம் ரகு...? என்று உமா எழுப்பிய வினுவுக்கு இரவு நான் படம் பார்த்து விட்டுப் போகும் போது நன்ருகத் தாமதமாகிவிட்டது. எப்படியண்ணு படம் என்று கேட்டாள். அருமையான படந் தங்கச்சி கண்டிப்பாக நீயும் பார்க்க வேண்டிய ஒன்று. நாளைக் காலை விடிந்ததும உன்னை. அழைத்துப் போய்க்காட்டுகிறேன் என்று வாக்குக் கொடுத்தபடியே அழைத்தும் வந்துவிட்டேன். அதுதான் தங்கச்சிக்குச் சிறிது சந்தேகமாக இருக்கிறது என்று கூறிவிட்டுக் கண்ணைச் சிமிட்டினுன் ரகு. அப்போ உங்கள் தங்கைக்குப் படத்தின்கதையே தெரியாது போல இருக்கு என்று அவன் சிமிட்டலைப் புரிந்துகொண்டு உமா கேட்டதற்கு கதை மட்டுமல்ல உமா கதையில் வரும் பாத்திரங்களே அவளுக்குத் தெரியாது என்று மிகுதியையும் கூறி முடித்தான் ரகு.

ரகுவிடம் இருந்த குழந்தையை வாங்கிக் கொண்ட உமா அவளைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்தாள். அந்தக் குழந்தை அப்படியே ஜெயநாதனையே உரித்து வைத்திருந்தது. குழந்தை அவன் அப்பாவையே உரித்து வைத்திருக்கிறன் என்று உமா கூற பவானி ஆச்சரியத்தோடு அவளைப் பார்த்தாள். குழந்தையின் அப்பாவா...? அப்படியானுல் இதுபடமாளிகை இல்லையா...? என் குழந்தையின் அப்பாவுக்கும் இந்தப் பெண்ணுக்கும் என்னதொடர்போ...? ராமு அண்ணு எதையோ என்னி...

ணியபடி பவானிகுழந்தையோடு கொஞ்சிக் கொண்டிருந்தாள். குழந்தை இடையிடையே அழுவதும் சிரிப்பதுமாக விளையாடிக் கொண்டிருந்தபோது காலடியரவங் கேட்டு பாவனி திரும்பினுள். அங்கு வந்த நபரைக் கண்டதும் அவள் கண்கள் விழித்தது விழித்தபடியே இருந்தன. அதில் ஆச்சரியங் கலந்திருந்ததா அல்லது அதிர்ச்சி நிறைந்திருந்ததா என்று எவராலும கூற முடியாது. சப்த நாடியும் ஒடுங்கியவளாய். பேசுந்திராணியற்று பவானி குழந்தையைக் கூட மறந்து அமர்ந்திருந்தாள் அவள் மடியில் இருந்த குழந்தை கீழே இறங்கத் தெண்டித்து தவறிக் கீழே விழுந்து' வீர்...! எனக் கதறி அழத் தொடங்கியது. பவானி தன் நினைவு பெற்றுக் குழந்தையை வாரி எடுக்க முயற்சித்தபோது குழந்தை ஏற்கனவே அங்கு வந்த நபரின் கையில் இருப்பதைக் கண்ணுற்று வெட்கித் தலை குனிந்து அவரையே பார்த்தபடி நின்ருள் 'நீ எப்படி இங்கு வந்தாய் பவானி...? இது... இது... நம்... நம்...? ஜெயநாதன் பேச முடியாமல் தத்தளித்த போது... ஆமாம்... இதுநம்மகுழந்தைதான்...பெயர் உமா... உமா...டேய் கண்ணு உமா... இதுதான் உன் அப்பாடா..... உன் அப்பா...என்று உணர்ச்சிப் பெருக்கால் வார்த்தை தடைப்படக் கூறிவிட்டு அவளையே மேலிருந்து கீழ்வரை பார்க்கத் தொடங்கினுன்' அவளது பார்வையைத் தாங்கிக் கொள்ள முடியாதவனுய் அவளைத் தன்னுடன் இறுகப் பற்றி அணைத்துக் கொண்டான். அவன், இருவரும் ஒருவரை யொருவர் கட்டித்தழுவியபடி தம்மை மறந்துநின்ற போது அந்தப் பிணைப்பின் இறுக்கத்தைத் தாங்க முடியாமல் குழந்தை கதறி அழத் தொடங்கியது அந்தக் குழந்தைமூலம் தங்கள் நிலையை உணர்ந்து கொண்டவர் ...

பெற்றேரின் அபிலாசையை நிறைவேற்றுவதற்காக நான் வேறு திருமணஞ் செய்து கொள்ளவேண்டி ஏற்பட்டது என்கரம்பற்றியவள் என்னைக் கணவனுகப் பெற்றதில் அடைந்த இன்பத்தை விடத் துன்பந்தான் அதிகமாக இருக்கும். ஆமாம்! பவானி அவளை நான் மிகவுங் கொடுமைப் படுத்திவிட்டேன் அவளாக இருந்தால் நான்இழைத்தஅத்தனை தீங்குகளையும் அநீதிகளையும் பெரிய மனத்தோடு பொறுத்துக் கொண்டாள் நான் இழைத்த மிருகத் தனங்களை எல்லாம் நீயாக இருந்தாற் கூடப் பொறுத்திருக்க மாட்டாய் அத்தனை கொடூரமாக நான் நடந்து கொண்டேன் மிருகத்தை விடக் கேவலமாக நடமாடினேன். என்னை மனிதனுகப் பார்க்க விரும்புபவர்கள் காலையில் இருந்து மாலை வீடு திரும்பும் வரைதான் அப்படி

யொரு நல்ல வழி உங்கள் இருவரையும் விட்டு நிரந்தரமாக நான் எங்காவது கண்காணுத தேசத்திற்குப் போவதுதான். அது ஒன்று தான் எங்கள் பிரச்சினைக்கு ஓர் தீர்வு காணமுடியும்.

"வேண்டாம்... அப்படியெல்லாம் நீங்கள் ஒன்றுஞ் செய்துவிடாதீர்கள்... உங்களைப் பார்த்ததே எனக்குப் போதும். என் குழந்தையின் அப்பா எங்காவது சுகமாகச் சீவிக்கிருர் என அறிந்தால் அதுவே எனக்கு ஒரு மகிழ்ச்சி. அதனுல் குழந்தை உமாவை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். நான் உங்கள் பாதையில் இருந்து விலகி விடுகிறேன். விலகியே விடுகிறேன். எந்தப் பொருளை எங்கே சேர்க்கவேண்டுமோ அங்கே சேர்த்துவிட்டேன். இத்துடன் என் கடமையும் முடிந்துவிட்டது நான் வருகிறேன்." ஜெயநாதனுக்கு

## பா. பாலேஸ்வரி

யான ஒரு தன்மையை என்னிடம் எதிர் பார்க்கலாம் வீடு திரும்பும்போதே நான் மதுப்புட்டிகளிடம் என்னை ஒப்படைத்து விடுவேன். உமாவைக் கைப்பிடித்தநாள் முதலாகஇதேவழக்கந்தான். அவளிடம் என் பலயீனத்தை வெளிப்படுத்தி விடுவேனே என்ற பயந்தான் என்னை இவ்வளவு கேவலமாகமாறவைத்தது. உமா ஒரு தெய்வம் போன்றவள்...அவள் காட்டிய ... நான் அடிமைப் பட்டால அங்கே உன்னை மறந்து விடுவேனே என்ற எண்ணம் என்னை அச்சுறுத்திற்று. உனக்கு நான் இழைத்த துரோகம் என்னை நாளாந்தம் அணுஅணுவாகச் சித்திரவதை செய்தது.

அந்த வதைப்பில் இருந்து என்னை மீட்டுக் கொள்ள முடியாமால் நான் ஒரு குடிகாரனுக மாறினேன்.

தன் உணர்ச்சியெல்லாம் சேர்த்துப் பதிலளித்துவிட்டுப் போகத் திரும்பிய பவானியை...

'நில் பவானி' என்ற அதிகாரக்குரல் நிறுத்திவைத்தது அவள அதிர்ச்சியோடு எதிர்ப்பக்கந் திரும்பிய போது அங்கே கையில் ஒரு சிறியதோற் பெட்டியுடன அவர்கள் முன்னே உமா நின்றுகொண்டிருந்தாள். 'உங்கள் சம்பாஷணை முழுவதையும் நான் உட்புறமிருந்து கேட்டுக்கொண்டு தான இருந்தேன். ஒட்டுக் கேட்பது அழகல்ல என்பது தெரிந்தும் அப்படியொரு இழிசெயலைச் செய்ததற்காக என்னை மன்னித்துவிடுங்கள். நீங்கள் இருவரும் உங்கள் பங்குகளைப் பேசி முடித்து விட்டீர்கள. அதே நேரத்தில் உங்கள் இருவருடனும் சம்

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ் காங்கிரசுக்குள் நடைபெறும் தேர்தல் தில்லுமுல்லுகள்!

'ஆனந்த சங்கரி முதுகில் குத்திவிட்டார்' —இப்படி கிளிநொச்சியில் திரு. சிவசுந்தரம் கூறித் திரிகிறாராம்.

அண்மையில் தனிப்பெருந் தலைவர் கிளிநொச்சித் தொகுதியிக்கு சென்ற போது சிவசுந்தரத்தைச் சந்தித்து அவரது மனத்தை திருப்ப எடுத்த முயற்சிகள் தோற்றுவிட்டனவாம்.

பொதுத் தேர்தலில் கிளிநொச்சித் தொகுதியை திரு. சிவசுந்தரத்துக்கு விட்டுக் கொடுத்து தான் ஒதுங்கிக் கொள்வதென்றும் பட்டினசபைத் தலைவராக திரு. ஆனந்தசங்கரி வருவதற்கு சிவசுந்தரம் உதவ வேண்டுமென்றும் ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்ததாம்.

இந்த ஒப்பந்தத்தை மீறி திரு. அனந்தசங்கரி கிளிநொச்சியில் தமிழ்காங்கிரஸ் சார்பில் போட்டியிட முடிவு செய்துள்ளதால், அவர் முதுகில் குத்தி விட்டதாக சிவசுந்தரம் சொல்லித் திரிகிறாராம்.

தேர்தலில் சுயேச்சையாக ஆனந்தசங்கரியை எதிர்த்து போட்டியிடுவதற்கும் சிவசுந்தரம் முடிவு செய்து இப்பொழுது ஆதரவு திரட்டி வருகிறாராம்.

அண்மையில் பூனகரியில் நடந்த தமிழ் காங்கிரஸ் ஆலோசனைக் கூட்டத்துக்கு திரு. சிவசுந்தரத்தைக் கொண்டுவர திரு. பொன்னம்பலமும் ஆனந்தசங்கரியும் எடுத்த முயற்சிகள் எதுவும் பலிக்கவில்லையாம்.

திரு. சிவசுந்தரத்தை அழைத்துவரும்படி கிளிநொச்சிப் பட்டினசபை உறுப்பினரும் காங்கிரஸ் — கம்யூனிஸ்ட் ஆதரவாளருமான கனகராசா என்பவரை காருடன் தனிப்பெருந் தலைவர் அனுப்பிவைத்தாராம்.

அவரை திரு. சிவசுந்தரம் திருப்பி உடனே அனுப்பிவிட்டதுடன் கண்டிப்பாக வர முடியாது என்று அறிவித்து விட்டாராம்.

இதன் பின்னர் திரு. பொன்னம்பலமே சிவசுந்தரம் வீட்டுக்கு நேரில் சென்று அவரை கூட்டத்துக்கு வரும்படி கெஞ்சினாராம். அதற்கும் சிவசுந்தரம் மசியவில்லையாம்.

மறுபடியும் இரவு உணவுக்கு சிவசுந்தரம்வீட்டுக்கே சென்று 'சமாதானம்' பிடிக்க பொன்னம்பலம் பகீரதப்பிரயத்தனம் செய்தாராம். எதுவும் சரிப்போகவில்லையாம். தாம் தேர்தலில் போட்டியிடுவது என்ற முடிவை சிவசுந்தரம் மாற்ற முடியாது என்று அறிவித்துவிட்டாராம்.

திரு. வி. என். நவரத்தினம் அடுத்த பொதுத் தேர்லில் போட்டியிட மாட்டாரென்ற நம்பிக்கையிலேயே சாவகச்சேரியில் போட்டியிட அடுப்படி முன்னணியார் துணிந்தாராம்.

இப்போது திரு. நவரத்தினம் போட்டியிடப் போவதாக அறிவித்திருப்பதால் குமாரசாமிக்கு கிலி பிடித்துவிட்டதாம்.

இதனால் கிளிநொச்சித் தொகுதியில் போட்டியிட இப்போது ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறாராம்.

இந்த நப்பாசை ஏற்பட்டதற்கு மற்றொரு காரணம் பண்டிதர் இரத்தினம் ஊர்காவற்றுறைத் தொகுதிக்கு செல்ல இருப்பதாம்.

அடுப்படி முன்னணியார் கிளிநொச்சியில் கண்போட ஆரம்பித்ததும் ஆனந்தசங்கரி இப்போது தனது 'போகரை' அவருடன் திருப்பிவிட்டுள்ளாராம்.

தமிழ் காங்கிரஸ் தம்மை நிறுத்தாவிட்டால், தாம் சுயேச்சையாகவேனும் போட்டியிடப் போவதாக குமாரசாமியார் கூறித்திரிகிறாராம்.

பொன்னம்பலத்துக்கு இது பெரிய தலையிடியாக உள்ளதாம்.

ஆனந்தசங்கரியை கோப்பாய்த் தொகுதியில் நிறுத்த பொன்னம்பலம் தெரிவித்த ஆலோசனையை பிரக்கிராசி குணரத்தினம் முழுமூச்சுடன் எதிர்க்கிறாராம்.

கோப்பாய்த் தொகுதியில் தம்மையே நிறுத்தவேண்டுமென பிரக்கிராசி குணரத்தினம் பிடிவாதமாக நிற்கிறாராம்.

இதனால் ஆனந்தசங்கரியை மன்னார்த் தொகுதியில் நிறுத்த பொன்னம்பலம் ஆலோசிக்கிறாராம்.

ஆனால் மன்னாரில் போட்டியிட ஆனந்தசங்கரிக்கு இஷ்டமில்லையாம். இது தமக்கு குழிபறிக்கும் வேலையென நண்பர்களிடம் கூறித்திரிகிறாராம்.

இதே போல பருத்தித்துறைத் தொகுதியிலும் நடராசாவா மோதிலால் நேருவா என்பதில் 'பிச்சுப்பிடுங்கல்' அதிகரித்துள்ளதாம்.

உடுப்பிட்டித் தொகுதியில் கரவெட்டியைச் சேர்ந்த குமாரசாமி என்பவர் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போட்டியிட இருப்பது சிவசிதம்பரத்தின் கவலையை இரட்டிப்பாக்கியுள்ளதாம்.

வட்டுக்கோட்டைத் தொகுதியிலும் திரு. அமிர்தலிங்கத்துடன் போட்டியிட நிறுத்துவதற்கு ஆள்பிடிக்க முடியாமல் தமிழ் காங்கிரசார் அலைகிறார்களாம்.

---

## இலக்கிய உலகு
### -"வேதாளம்"-

இலங்கையிலுள்ள எழுத்தாளர்கள் சிலர் எம்மைவிட இலக்கிய சிருஷ்டி கர்த்தாக்கள் வேறு யார் இருக்கிறார்கள் என்று ஒருவகை 'மமதையுடன்' 'வீரம் பேசி' வருகிறார்கள் என்பது பலருக்குத் தெரியும். இலங்கை எழுத்தாளர்கள் 30 ஆண்டுகள் பின்னோக்கி நிற்கிறார்கள் என்று, இலங்கைக்கு வந்திருந்த பகீரதன் கூறிவிட்டாரென்று அவருடன் "போர்" தொடுத்தோம். ஆனால் இப்போது இலங்கை 'எழுத்தோவியங்களை' தாங்கி சென்னையிலிருந்து வெளியிடப்பட்டுள்ள, அக்கரை இலக்கியம்' எனும் நூலுக்கு ஒரு தமிழ் நாட்டுத் தமிழ்த்திசை சரி எழுதியிருக்கும் விமரிசனத்தை படிக்கும்போது பகீரதன் கூட எவ்வளவோ தேவையில்லையென்று கருத வேண்டியிருக்கிறது. இலங்கை எழுத்தாளர்களின் சிறுகதை அனைத்தும் வெறும் 'ஸ்கெட்ச்' என்று முகத்திலறைந்தாற் போல வர்ணித்திருக்கிறது அப்பத்திரிகை. இதோ படித்துப் பாருங்கள் அந்தவிமரிசனத்தை!:—

## சிறுகதைகளல்லவாம்: 'ஸ்கெட்ச்' தானும்!

'இலங்கைக் கதைகளும் கவிதைகளும் கட்டுரைகளுமாக இருபத்தேழையும், இதே போன்று மலேசிய படைப்புக்கள் இருபத்தொன்றையும் கொண்ட புத்தகம் இது:

இலங்கை முதல் கதை, இலங்கைத் தமிழர்களுக்கு விளங்கும் மொழியாக இருக்கலாம். ஆனால் தமிழ் நாட்டுத் தமிழனுக்கு விளங்குமோ என்னவோ?

அடுத்தபடி கதைகளைப் பற்றி இதில் கதைகள் என்று இருப்பவைகள் எல்லாமே வெறும் 'ஸ்கெட்ச்கள்' (sketch) தாம்.

பல கதைகள் தொடங்கும்போது ஏதாவது இருக்கும் என்று நினைக்கத் தோன்றி போகப் போகப் பிசுபிசுத்துப் போகின்றன.

'சங்கங்கள்' என்ற கட்டுரை தமிழ் வளர்ச்சிக்காக இலங்கையில் நடந்த பல்வேறுமுயற்சிகள் அதற்காக அமைந்த பல்வேறு சங்கங்கள்—இவற்றைப் பற்றி சற்று விரிவான 'கேட்லாக' தமிழ் வளர்ச்சிக்கு பாடுபடுபவர்கள் இலங்கையில் இருக்கிறார்கள் என்பதை தெரிந்துகொள்ள வேண்டுமானால் இது பயன்படும்.

'இந்தப் புத்தகத்தை படிப்பதால் இலங்கைத் தமிழன் வாழ்க்கை, எளியவர், செல்வர், தோட்ட வேலையாள் கங்காணி செய்திகள் சிலவற்றை வேண்டுமானால் நாம் அறிந்துகொள்ளலாம'

●

## சபாஷ் 'சிற்பி'

இலங்கை எழுத்தாளர் ஒருவருக்கு சென்னை வாசகர் வட்டப் பரிசொன்று கிடைத்திருக்கிறது. இந்தப் பரிசைப் பெற்று நமது விமரிசனக்காரர்களுக்கு பெருமைதேடி தந்திருப்பவர் கலைச்செல்வி ஆசிரியரான திரு. சி. சரவணபவன் (சிற்பி) அவர்களே.

சென்னை வாசகர் வட்டம் ஆறு குறுநாவல்களைக் கொண்ட 'அறுசுவை' எனும் தொகுதியொன்றை வெளியிட்டு, அத்தொகுதி பற்றி விமரிசனப் போட்டியொன்றையும் நடத்தி இவ்விமரிசனப் போட்டியில் கலந்துகொண்டு முதலாவது பரிசை சென்னைவாசகர் வட்டத்திலிருந்து தட்டிக் கொண்டிருக்கிறார் சிற்பி. அவருக்கு வேதாளத்தின் வாழ்த்துகள்.

●

ஈழத்து சிறுகதையுலகில் தனி இடம் வகித்து பலதரமான நல்ல சிறு கதைகளை எழுதி 'கல்கி' நடாத்திய சிறுதைப் போட்டியில்பரிசு பெற்ற காலஞ்சென்ற எழுத்தாளர் தாழையடி சபாரத்தினத்தின் [illegible] சிறுகதைத் தொகுதியை வெளியிடுகிறார் அவரது மனைவியான திருமதி மீனு சரபாத்தினம்!

தன் கணவரின் நினைவாக அவரது லட்சியக் கனவுகளை, அவர் மறைந்தாலும், அவரது நினைவு மறையவிடாது நிலைத்து நிற்க கஷ்டங்களுக்கு மத்தியில் 'தாழையடி' எழுதிய 21 சிறுகதைகளை இரண்டாயிரம் ரூபாய் செலவில், தயாரித்து இம்மாதம் 28ம் திகதி வெளியிட்டு வைக்கிறார்.

வெளியீட்டுவிழா திருநெல்வேலி இந்து இளைஞர் கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

---

## குடியேற்ற அபிவிருத்திச் சங்கம்

மட்டுநகர் 12ம் வட்டாரத்தை சேர்ந்த மக்களால் குடியேற்ற வாசிகளின் நலன் கருதி கு. அ. சங்கம் என்னும் பெயரில் ஓர் சங்கம் உதயமாக்கப்பட்டுள்ளது. அதன் நிர்வாகிகளாக பின்வருவோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். திரு. க. நடராசா, உபதலைவர் ஆர். அவுஸ்கோன் செயலாளராக திரு. ஞா. சவரிமுத்து, உபசெயலாளராக திரு. நா. நடராசா, பொருளாளராக திரு. பொ. கர்தையா, உபபொருளாளராக எஸ். எம். ஆசீர்வாதம் அவர்களும் செயற்குழு உறுப்பினர்களாக திருவாளர்கள், கு. இஞ்ஞசி, (மா. ந. உ. மட/பே. செபமாலை, எஸ் அந்தோனி ஏ. சிறில், ஜனுப் எம், எஸ் ஹமீட், திருமதிகள் ஞா. மேரி கிளேரு, ஜே. சிவமரணி, ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.


உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஸல்'

போலிகளை வாங்கி ஏமாறுதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## அழிவுக்குமுன் அகந்தை

இந்நாட்டில் தமிழ் பேசும் இனத்தை முற்ருக அழித் தொழித்து சர்வ சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்தை கட்டியெழுப்ப முயன்று வரும் இனவெறிச் சக்திகள் இன்று தமிழ் பேசும் மக்களின் — குறிப்பாக இந்துப் பெருமக்களின் மத வழிபாட்டு உரிமையிலும் கைவைக் கத் துணிந்து விட்டனர். கதிர்காமத்தில் நடைபெற்ற, அராஜக சம்பவங்கள் இதைத்தான் உணர்த்துகின்றன. ஆம் சிறுபான்மை மக்களுக்கு எதிராக மொழி வெறிக்குப்பின் மத வெறி கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது.

கதிர்காமம் உச்சிமலையிலுள்ள முருகன் ஆலயம் இந் துக்களின் ஆதிக்கத்திலுள்ள பழம் பெரும் ஆலயமாகும். ஆண்டாண்டுகாலமாக இந்துக்களின் வணக்கஸ்தலமாக இருந்து வரும் இந்த ஆலயத்தை பலாத்காரமாக கைப் பற்றுவதற்கு பௌத்த பிக்கு ஒருவரும், மற்றும். சில பௌத்த வெறியர்களும் முயன்றதாக கூறப்படும் சம்ப வத்தை சாதாரணமானதென்று சைவமக்கள் அலட்சி யம் செய்து விட முடியாது.

இன்று கதிர்காமத்தில் நடைபெற்றது போன்ற சம்ப வங்கள் நாளை கோணேஸ்வரம், திருக்கேதீச்சரம், முனீச் சரம் போன்ற ஏனைய இந்து ஆலயங்களிலும் நடைபெற மாட்டாதென்று கூறிவிட முடியாது.

ஏனெனில் இந்நாட்டில் பௌத்த மதமும் சிங்கள மொழியும் மட்டுமே இருக்கவேண்டும்—ஏனைய மொழி, இனம், மதம் அத்தனையும் அழிக்கப்படவேண்டும் என்ற நச்சுக் கருத்தினை சிங்கள பௌத்த வெறியர்களும் பௌத்த பிக்குகளும் தீவிரமாகப் பரப்பி வருகிறார்கள். பௌத்த மதஸ்தாபனங்களும் இந்து மதத்துக் கெதிரான வெறியுணர்வை திட்டமிட்டு வளர்த்து வருகின்றன.

கோணேஸ்வர ஆலயத்தை இந்துக்களின் புனித நக ராக பிரகடனப்படுத்துவதை எதிர்த்துவருவதும், கோணேஸ்வர ஆலயம் இருக்கும் இடத்தில் பௌத்த விகாரை இருந்ததாகவும் அதை இடித்துவிட்டே சைவ ஆலயம் கட்டப்பட்டதாகவும் வரலாற்றுக்கு முரண்பட்டு பொய்ப் பிரச்சாரம் நடத்தி வருவதும் இந்த பௌத்த ஸ்தாபனங்களும் பௌத்த பிக்குகளும்தான். இந்துக்க ளின் மத உரிமையை அபகரிப்பதற்காக இத்தனை பொய்ப் பிரசாரத்திலிறங்கியுள்ளனர்.

இந்துக்களுக்கு எதிராக வளர்க்கப்பட்டுவரும் இந்த வெறியுணர்வின் ஒரு பகுதிதான் கதிரமலை இந்துக் கோவி லுக்கு எதிரான வன்முறைச் சம்பவமாக உருவெடுத்திருக் கிறது.

கதிர்காமச் சம்பவங்கள் குறித்து அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகளைப் பாராட்டுகிறோம். அதேவேளையில் அரசாங்கத்துக்கு ஒன்று கூறிவைக்க விரும்புகிறோம்.

தமிழினத்துக்கு எதிராக இந்நாட்டில் சிங்கள தீவிர வாதிகள் நடத்திவரும் வகுப்புவாதப் பிரச்சாரங் களைக்கட்டுப்படுத்தி—இனவெறியை எண்ணெயூற்றிவளர்ப் பவர்களை கண்டுபிடித்து தயவு தாட்சண்யமின்றி கடு மையாகத் தண்டித்தாலொழிய இத்தகைய சம்பவங்கள் தலை தூக்குவதை தடுத்துவிட முடியாது வாய்ப் பேச் சால் தேசிய ஒற்றுமை ஒரு போதும்தோன்றிவிடாது.

ஆனால் அரசாங்கமே முன்னின்று வடக்கே பௌத்த பாடசாலைகளை பொறுப்பேற்று சைவமக்களில் ஒரு பகுதி யினரை பௌத்தர்களாக்கி அவர்களைப்படிப்படியாக சிங் களவர்களாக்க மறைமுகமாக சூழ்ச்சி செய்து வருகிறது. வடக்கே புதிய பௌத்த சிங்களப் பாடசாலைகளை நிறுவ ஆலோசித்து வருவதாக கல்வியமைச்சர் திமிர்த்தனமாக கடந்த வாரம் அறிவித்துள்ளார். இந்நிலையில் பௌத்த சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் மத இன உரி மைகளைப் பாதுகாப்பார்கள் என்று எதிர்பார்ப்பது இலவு காத்த கிளியின் நிலையிற் தான் போய் முடியும்: போய் முடிந்திருக்கிறது

தமிழரசுக்கட்சி அரசாங்கத்துடனிருந்தவரை தமிழ்ப் பிரதேசத்தில் சிங்களவர்களைக் குடியேற்ற அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்த ஆட்சியாளர்கள், இன்று மீண்டும் திட்ட மிட்ட சிங்களக் குடியேற்றத்திலிறங்கி விட்டனர். அவர் களது முதல் இலக்கிற்கு வவுனியா மாவட்டத்திலுள்ள முத்தையன் கட்டு குடியேற்றத்திட்டம் இரையாகி வருகி றது. இக்குடியேற்றத்திட்டத்தில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த சிங்களவர்களுக்கு காணி வழங்கப் படுகிறது. விவசாயப்படையில் சிங்கள வாலிபர்கள் பெருந்தொகை யாக நிரப்பப்பட்டுவருகிறார்கள்.

தமிழ்ப்பகுதி விவசாயப்படைக்கு தமிழ் வாலிபர் களே சேர்க்கப்படுவார்கள் என்றும், குடியேற்றத்திட் டங்களில் உள்ளூர் வாசிகளுக்கே இடமளிக்கப்படுமென் றும் அளித்திருந்த உறுதிமொழியை ஆட்சியாளர் இன்று மீறிவிட்டனர்.

வாக்குதிறுதிகளை மீறுவதையே 'பாஷனாகக்' கொண்டு விட்ட டட்லி அரசாங்கம் இந்த வாக்குறுதிகளை மீறி யது பற்றி நாம் கொஞ்சம் கூட ஆச்சரியப்படவில்லை.

தமிழ்பேசும் மக்களுக்கு நீதி வழங்குவோம் என்ற வாக் குறுதியுடன் தமிழ்பேசும் பிரதிநிதிகளின் ஆதரவுடன் ஆட்சி பீடத்தை கைப்பற்றிய யூ. என். பி. இன்று தமிழினத்தை ஒழித்துக்கட்ட திட்டமிட்டு செயலாற்றி வருகிறது. புதிய பௌத்த சிங்களப்பாடசாலைகளை வடக்கே நிறுவுவேன் என்று மமதைபிடித்து அரற்றுகிறார் கல்வியமைச்சர்,

'அழிவுக்குமுன் அகந்தை என்பது பெரியோர் வாக்கு. அழிவின் விளிம்பில் நிற்பவர்கள் அகந்தை பிடித்து அரற்றுவது வழக்கம். யூ. என். பி. ஆட்சிக் கும் சிங்களபௌத்த வெறியர்களுக்கும் அகந்தை பிடித்து தமிழினத்தை ஒழித்துக்கட்ட எடுக்கும் நடவ டிக்கைகளைக் காணும்போது இவர்களுக்கு அழிவுகாலம் நெருங்கி வருகிறதென்றே கருதுகிறோம். தர்ம நியாயத்தைமீறி அதர்மப்பாதையில் போக முனைபவர் கள் அழிந்து போவதுதிண்ணம். சிங்கள பௌத்த வெறியர்களும் யூ. என். பியும் இதற்கு விதிவிலக்காக இருக்கமுடியாது.

சிங்கள ஏகாதிபத்தியத்தாலும் தென்னிலங்கை யிலுள்ள தீவிர பௌத்த வெறியர்களாலும் தமிழ் இனத்துக்கும் மொழிக்கும் மதத்துக்கும் வந்துள்ள பயங் கர ஆபத்தை தடுத்து நிறுத்த தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் ஒரேயொரு மார்க்கம்தான் உண்டு. தமி ழரசுக் கட்சியின் கீழ் ஓரணியாக ஒன்று திரண்டு தங் கள் [illegible] ஒலிப்பதுதான் அந்த ஒரே மார்க்கமாகும் என்பதை இங்கு அழுத்தமாக வலி யுறுத்த விரும்புகிறோம்

# பண்டிதர் மீது களங்கம் கற்பிக்க 'தினபதி' பத்திரிகை நடத்திய ஈனத்தனமான சூழ்ச்சி!

நாவலர் பெருமான் சிலையில் 'ஸ்ரீலஸ்ரீ' எனும் வடமொழிச் சொல இடம் பெறுவது தமிழ் மரபுக்கு இழுக்கு என்றும் அதற் கேற்ற தமிழ்ச் சொல்லே சிலையில் இடம்பெற வேண் டும் என்றும் இதுபற்றி நாவ லர் சபையினர் சிந்திக்க வேண்டும் என்றும் சுதந் திரன் சில வாரங்களுக்கு முன்னர் தோழமையுணர் வுடன் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தது.

இந்த வேண்டுகோளை நாம் உள்ளத் தூய்மையுடன் நல்ல நோக்கத்துடன் வெளியிட் டோமே தவிர குதர்க்கம் ஏற் படுத்துவதோ குழப்பத்தை மூட்டுவதோ நமது நோக்க மாக இருக்கவில்லை. ஸ்ரீலஸ்ரீ யைப் பொறித்தால் அதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்ய வேண்டுமென நாம் யாரை யும் தூண்டிவிடவுமில்லை.

என்ன காரணத்தாலோ நாவலர் சபையினரால் நமது கோரிக்கைஏற்கப்படவில்லை. இதனால் எமக்கு எந்தவிதத் தோல்வியும் ஏற்பட்டதாக நாம் கருதவில்லை. இப்பிரச் சினையில் யாருக்காவது தோல்வி ஏற்பட்டுள்ள தென்று கருதப்படவேண்டு மானால் அது தமிழின் தூய் மைக்கும், தனித்தியங்கும் ஆற்றலுக்கும் ஏற்பட்ட ஒரு தோல்வியென்றே கூறவேண் டும்.

ஆனால் இந்த ஒரே கார ணத்துக்காக நாவலருக்கு சிலை வடித்து பெரு விழா வெடுக்கும் நாவலர்சபை யினரை நாம் கண்டிக்க முற்படமாட்டோம். அவர் களது அயராத சேவையை —தொண்டை— நாம் இத யம் நிறைந்த மகிழ்ச்சி யுடன் பாராட்டி வாழ்த்துகிறோம். நாவலர் சபை முன்வந்ததால்தான் இன்று நாவலருக்கு சிலை எடுத்து பெருவிழா நடை பெறுகிறது. நாவலர் பெருவிழா சிறப்புற நடை பெற நம்முடைய நல்லா தரவை அளிக்கிறோம்.

இதே வேளையில் 'தினபதி' என்னும் தமிழர் விரோத ஏடு, நாவலர் விழாவின் போது 'ஸ்ரீலஸ்ரீ' யை ஒரு பெரிய பிரச்சினையாக்கி நாவ லர் விழாவுக்கு கல்லெறிய முயற்சி செய்ததை நாட்டு மக்கள் அறிவார்கள்.

அண்ணவைப்பற்றி பண்டி தர் கா. பொ. இரத்தினம் கூறியதாக முன்பு பொய்ச் செய்தி யொன்றை வெளி யிட்டு பண்டிதருக்குகளங்கம் கற்பிக்க முயன்ற 'தினபதி' ஸ்ரீலஸ்ரீ பிரச்சினையிலும் தேவையற்ற முறையில் பண் டிதரை இழுத்து விட்டு பொய்ச் செய்தி வெளியிட்டி ருக்கிறது. பண்டிதர் தலைமை யில் ஸ்ரீலஸ்ரீயை எதிர்த்து சத்தியாக்கிரகம் நடை பெறப் போவதாக முழுப் பொய்ச் செய்திகளை வெளி யிட்டு பண்டிதர் மீது தப் பெண்ணத்தை வளர்க்க முயன்றிருக்கிறது.

நாவலர் பெருவிழாவை குழப்பி விடும் நோக்கத்து டன் ஸ்ரீலஸ்ரீயை சிக்க லான பிரச்சினையாக்கி பொய்ச் செய்திகள் வெளி யிட்ட தினபதியின் கேடு கெட்ட போக்கை நாவலர் சபையினரும் பொதுமக்க ளும் புரிந்து கொண்டிருப் பார்கள் என்று நம்புகி றோம்.

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

தினபதியின் முகமூடியைக் கிழித்தெறிந்து பண்டிதர் கா. பொ. இ. பத்திரிகை களுக்கு எழுதியுள்ள கடிதத் தையும் கீழே தருகிறோம்.

### பண்டிதர் அறிக்கை

'ஸ்ரீலஸ்ரீயை' நாவலர் சிலையில் பொறித்திருப்பதை நான் எதிர்ப்பதாகவும் எனது தலைமையில் சத்தி யாக்கிரகம் செய்யப் போவ தாகவும் வெளிவந்த செய்தி கள் பொய்யானவையென் றும், எனக்கும் இந்தச் செய்தி களுக்கும் எவ்வித தொடர்புமில்லை என்றும் பத்திரிகைகளுக்கு நான் ஓர் அறிக்கையினை வெளியிட்டி ருநதேன். இந்த அறிக்கை யினை நான் தினபதிக்கு அனுப்பவில்லை. தினபதி வேண்டுமென்றே எனக்கு மாமுகப் பல பொய்ச் செய்திகளை வெளியிடுவதால் நான் அப்பத்திரிகையுடன் தொடர்பு கொள்வதில்லை. அதன்மேலவழக்குத் தொடர வழக்கறிஞர் மூலம் அறிவித் தலும் கொடுக்கப்பட்டுள் ளது.

எனது அறிக்கைக்கு வீர கேசரி கொடுத்த "ஸ்ரீலஸ்ரீ க்கு எதிர்ப்பா?நானா? இல்லை, இல்லை!" என்ற தலைப்பினை எனது கருத்தா கக் காட்டிப் பத்திரிகைத் தர்மத்தை மீறி மக்களை மயக்க மீண்டும் தினபதி முற் பட்டுள்ளது. எனவே இந்த விளக்கத்தினை வெளியிட வேண்டியுள்ளது.

ஸ்ரீலஸ்ரீயை நான் ஏற்ப வனு அன்றேல் தனித்தமிழை விழைபவனு என்பதல்ல இப் போதுள்ள பிரச்சினை. நாவ லர் பெருமானின் சிலையில் ஸ்ரீலஸ்ரீயைப் பொறிப்பதை எதிர்ப்பதாகவும், சத்தியாக் கிரகம் செய்வதற்குத் தலைமை தாங்குவதாகவும் தினபதி வெளியிட்ட பச் சைப் பொய்ச் செய்திகளுக் கும், எனக்கும் தொடர் புண்டா என்பதும், எனக் குத்தெரியாமல் இப்பொய்ச் செய்திகளை வெளியிட்டவர் கள் யார் என்பதும், அவர்க ளின் நோக்கமென்ன என் பதுமே விடுவிக்கப்படவேண் டிய புதிர்களாகும்.

எனக்குத் தெரியாமல், என்னைக் கேளாமல்—, தின பதி ஆசிரியர் எனது பெய ரை வேண்டுமென்றே புகுத்தி இறந்துபோன தமிழ் எழுத்தாளர் மன்றத்தின கடித இதழைப் பயன்படுத் திப் பச்சைப் பொய்ச் செய் திகளை, அரசியலில் எனது விரோதிகளாகவிருக்கும் அவ ருடைய கையாட்கள் சில ரின் உதவியுடன் என்னைப் பழிவாங்குவதற்காகக் கொட்டை எழுத்துக்களில் எனது படத்துடன் வெளி யிட்டார். இநதத துரோகச் செயலை அன்பர்கள் சிலர் எனது கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

நாட்டுமக்கள் ஒன்றுபட்டு நாவலர் பெருமானைப் போற்றும் இந்த அரும் பெரும் பணியை நான் எதிர்ப்பதாகக் காட்டுவதற் குச் செய்யப்பட்ட இந்தச் சூழ்ச்சியை நான் எனது அறிக்கையில் தமிழ் மக்க ளின்கவனத்திற்குக் கொண்டு வந்தேன்.

தங்கள் சூழ்ச்சியும், துரோ கச் செயலும் வெளியான தால் மக்களின் வெறுப்பு வளர்வதைக் கண்டதும் "ஸ்ரீயும் திருவும்" எனும் தலைப்புடன் நான் பல ஆண் டுகட்கு முன் சுதந்திரனில் வெளியிட்ட கட்டுரைக்கு இப்பொழுது தினபதி ஆசிரி யர் வேறு தலைப்புக்கொடு த்து மறுபிரசுரம் செய்து 'விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்று போலி காரணம் காட்டி மக்களை மீண்டும் ஏமாற்ற முயல்வது இரக்கத்திற்குரியது.

மீண்டும் நான் கூறுகின் றேன்; பச்சையாகக் கூறு கின்றேன். "சத்தியாக்கிர கம்" "எதிர்ப்பு" என்ற செய்திகளில் எனது பெயரை எனக்குத் தெரியாமல் வேண்டுமென்றே தினபதி ஆசிரியர் பத்திரிகைத் தர் மத்தை மீறிப் புகுத்தி என் மீது வஞ்சந் தீர்க்க முற்பட் டார். இன்று அவருடைய துரோகச் செயல்களை நாட்டுமக்கள் நன்கறிந்து கொள்ளும் வாய்ப்பைய இப்பொய்ச் செய்திகளை வெளியிட்டு அவரே உண் டாக்கிக் கொண்டார்.

"அழுக்காறு உடையார்க்கு
அதுசாலும் ஒன்னர்
வழுக்கியுங் கேடீன் பது"
—தமிழ்மறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பெருந்திரு ஆறுமுகநாவலர் பெருவிழா சிறப்பிதழ்



நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழ் எங்கே? சுருதியெங்கே? —எல்லவரும்
ஏத்துபுராணாகமங்கள் எங்கே பிரசங்கமெங்கே
யாத்தனறிவெங்கே யறை?

## 93 ஆண்டுகளுக்கு முன் நாவலர் எழுதிய கடிதம்!

[மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் காலமான செய்தி அறிந்து அவர் குமாரர் சிதம்பரம் பிள்ளைக்கு ஆறுமுகநாவலர் அவர்கள் எழுதிய கடிதம்.]

உ
சிவமயம்

ஸ்ரீ சிதம்பரசபாநாயகர் திருவருளினாலே செல்வச் சிரஞ்சீவி சிதம்பரம்பிள்ளைக்கு சர்வாபீட்ட சித்தியெய்துக:

தாம் எழுதியனுப்பிய கடிதம் பெற்று வாசித்து சகிக்கலாற்றாத் துயருற்று யாக்கை நிலையாமையை நினைத்து ஒருவாறு தெளிந்தேன். தம்முடைய தந்தையாராகிய மகா ஸ்ரீ பிள்ளையவர்கள் தமிழ் வழங்கு நிலமெங்கும் உலகமழியுங்காறும் தங்கபுகழுடம்பை நிறுத்தி விட்டுச் சென்றமையே தமக்கு வாய்த்ததொரு பெரும் பாக்கியம். இன்னும் சில காலம் இருப்பார்களாயின் இன்னுஞ் சில நல்ல காரியங்கள் அவர்களாற் செய்யப்பட்டு விளங்கும். 'வினைதானொழிந்தாற்றினைப் போதளவு நில்லாது' என்னுந் திருவாக்கை நினைந்து, அவர்களருமையை அறிந்தோர் யாவருந் தங்கள் துக்கத்தலைதயாற்றிக்கொள்வதே தகுதி.

தாம், தம்முடைய தந்தையாரவர்களைப் பரிபாலித்து அவர்களது கீர்த்தியை வெளிப்படுத்தியருளிய பெருங்கருணை வெள்ளமாகிய திருவாவடுதுறை மகா சந்நிதானத்தின் திருவடிகளை மறவாத சிந்தையும், தம்முடைய தந்தையாரவர்களிடத்து மெய்யன்புடைய மாணாக்கர்களைச் சகோதரர்களாகவே கொண்டொழுகும் நேசமும் எவராலும் நன்கு மதித்தற் பாலதாகிய நல்லொழுக்கமும் உடையவராய் இனிது வாழ்ந்திருக்கும்படி திருவருள் சுரக்கும்படி பொருட்டு ஸ்ரீ சிதம்பர சபாநாயகர் திருவடியைப் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்,
ஆறுமுகநாவலர்.

யாழ்ப்பாணம்,
வண்ணார்பண்ணை,
யுவ ஷு மாசி.
மீ 19 உ (1876)


## நாவலரைப் பின்பற்றுவோம்

'அரியவற்றுள் எல்லாம்
அரிதே பெரியாரைப்
பேணித்தமராக்கொளல்'
என்பது தமிழ் மறை,

ஈழத் தமிழகம் கண்ட பெரியார்களுள் பெரியார் நாவலர் பெருமான். தம் உடல் பொருள் உயிரினைக் கொடுத்துத் தமிழையும் சைவத்தையும் வாழவைத்தவர் அவர். அவரை நம் சுற்றத்தவராக — தலைவராக— வழிகாட்டியாகக் கொள்ளல் வேண்டும் எனும் நோக்கத்துடன் முப்பதாண்டுகளுக்குமுன்' நாவலர் நினைவு மலர்' ஒன்றினைத் தொகுத்து வெளியிட்டேன். அன்று தொடக்கம் நாவலர் பெருமான் என் நெஞ்சை விட்டகலவில்லை.

பொதுப் பணிகளில் ஈடுபடுவர்களுக்கு ஆதரவுமட்டுமின்றி எதிர்ப்பும் காட்டப்படும். நாவலர் பெருமானுக்கு எதிராகச் செய்யப்பட்டவற்றையும் அவற்றை அவர் எவ்வாறு வென்றார் என்பதையும் நினைக்கநினைக்க எந்த எதிர்ப்புக்கும் ஈடு கொடுக்கும் ஆற்றல் பொதுப் பணியாளர்களுக்கு உண்டாகும். இஃது நான் அனுபவத்தினல்— நாவலர் பெருமானிடம் கொண்ட ஈடுபாட்டால் அறிந்து கொண்டதொன்று.

நாட்டுக்கு — மொழிக்கு— சமயத்துக்குத் தொண்டாற்றுபவர்கள் நாவலர் அடிச்சுவட்டைப் பின்பற்றினல் நற்றொண்டாற்றலாம். எனவே நாவலர் பெருமானின் நினைவை எல்லோர் உள்ளத்திலும் நிலைக்கச்செய்தல் நிலைசிறந்த தொண்டாகும்



பண்டிதர்
கா. பொ. இரத்தினம்
பா. உ.

நாவலர் பெருமானுக்குச் சிலை நிறுவி, இந்தத் தொண்டினை நிறைவேற்றியுளர் நம் மக்கள். இன்றுஎல்லோர் உள்ளத்திலும், உரையிலும்பெருமான் இடம் பெற்றுளார். இந்நிலைமை நாட்டுக்கு நன்மை விளைக்கும் என்பது உறுதி. நாவலர் பெருமானை எல்லோரும் நினைத்துப் பாராட்டி வாழ்த்தி வணங்கி வாழ வழிவகுத்த பெருமக்கள் அரிய வற்றுள் எல்லாம் அரியவற்றைச் செய்துளர். அவர்களுடைய தொண்டு ஈழ்க!

## தமிழினத்தின் தலைமகன்

(கோவை மகேசன்)

இன்று —
நாடெங்கும் விழாக் கோலம்!
ஊரெங்கும் மகர தோரணம்!
தமிழர் உள்ளமெலாம் பூரிப்பு!

ஆம், நம் மொழி, இனம், மதம், காத்த நாவலர் பெருமானுக்கு சிலைத்திறப்புவிழா இன்று!

ஆகவே, குதூகலத்துக்கும் கும்மாளத்துக்கும் குறைச்சல்தான் ஏது?

கொடியிடை மடவாரும், குழந்தைகளும், முதியோரும், இளைஞர்களும் களிப்புமிக்கூர கூடுகின்றனர் யாழ்நகரில் இன்று!

நாவலருக்குவிழா. நம்இனக் காவலருக்கு விழாவென்று பாடுகின்றனர்; ஆடுகின்றனர்.

இந்த மகிழ்ச்சியும்—குதூகலமும் இவ்வாரம் முழுவதுமே நீடிக்கும்!

நாவலர் இனத்துக்கும் மொழிக்கும் ஆற்றிய பணிக்கு இதுவரை சிலையெடுத்து அஞ்சலி செலுத்தத் தவறிவிட்டோம்!

தமிழாராய்ச்சி மாநாட்டின்போது தமிழ் நாடு அரசு தந்த அருட்டுணர்வால் இன்று நாவலர் பெருமானுக்கு இந்நாட்டில் சிலையமைந்து விட்டது!

தமிழாராய்ச்சி மாநாட்டின் போது நாவலர் சிலையும் நிறுவப்பட்டிருந்தால் ஈழத்தில் இன்று சிலையமைத்திருப்போமா என்ற கேள்வி சிந்தனைக்குரியது!

அங்கு நாவலர் புறக்கணிக்கப்பட்டதும் ஒருவகையில் நல்லதாகப் போய்விட்டது!

நாவலரை தமிழ் நாடு புறக்கணித்து விட்டதே என்ற 'ரோச' உணர்வு தீபிறிட்டெழுந்ததால்தான் இங்கு நாவலர் பெருமானுக்கு சிலை வடித்திருக்கிறோம்.

ஆறுமுகநாவலர் இந்நாட்டின்,
சிறந்த கல்விமான்,
சிறந்த பேச்சாளர்,
சிறந்த எழுத்தாளர்,
சிறந்த சமயவாதி
சிறந்த வெளியீட்டாளர்,
சிறந்த உரையாசிரியர்,
சிறந்த புராணீகர்,
சிறந்த இலக்கிய விற்பன்னர்,
சிறந்த தருக்க சாத்திர விற்பன்னர்,
சிறந்த ஒழுக்க சீலர்,
சிறந்த சமூகத் தொண்டர்,

இப்படி பல்வேறு சிறப்பு அம்சங்களும் நிறைந்த பெருமகன்.

அவர் பிறந்த நேரத்தில் தமிழன் தமிழை மறந்திருந்தான்; தமிழர் பண்பாட்டை, இலக்கியத்தை மறந்திருந்தான்.

அவர் பிறந்த வேளையில், சைவ மதத்தவன், கிறிஸ்தவ மிஷனரிமாரால் ஏமாற்றபட்டு மதமாற்றம் செய்யப்பட்டான்.

ஆங்கிலத்தைப் படித்து ஆங்கிலப் பண்பாட்டைத் தழுவி, ஆங்கிலப் பெயரைச் சூடி "ஆங்கிலோ தமிழர்கள்" உருவாகிக் கொண்டிருந்த நேரம்.

ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு தமிழன் அஞ்சியும் கெஞ்சியும் வாழ்ந்த நேரம்.

இந்நேரத்தில் வாழ்ந்த ஆறுமுகநாவலர் தமிழர்களுக்கு தமிழுணர்வை யூட்டினர்; தன்னம்பிக்கையை யூட்டினர்.


(12-ம் பக்கம் பார்க்க)

## "சாதியை விடச் சமயமே அதிகம்"

—நாவலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் இலட்சியங்கள் நிறைவேற வழியென்ன?



இ. எம் வி. நாகநாதன் பா. உ.

திருப்பெருந்திரு ஆறுமுக நாவலர் அவர்கள் இலங்கை உருவாக்கிய மிக உயர்நத தமிழ் பெரியார் என்பது எனது கருத்து. நாவலர் பிறந்து, வளர்ந்து தொண்டாற்றியது எமது நல்லூரிலேயே என்னும்போது நல்லூர் மக்களாகிய எமக்கு அது மிகுந்த பெருமையையும் கௌரவத்தையும் தருகின்றது. தமது மொழி. கலாசாரம், பரம்பரை ஆகியவை பற்றி பெருமையடைந்த தமிழ் தேசபக்தியாளராக திரு. ஆறுமுகநாவலர் திகழுகின்றார்.

வெளிநாட்டு ஏகாதிபத்திய ஆட்சியும் அதனுல் ஏற்பட்ட பண்பாட்டு நெருக்கடியும் தமிழ் மக்களிடம் ஒரு தாழ்வு மனப்பான்மையைத் தோற்றுவித்தது. தமது மொழியையும் இனத்தையும், கலாசாரத்தையும் குறைவாக கருத தமிழ் மக்கள் ஆரம்பித்த காலகட்டத்தில்தான் நாவலர் வாழ்ந்தார். கிறிஸ்தவர்களாக மதம் மாற்றப்பட்ட தமிழ் மக்கள் பலர், தங்கள சொந்த நம்பிக்கை காரணமாக அப்படி நடக்கவில்லை. ஆனல் அதிகார பீடத்தின் தயவும், பொருளாதார வசதிகளும் கிடைக்கும் என்ற நம்பிக்கொண்டே மதம் மாறினர்.

தமிழ் மக்களின் ஆத்மீக, கலாசார, பண்பாட்டு மரபுகளை அழியவிடாது பாதுகாப்பதும், அவற்றை மறுமலர்ச்சியடையச் செய்வதும் தமது கடமையென ஆறுமுகநாவலர் உணர்ந்தார். இதற்காக பல நூல்களையும் பிரசுரங்களையும் வெளியிட்டார். நாட்டின் பல பகுதிகளிலும் கூட்டங்களை நடத்தினர். ஆனல் பிரசாரம் மட்டும் தமது இலட்சியங்களை வெற்றியடைய வைக்காது என்பதை உணர்ந்த நாவலர், தம்மைப் பின்பற்றுவோர்களைக் கொண்ட ஒரு சபையை அமைத்து அச்சபை மூலம் தமது இலட்சியங்களை நிறைவேற்ற விரும்பினர். இந்த முடிவுடன் நம்பிக்கை வாய்ந்த பிள்ளைகளைத் தாமே பொறுக்கியெடுத்தார். மிக உயர்ந்த குடும்பங்களைச் சேர்நத பிள்ளைகள் பலர் அவரது சிஷ்யர்களாயினர். இப் பிள்ளைகளை தமது இல்லத்திலேயே தங்க வைத்து அவர்களது பண்பாட்டை வளர்த்தெடுத்தார். இவர்களது கல்விக்கென ஒரு தனியான பாடசாலையையும் நிறுவினர்.

இப்பிள்ளைகள் வளர்ந்து வந்த காலத்தில் நாவலர் உயிரோடிருந்திருந்தால், இப்பாடசாலையை சிரேட்ட பாடசாலையாக்கி பின்னர் பல்கலைக் கழகக் கல்வி பெறும் கழகமாகவும் உருமாற்றியிருக்கக்கூடும்.

தமக்குப் பின் தம்முடைய இயக்கத்தை நடத்துவதற்கு சிறந்த மாணவர்கள் முன்வர வேண்டுமென நாவலர் கருதினர். இதனுல்தான் சிறந்த கல்வியறிவும் நல்லொழுக்கமும் வாய்ந்தவர்களாகவும் தமிழர்களின் விடுதலைக்கும் சுயமரியாதைக்கும் கலாசார வளர்ச்சிக்கும் உதவக் கூடியவர்களாகவுமுள்ளவர்களைக் கொண்டே ஒரு 'மிஷனை' நிறுவினர். இந்நோக்கத்திற்காகவே யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியிலும் நல்லூர் கந்தசாமி கோவிலுககருகாமையிலும் பல வணிக நிலையங்களை அவர் விட்டுச் சென்ருர். கிளிநொச்சியில் பல ஏக்கர் நெல்வயல்களையும் தீவுப்பகுதியிலும் வேறு சில இடங்களிலும் சில தோட்டங்களையும் அவர் விட்டுச் சென்ருர்.

நாவலர் விட்டுச் சென்ற விலை மதிப்புள்ள இச் சொத்துக்கள் தகுந்த முறையில் நிர்வாகிக்கப்பட்டு நேர்மையான முறையில் அவரது நோக்கங்களுக்காக பிரயோசனப்பட்டால் மிகப் பெரும் தமிழ் கலாசார இலக்கிய கழகம் ஒன்றை ஸ்தாபித்திருக்க முடியும். நாவலர் கண்ட நாவலர் சமுதாயமும் தோன்றியிருக்கும்.

ஆனல் நாவலர் சொத்துக்கள் இன்றுவரை தவறுக நிர்வகிக்கப்பட்டு தவறுக உபயோகிக்கப்பட்டு வருவது மிகவும் வெட்கத்துக்கும் துக்கத்துக்கும் உரிய ஒரு செயலாகும்.

புதிய நாவலர் சபையினர், நாவலர் பெயரால் பொருத்தமான இடங்களில் புதிய பாடசாலைகளை நிறுவ வேண்டும். இப்போதைய நாவலர் நிறுவனம் இன்னும் பெருப்பிக்கப்படவேண்டும். தமிழ் கலாசாரம், கலை, இந்து தத்துவங்கள் கற்பிக்கக்கூடியதாக அவை விஸ்தரிக்கப்பட வேண்டும். நாவலர் பெயரால் முதல்தரமான நூலகம் ஒன்று நிறுவப்படவேண்டும்.

மாதம் ஒரு ரூபா வீதம் கொடுக்கக் கூடிய 10,000 உறுப்பினர்கள் திரட்டப்பட வேண்டும். நாவலர் 'ட்ரஸ்ட்'டிலிருந்து கிடைக்கும் பணத்துடன் இப்பணத்தையும் சேர்த்து, நாவலர் இலட்சியங்களை நிறைவேற்ற உதவி புரியலாம்.

இச்சமயத்தில் நாவலர்பற்றிக கூறப்படும் இருதவருன கருத்துக்களை இங்கு திருத்த வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன். முதலாவதாக நாவர் சாதி வேறுபாட்டை ஆதரித்தார் என்று கூறுவது பிழையான கருத்தாகும். உலகத்தின் எந்த மூலையிலிருந்தாலும் எந்தத் தமிழனும் மரியாதையுடனும் கௌரவத்துடனும் வாழ உழைப்பதே தமது மூலாதார நோக்கம் என்பதை நாவலர் பகிரங்கமாக கூறியுள்ளார்.

மத, சரித்திர காரணங்களால் பல்வேறு சாதி அமைப்புக்களைக் கொண்டதாக இருக்கும் இந்து சமூகத்துக்காகவும், இந்து சமுதாய அமைப்புக்காகவும் மாபெரும் இந்துத்தலைவராகிய ஆறுமுகநாவலர் முழு மூச்சுடன் உழைத்தார். ஆனல் ஒரு சாதியினர், அடுதத சாதியினரைவிட குறைந்தவர்கள் என்று அவர் ஒருபோதும் கூறியதில்லை.

இரண்டாவது தப்பெண்ணம்—நாவலர் கிறிஸ்தவர்களுக்கெதிரானவர் எனபதாகும். நாவலர் கிறிஸதவ ஏகாதிபத்தியத்தையும் ஏழை இந்துக்களை பொருளாசை காட்டி கிறிஸ்தவ மதத்துக்குதிட்டமிட்டு மதம் மாறறியதையும் நாவலர் எதிர்த்தார். இந்து சமயத்துக்கு எதிராக அறியாமையால் கீழ்தரமாக பிரசாரம மேற்கொண்ட சில கிறிஸவ மிஷனரிமாரை நாவலா தாக்கினர். ஆனல் நாவலர் கிறிஸ்தவ சமயத்துககு எதிரானவர் அல்லா. தமிழில் பைபிளை மொழிபெயர்தத தன் மூலம் அவர்கிறிஸ்தவ சமயததுக்கும் உதவினர்.

நாவலருக்கு சிலைநிறுவுவதாலோ, மாலையிடுவதாலோ அடிக்கொருமுறை நாவலர் பெயரால் விழா நடததுவதாலோ ஈழத்தமிழினம் திருப்தியடைந்து விடமுடியாது. நாவலர் சங்கம ஒன்றை நிறுவி, அவரது பெரிய இலட்சியங்களை நிறைவேற்ற வேண்டும். உண்மைச் சுதந்திரமுள்ள சுயமரியாதையுள்ள — பண்பாடு மிகுந்த தமிழினத்தை ஈழத்திலகட்டியெழுப்பவேண்டும்.

இன்று — நாவலர் காலத்தில நடந்ததுபோல- சிங்கள பௌத்த ஏகாதிபததியமும், சிங்கள வெறித்தனமும், அரசியல் நெருக்கடி ஏற்படுத்தியும் பொருளாதார சலுகைகளை காட்டியும் தமிழ் இனத்தையும், தமிழ்மொழியையும், கலாச்சாரத்தையும், இநது சமயத்தையும் அழித்தொழிக்க கங்கணம் கட்டி நிற்கிறது. இந்நிலையில் மேற சொன்ன பணி உடன் தேவைப்படுகிறது.

## நாவலரை நினைப்போம்!

("வன்னியூர்க் கவிராயர்")

நாட்டிலொவ்வோர் நகரங்கள் தனிலும் கல்லால்...
நல்லவுலோ கங்களிஞல்...பளிங்(கு)ஏன்? பொன்ஞல்
வீட்டுக்கோர் நாவலராய்ச் சிலைவைத்தென்ன
வேற்றுமைகள், தாழ்வு (உ)யர்வு களைந்து ஒரே
கூட்டமதாய்க் கூடோமேல்... உரிமைக் கோரே
குரலெழுப்பா தயர்ந்தோ மேல்... சுயநலத்தில்
நாட்டமுற்று வழ்ந்தோமேல்...எதிர்காலத்தில்
நாம் வாழ்ந்த சுவடுமற்றுப் போம், மூத்தே!

முன்ஞளில் ஆங்கிலத்தால் கிறீஸ்தவத்தால்
முதுதமிழ், சைவத்தையழி யாமற்காத்த
தன்னலமில் லாவீரர் ஈழ நல்லூர்
தந்த 'அருட் பெருந்திரு' நாவலரை நெஞ்சில்
நன்னயமாய் நிலைநிறுத்தி...எமது சொந்த
நலன் துறந்து... தமிழ், சைவத் திற்காய் வாழ்தால்
இன்நாள்...ஏன்—என்ஞளும் மாற்ருர் எம்மை
எவ்வண்ண மும் அழிக்க முடியாதன்ரே!

ஒற்றுமைதான் உயிர்நாடி...தமிழினத்தின்
ஒற்றுமைதான் எமதாக்கச் சக்தி...எங்கள்
ஒற்றுமையே சசஇனத்தின் நட்பைக்கோர
உரியவழி... ஏற்றவழி...அதைப்பின்பற்றி
ஒற்றுமையாய்த் தியாகிகளாய்ச் சுயநலத்தை
உதறிஇன ஒற்றுமை மலரச் செய்வோம்
'ஒற்றுமையால் உயர்ந்திடுவோம்!' என்ன இன்றே
உறுதிகொள்வோம் நாவலர்நா மத்திஞலே!

## நாவலர் அழுதது எதற்காக?

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

மகான்களின் ஆத்ம சக்தி, அவர்களுடைய பூத உடலோடு மறைந்து போவதில்லை.

சில வித்துக்கள் கோடை காலத்திலே புழுதியில் மறைந்து கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்து கிடக்கின்றன. உரிய காலமாகிய கார் காலம் வர மழை பொழிய அவ்வித்துக்கள் முளைகொண்டு வளர்ந்து பெரிய விருட்சங்களாகின்றன.

திருமால் பாற் கடலில் பள்ளி கொள்ளுகின்ருர். ஆனல், வேண்டும் போது அவர் நீண்ட துயில் புரிந்து கொண்டு கிடப்பதில்லை, அவர் சக்தி ஸ்ரீராமனுகவோ கண்ணனகவோ தோன்றி விடுகின்றது.

1834 ம் ஆண்டு ஆறுமுக நாவலருக்குப் பன்னிரண்டு வயது. மத்திய கல்லூரிக்கு ஆங்கிலம் படிக்க அனுப்பப்பட்டார். ஆங்கிலம் படிக்கப் போன அவர் அங்கே நடப்பவைகளை நோக்கினர். கண்ணீர் பெருகிற்று.

தி. வை. தமோதரம் பிள்ளை தமிழ் தாயைக் கறையான் அரிக்கின்றது; புள்ளிபிடுகின்றது; இராம பாணம் துளைக்கின்றது; உழுகின்றது என்று அழுதார். தனி யொருமனிதரை அழவிடுதுவ சரியில்லையென்று, உ. வே. சாமிநாதையரும் தாமோதரம்பிள்ளையைக் கட்டிப்பிடித்துத் தமிழ்த் தாயே என்று கதறி அழுதார். இப்படி அழுகை நாவலருக்கு வரவில்லை. அவர் கண்ணீர் அவ்வாருகிய அழுகையாற் பெருகிய தன்று.

அருமந்த தாமோதரம் பிள்ளை கிங்ஸ்பரி தாமோதரம் பிள்ளையாய் வருவதா? அருமந்த விசுவநாத பிள்ளை கறல் விசுவநாத பிள்ளையாய் போவதா? என்று தான் அன்று அழுதார் ஆறுமுகநாவலர். அதனுலேதான் அவருக்குக் கண்ணீர் பெருகியது.

அறிவு சிவச் சொத்து. அறியாமை கறையான் வஞ்சகம் இராமபாணம் அருமந்த அறிவைக் கறையான் அரிப்பதா? இராம பாணம் உழுவதா? இதனைப் பார்த்துக் கொண்டிருப்பதா? என்று தான் நாவலருக்கு, அன்று அங்கே கண்ணீர் பெருகியது.

விடுதலை, விடுதலை! என்றுபேச்சு வீரர்கள் கதறுகின்ருர்கள். தேச விடுதலை, பொருளாதார விடுதலை என்று எத்தனையோ விடுதலைகள்விட்டுப் புலம்புகின்ருர்கள். எவர் ஒருவரும் மனிதன் அறியாமையினின்று விடுதலைபெறுவதே உண்மை விடுதலை என்று கண்டாரில்லை. சொன்ஞரில்லை. நாவலர் ஒருவரே சென்ற நூற்ருண்டிற் கண்டார்; சொன்ஞர்.

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம் என்பது நாவலர் இரண்டாம் பாலபாட முதல் வசனம்.

முத்தி என்ற சொல்லுக்கு வீடு என்பது பொருள். 'விடுதல்' என்ற சொல் விகுதி கெட்டு முதனீண்டு வீடு என்று வந்தது. கெடுதல் கேடு என்று வருவது காண்க. விடுதல் விடுதலை எனப்படும். எதினின்றும் விடுதலை என்ருல், அறியாமையினின்றும் விடுதலைஎன்பதாம். அதுதான் முத்தி, வீடு, அதற்குத்தான் இந்தச் சரீரம். அறியாமையினின்று விடுதலைப் பட்டாலேதான் அறிவாகிய சிவச் சொத்துப் பிரகாசிக்கும். அதுவே உண்மை ஞானமாய்க் கனிவது.

நாவலர் இளம் வயசில் வந்த கண்ணீரை அடக்கிக் கொண்டு பதினன்கு வருடம் தவமிருந்தார். 1848ம் ஆண்டில் கண்ணீர் ஆருய்ப் பிரவாகித்தது. நாவலர் அதில் ஆழ்ந்து போனர். சிவசக்தி ஆட்கொண்டு விட்டது ஆன்மசக்தி மேவிட்டது. முப்பது வருடத்துக்கு மேல் அறியாமை இருளோடு ஆறுமுகநாவலர் போர் புரிந்தார். 1879ல்பூதவுடல்மறைந்தது. ஆன்ம சக்தி அருவமாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் வசன நடை

இரசிகமணி கனக. செந்திநாதன்



பரந்து விரிந்து கிடக்கும் தமிழ் இலக்கியப் பரப்பில் ஆறுமுக நாவலரது ஸ்தானம் என்ன? என்ற வினு எழுத்தாளர்களிடையிலும், விமர்சனகாரர் மத்தியிலும் கேட்கப்படுகிறது. வசன நடை கைவந்த வல்லாளர்' என ஒரு காலத்தில் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட நாவலர் இன்றைய விமர்சனகாரரால் அலசி ஆராயப் படுகிருர். அவரது வசன நடையைப் பற்றித் தமிழ் நாட்டில் இன்று பலவகைப் பட்ட அபிப்பிராயங்கள் இருக்கின்றன.

'இன்றைய தமிழ் வசன நடை' என்ற நூலின் ஆசிரியராகிய மு. அருணுசலம் அவர்கள், தமிழிலே நல்ல வசன நடை எழுதியவர்களை தமிழ்ப்புலவர் குழாம்; அரசியற் குழாம்; மறுமலர்ச்சிக் குழாம் என மூன்ருக வகைப் படுத்திவிட்டு, தமிழ்ப்புலவர் குழாத்தில் ஆறுமுகநாவலர், செல்வக்கேசவராய முதலியார், டாக்டர் சாமிநாதையர் என்ற மூவர் பெயரையுமே குறிப்பிட்டிருக்கிருர். நாவலர் வசனத்தின் சிறப்புக்கு உதாரணமாகத் திருவிளையாடற் புராண வசனத்தில் ஒரு பகுதியைக் காட்டிவிட்டுப் பின்வருமாறு எழுதுகிருர். "இந்த நடையில் எளிமை இருக்கிறது. கதைப் போக்கிற்கேற்ப ஓட்டமும் தெளிவும் அமைந்துள்ளன. நாவலர் தம்காலத்தில் மக்களுக்குச் சமய உணர்ச்சி உண்டாகும் பொருட்டு, சமயப்பிரசாரம் செய்வதற்கென்றே இப்புராணக் கதைகளை எழுதினர். நடை பாமரமக்களுக்கும் விளங்கும்படி இருந்தமையால் எல்லாரும் படித்தார்கள்; படித்து ஆயிரக்கணக்கான சமயப் பற்றும் தெய்வ பக்தியும் கொண்டார்கள்.''

மு. அருணுசலம் அவர்களால் அடுத்துக் குறிப்பிடப் பட்டவராகிய செல்வக் கேசவராய முதலியார் (எம். ஏ.) தமது கட்டுரை ஒன்றில் ''யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் தமது சைவப் பிரகாச வித்தியாசாலைகளின் பொருட்டுப் பிரசுரம் செய்த பாலபாடங்கள் செந்தமிழ் நடையிலே செவ்விதின் எழுதப் பெற்றவை. இவைகளில் நான்காவது பாலபாடம் செம்பாகமான உரைநடையிற் பயில விரும்பும் தற்கால மாணவர்க்கு நல்ல நடை வண்டியாக இராநின்றது. தோரணியாகச் சரித்திரம் கதை முதலியன எழுதுவதற்கான நடை பயில வேண்டுவார்க்கு நாவலருடைய பெரிய புராண வசனம் ஏற்ற வழிகாட்டியாகும்'' என எழுதியுள்ளார். கம்பராமாயண ரசனையிலும், விமர்சனத்திலும் தேர்ந்தவரான பி. ஸ்ரீ. அவர்கள் எழுதிய 'தமிழ் வசன நடை அன்றும்—இன்றும்'' என்ற சுதேசமித்திரன் மலர்க்கட்டுரை ஒன்றில், 'சரவணப் பெருமாளையரும் விசாகப் பெருமாளையரும் இவர்களுக்குப்பின் தோன்றிய ஆறுமுக நாவலர் அவர்களும் வளரும் தமிழ் இலக்கியத்தின் இன்றிமையாத பகுதியாய் மதிக்கத்தக்க கட்டுரைகளை எழுதிவிடவில்லை... பத்தொன்பதாம் நூற்ருண்டின் முற்பகுதியிலே தமிழ் வசனத்தை வளர்த்தவர்களில் பஞ்ச தந்திரக் கதைகளைத் தமிழில் எழுதிய தாண்டவராய முதலியாருக்கும் மனுமுறை கண்ட வாசகம் இயற்றிய இராமலிங்க சுவாமிகளுக்கும் ஸ்தானம் உண்டு. இவர்களில் இராமலிங்க அடிகளை ஒரு மேதாவி என்றே சொல்லலாம். இராமலிங்கர் பாவலராகவும், நாவலராகவுந் திகழ்ந்தவர். இவரது மனுமுறை கண்ட வாசகத்திலே, எடுத்துக் கொண்ட பொருளை விரித்துரைக்கும் ஆற்றல் மிகுந்த வித்தகர் இவர் என்பதைக் காண்கிறேம்'' என எழுதியுள்ளார்.

முதலாவதான மு. அருணுசலத்தின் விமர்சனத்தில் இராமலிக சுவாமிகளைப் பற்றிய பேச்சையே காணும். அவருக்குப் பதினெட்டு வருடங்களுக்கு முன் அவரால் நன்கு மதிக்கப்பட்ட செல்வக் கேசவராய முதலியார் இராமலிங்கரைப் பற்றித் தனியாகக் குறிப்பிட்டிருந்தும் அருணுசலம் அவர்கள் அதை ஒப்புக்கொள்ளவில்லை. ஆனல் அதற்குப்பின் பத்து வருடத்துக்கப்பால் விமர்சித்த பி. ஸ்ரீ. இருவரையும் ஒன்ருகப் போட்டுப் பிணைத்து, நாவலர் நல்ல கட்டுரைகளை எழுதிவிடவில்லை என்றும், இராமலிங்கர் பாவலர் மாத்திரமல்ல; நல்ல நாவலர் என்றும், மேதாவி என்றும் எடுத்துக் கொண்ட பொருளை விரித்துரைக்கும் ஆற்றல் மிகுந்த வித்தகர் என்றும் குறிப்பிட்டிருக்கிருர்.

தமிழ் வளர்த்த பெரியவர்களைப்பற்றி—அவர்களது முயற்சிகளைப்பற்றி—அவர்கள் கையாண்ட நடைகளைப் பற்றி ஆராய்ந்து மதிப்பீடுசெய்ய ஒவ்வொரு விமர்சகனுக்கும் உரிமையுண்டு. ஆனல் அவற்றை ஆராயும் போது அவனுடைய காலம், அவனுடைய காலத்தில் இருந்த சூழ்நிலை, பின்னணி அவன் படைத்த முழுப்படைப்புகள், சிறந்த படைப்புகள் அவற்ருல் மக்கள் பெற்ற பயன் என்பவற்றை நுணுக்கமாக அவதானித்தல் வேண்டும்.

### பின்னணி: காலம்: சூழ்நிலை

ஆறுமுக நாவலர் அவர்களது காலம் ஆங்கிலேயர் முழு இலங்கையையும் பிடித்து தமது ஆட்சியை வேருன்ற ஆரம்பித்த காலமாகும். 1822க்கும் 1879க்கும் இடைப்பட்ட காலம். தாம் உண்மையென்று நம்பும் மதத்தை விட்டு விட்டு சிங்களவர் தமிழர் ஆகியோரில் பலரை உத்தியோகம், விவாகம், கஷ்ட நிவிர்த்தி சீதனம் என்னும் ஆசைகள் காட்டிக் கிறிஸ்தவ மதத்திற்கு மதமாற்றம் செய்த காலம். அது மட்டுமன்றிக் குரு சிஷ்ய முறையாக—மரபாக—ஒழுக்கநெறிகளை வற்புறுத்திப் படிப்புச் சொல்லிக் கொடுத்து வந்த திண்ணைப் பள்ளிக்கூடங்களை ஒழித்து விட்டு. அரசாங்க கிகிதர் மாரை ஆக்கி அவர்கள் மூலமாகத் தமது அரசியற் பிடிப்பை இன்னும் வலுப் படுத்துவதற்காகப் பெரிய பெரிய ஆங்கிலக் கல்லூரிகளை மிஷனரிமார் கொண்டு ஆரம்பித்தகாலம்.

இந்தக்கால கட்டத்தில் தோன்றிய நாவலர் என்ன குறிக்கோளோடு தனது தொண்டைச் செய்திருக்க வேண்டும்? நாவலர் அப்படிச் செய்தாரா?

''கன்னியை நாயகனிடத்து ஒரு துட்டாயினும் வாங்காது வீடு விளை நிலம் தோட்டம் ஆபரணம் முதலியவற்ருேடு விவாகஞ்செய்து கொடுக்கும் வழக்கமுடையது என் ஜென்ம தேசமேயாகவும் நான் இல்வாழ்க்கையிற் புகவில்லை. இவைகளெல்லாவற்றிற்குங் காரணம் சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டுமென்னும் பேராசையேயாம்'' என நாவலர் தமது குறிக்கோளைக் காலத்துக்கேற்ற விதமாக அறிவித்து சைவம்—தமிழ் ஆகிய இருமுனைகளிலும் வேலை செய்யத் தொடங்கினர்: அவருடைய பணியைப்பற்றி—காலத்துக் கேற்ற பணியைப்பற்றிப் பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளையவர்கள் 'தமிழ் நாவலர்' என்ற கட்டுரையில் அழகாகத் தொட்டுக் காட்டியிருக்கிருர்

''ஆறுமுகநாவலர் காதல் பாடிய சுப்பிரதீபக் கவிராயர் போன்ற ஒரு பெரிய சொற்செல்வரும் அல்லர்; இயற்கைகளை முகந்து வருணனைகளைச் சொரிந்து நாலு பத்து உபமானங்களை வழங்கி, எதுகைமோனைகளைப் பூசித் தமிழார்வங் காட்டித் தமிழ் வளர்க்க முன் வந்தவரும் அல்லர். ஆறுமுக நாவலர் உயிர் வளர்க்க வந்தவர். அது செய்ய நேர்ந்தது. அதனை வளர்க்க முயன்ருர். உயிரை வளர்க்க உடல் தானே வளர்ந்தது உயிர் சமயம்; உடல் பாஷை. நாவலர் சமயத்தை வளர்க்கப் பாஷை தானே வளர்ந்தது; வளர்க்க நேர்ந்தது.''

பண்டிதமணியின் இந்த வார்த்தைகளை ஊன்றி வாசித்துப் பார்த்தால் நாவலர் வசன நடைக்கும் மற்றையோரது வசன நடைக்கும் உள்ளபேதம்—அதற்கான காரணம் என்பவை சிறிது புலப்படும்;

### நாவலர் வசனநடை

ஆறுமுகநாவலர் பரிசோதித்தும் புத்துரை எழுதியும் புதிதாய் இயற்றியும் வெளியிட்ட நூல்கள் 69. அச்சிற் பதிப்பிக்கும் பொருட்டு எழுதி முடித்தவைகள் 10 எழுதத் தொடங்கியவைகள் 16. ஆறுமுக நாவலரது இருபத்தொராவது வயதின் பின் (நாவலர்பட்டம் பெற்றது) முப்பத்தைந்து வருடத்துள் தமது மற்றைய பாரிய வேலைகளோடு எழுபது புத்தகங்கள்வரை எழுதி முடித்தமை ஆச்சரியப்படக்கூடிய தொன்று. அச்சுக்கூட வசதிகளில்லாத அக்காலத்தே—வியாபார நோக்கம் சிறிதுமில்லாது—இவ்வளவு நூல்களையும் வெளியிட்டார் அவர். அப்படிச் செய்யாமல் ஆற அமர இருந்து 'தேர்வடத் தமிழிலே' ஒரே ஒரு நூலைச் செய்திருந்தால், இக்கால விமர்சகர்கள் 'ஆஹா, ஊகூஉ போட்டிருப்பார்கள். அதனல் தமிழன்னையின் உடல் வளர்ந்திருக்கும் அல்லது ஊறுபட்டிருக்கும். ஆனல், நிச்சயமாக உயிர் வளர்ந்திராது.

ஆறுமுகநாவலர் எழுதிய முழு நூல்களையும் ஆராய ஒரு கட்டுரை போதாது. பல கட்டுரைகள் வேண்டும். எனவே அவை எல்லாவற்றையும் ஐந்தாக வகுத்துக் கொண்டு சுருக்கமாக ஆராய்வோம்:

1. பாலபாடங்கள்: சைவவினு விடைகள்: இலக்கணச்சுருக்கம்.

2. பெரிய புராணம், திருவிளையாடற் புராண வசனங்கள்.

3. நாவலர் பிரபந்தத் திரட்டு. சைவதூஷண பரிகாரம்.

4. அவர் பதிப்பித்த நூலின் முகவுரைகள்.

5. பெரிய புராண சூசனம்.

இந்த ஐந்து பகுதிகளிலும் நாவலர் வசனநடை எப்படியிருக்கிறது என்பதை மொத்தமாகப் பார்த்துவிட்டு மேலே செல்லாமல். ''உள்ளத்தில் உண்மை ஒளி உண்டானல் வாக்கினிலே ஒளி உண்டாகும் '' என்பது பாரதியார் வாக்கு. இது கவிதை, கட்டுரை, மேடைப்பேச்சு எல்லாவற்றிற்கும் பொருந்தும். சிந்தனைத் தெளிவு தான் எல்லாவற்றிற்கும் முக்கியம், ஆனல் கவிதை நடைவேறு, வசன நடை வேறு என்பதை நாம் மனத்திலிருத்த வேண்டும். வசன நடை, சொல்லும் கருத்தை அழுத்தமாகச் சொல்லும்: பொருளைச் சுவைக்க வழி செய்யும். அதற்கு இரசனை தான் முக்கியம். ஒரு பொருளைப் பற்றி மகாத்மா காந்தியும், தாகூரும் எழுதினல் எப்படி எழுதுவார்கள் என்பதை ஒரு கணம் சிந்தித்தால் இது விளக்கமாகும்.

ஆறுமுகநாவலர், உலகத்துக்குக் கருத்தாயாரவர்? என்பதைச் சொல்ல வந்தவர். இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்

(10ம் பக்கம் பார்க்க)


கலப்பற்ற அலுமினியம்

மங்காத பிரகாசம்—நீடிய உழைப்பு

இவற்றிற்கு

டொலர் அலுமினியம்

டொலர்

அலுமினியப் பாத்திரங்கள்

டொலர் கோப்பரேசன்

14, டாம்வீதி, கொழும்பு-12


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அண்ணல் காந்தியும் ஆறுமுக நாவலரும்

வெ. சு. நடராசா

சென்ற நூற்றுண்டுகளில் இலங்கையிலும் இந்தியாவிலும் அந்நிய ஆட்சிகள் வேரூன்றத் தொடங்கியதும் அந்நிய மதகுருமார்களும், மத நூலுடன் இந்நாடுகளில் இறக்குமதி செய்யப்பட்டனர். ஒருநாட்டை அடிமைப் படுத்த வேண்டுமாயின் அந்நாட்டு மதத்திலும் மொழியிலும் கைவைக்க வேண்டுமாம். மதமும் மொழியும் வேரறுக்கப்பட்டால் ஒரு நாடோ இனமோ அடிபணியாது வேறு என்ன செய்ய முடியும். இந்த முறையில் தான் மக்கள் விரும்பாவிட்டாலும் மேலைத்தேச நாகரிகங்களை வலுவில் திணித்தார்கள். எனவே கீழைத் தேசப் பழக்க வழக்கங்களை நம்மவர்கள் பரிகசிக்கவும் தலைப்பட்டனர்.

காந்தியடிகளே மனம் நொந்து பலவிடங்களில் இதை எழுதியிருக்கின்றார். மேல் நாட்டின்மீது மோகம் ஏற ஏறத் தாய்நாட்டுப் பற்றுத் தவிடுபொடியாயிற்று. சுருங்கச் சொன்னால் மக்கள் உள்நாட்டுக் கைத்தறி வேட்டி, கதர் வேட்டி உடுப்பதே கௌரவக் குறைவு என்று நினைத்தனர். மில் வேட்டிக்கும் சட்டை தொப்பி நாகரீகத்துக்கும் இரையாகினர். இலங்கை இந்திய மக்கள். நாவலரும் காந்தியடிகளும் சட்டை தொப்பி நாகரிகத்தில் நாட்டம் கொள்ளாது திறந்த மேனியும் வேட்டி சால்வைக் கட்டும் கைக்கொண்டது ஏன்? மக்களுக்குச் சுதேச உணர்ச்சியை உண்டுபண்ணவல்லவா? தம் நிலைமை கெட்டுப் பரதவித்து நின்ற மக்களைத் தலைதூக்க வந்தவர்கள்தான் நாவலரும் காந்தியடிகளும் மதமாற்றத்தைப் பற்றியும் புதிய மதம் பற்றியும் காந்திமகாத்மா தமது சத்தியசோதனை என்ற சுய சரிதத்தில் என்ன சொன்னார் என்பதையும் கீழே தருகிறேன் படியுங்கள். ஆங்கிலத்தில் காந்தியடிகள் எழுதியதை மொழிபெயர்த்தவர் திரு. ராதாகிருஷ்ண மூர்த்தி— "கல்கி" அவர்கள்:

"கிறிஸ்தவ மதம் மட்டும் இதற்கு விலக்காயிருந்தது. அதனிடம் எனக்கு ஒருவகை வெறுப்பு ஏற்பட்டது. அதற்கு ஒரு காரணம் உண்டு. அக்காலத்தில் பள்ளிக்கூடத் தருகில் மூலையில் கிறிஸ்துவப் பாதிரிமார் நின்று இந்துக்களையும் இந்து தெய்வங்களையும் தூஷிப்பார்கள். இதை என்னால் சகிக்கக்கூட வில்லை."

"கிறிஸ்தவ மதத்தைத் தழுவினால்தான் எனக்கு மோட்சம் கிட்டுமென்பதை நம்ப என்னால் முடியாது."

"மற்ற மதங்களில் ஓரளவு உண்மை இருக்கலாமாயினும்கிறிஸ்தவ மதத்திலேயே முழு உண்மை உண்டென்றும், அதை ஏற்றுக்கொண்டாலொழிய மோட்சம் கிட்டாதென்றும் ஏசுநாதர் மனிதனுக்காகப் பரிந்து பேசினாலன்றி அவனுடைய பாவங்கள் மன்னிப்புப் பெறுவென்றும் நல்வினைகளால் பயன் யாதொன்றுமில்லையென்றும் அவர் எனக்கு அறிவுறுத்த விரும்பினர்."

"தத்துவத்துறையில் பார்க்குங்கால் கிறிஸ்துவ மதக் கொள்கைகளில் அசாதாரணமான எதுவுமில்லை. தியாக வெறியை முன்னிட்டுப் பார்க்கையிலோ, இந்துக்கள் கிறிஸ்தவர்களிலும் பெரிதும் மேம்பாட்டவர் என்று தோன்றிற்று. கிறிஸ்துவ மதத்தைப் பரிபூரண மதமென்றே நான் ஒப்புக் கொள்ளமுடியவில்லை."

பைபிளை மொழிபெயர்த்த மகான் நாவலரது கருத்துக்களும் காந்தியடிகளுடைய கருத்துக்களும் மதமாற்ற விஷயத்தில் ஏறக்குறைய ஒரே மாதிரியாக இருக்கின்றன.

உலகம் போற்றும் உத்தம ராம காந்தியடிகள் எழுதிய சட்டை தொப்பி நாகரீகத்தைப் பற்றிய கருத்துக்களாவன:—

'ஒருமுறைதான் இவர்களுடைய பிரசங்கத்தைக் கேட்க நின்றிருப்பேன். பின்னர் அவர்கள் கிட்ட நெருங்காதிருப்பதற்கு அதுவே போதுமானதாயிருந்தது. இக்காலத்திலேயே ஒரு பிரபல இந்து கிறிஸ்தவ மதத்தைத் தழுவியது குறித்துக் கேள்விப்பட்டேன். அவர் 'ஞானஸ்நானம்' செய்விக்கப்பட்ட போது மாட்டிறைச்சி தின்று சாரயம்குடிக்க வேண்டிருந்ததென்றும், உடனே தொப்பியுட்பட ஐரோப்பிய உடைதரிக்கவுந் தொடங்கிவிட்டாரென்றும் ஊரெல்லாம் பேச்சாயிருந்தது இவை எனக்குப் பிடிக்கவில்லை மாட்டிறைச்சி தின்னவும் சாராயம் குடிக்கவும், உடையை மாற்றவும் கட்டாயப்படுத்தும் மதத்துக்கு மதம் என்ற பெயரேதகாது என்று எண்ணினேன் மதம் மாறியவர் தமது மூதாதையர்களின் மதத்தையும் பழக்க வழக்கங்களையும் தேசத்தையும் தூஷிக்கத் தலைப்பட்டு விட்டாரென்றும் கேள்விப்பட்டேன். இவை எல்லாம் சேர்ந்து கிறிஸ்தவ மதத்தில் எனக்கு வெறுப்பையுண்டாக்கின.

காந்தியடிகளின் மேற்படி கூற்றுக்கள் அன்றும் இன்றும் மதம் மாறுவோருக்கும், மதம் மாற்றுவோருக்கும் பொருந்தும். இந்த விடயத்தில் நாவலரதும் காந்தியடிகளதும் பேச்சுக்கள் காரியங்கள் எதுவும் ஒழிப்பு மறைப்பின்றியே இருந்திருக்கின்றன. எனவே தான்மதமாற்ற விடயத்தின் நாவலரது மேற்கோள்களிலும்பார்க்ககாந்தி மகானது மேற் கோள்களை எடுத்துக் காட்டினேன்.

சாதி வெறியைச் சாகடிக்க விரதம் பூண்ட வீரத்திருமகன் சாந்த மூர்த்திகாந்தியடிகள் என்பது யாவருமறிந்ததே. ஆனால் இதேவிஷயத்தில் நாவலராவரகள் தாம் எழுதிய பெரிய புராணவசனத்தில் 'உண்மை நாயன்மார் மகிமை' என்ற பகுதியில் 'சாதியிலும் சமயமே அதிகம். சமயத்திலும் சாதி அதிகமெனக் கொள்வது சுருதி, யுக்தி, அனுபவ மூன்றுக்கும் முழுமையும் விரோதம்'

நாவலர் சாதி பாராட்டவில்லை என்பதற்கு இன்றும் சில உதாரணங்கள் பெரிய புராணத்தில் பலவித சாதிகளில் தோன்றிய நாயன்மார்களது சரித்திரங்களையும் உள்ளடக்கிஒரே நூலாக வெளியிட்டிருக்கிறார்கள் மேலும்

நாவலர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் குருநகரில் (கரையூரில்) பேதி நோய்கண்டவர்களை அப்புறப்படுத்தி ஓர் இடத்தில் வைத்து வைத்தியம் செய்தது. நாவலர்பெருமானவர்கள்இயேசு கிறிஸ்து நாதரைப் போல இந்த நோய் கண்டவர்களிடம் போய் தொண்டுகள் செய்திருப்பதாக அவரது சரித்திர நூல்களே கூறுகின்றன.

சைவமும் தமிழும்

ஈழத்தில் அழிந்துவிடாது

பாதுகாத்த

நாவலர் பெருமானுக்கு எமது

இதயங்கனிந்த அஞ்சலியை

காணிக்கையாக்குகிறோம்.

தம்பிப்பிள்ளை பிறதேர்ஸ்

மன்சூர் பில்டிங்
51, பிரதான வீதி
கொழும்பு 11.

தொலைபேசி 23672

## ஒன்பது வயதில் நாடகம் எழுதிய நாவலர்!

நாவலர் பெருமானின் தந்தை கந்தப்பிள்ளை மருத்துவத் தொழில் புரிந்தவர். சிறந்த தமிழ்ப் பற்று உள்ளராக இருந்தார். நாடகத் தமிழால் சிறந்த தொண்டு செய்யலாமென உணர்ந்தஅவர், தமது பிற்காலத்தில் நாடகங்ளின் பல எழுதினர். நாள் முழுதும் எழுதிக்கொண்டிருப்பதையே வேலையாக்கிக் கொண்டிருந்தார்.

ஒருநாள் சிந்தனையூற்றுக்களை வசனங்களாக்கி நாடகம் எழுதிக்கொண்டிருந்தவர், ஏட்டையும் எழுத்தாணியையும் பிடித்தபடியே இருந்துவிட்டார்: பேச்சில்லை, மூச்சில்லை. பின்புதான தெரிந்தது அவர் உயிர் பிரிந்துவிட்டதென்று. அவர் எழுதிக்கொண்டிருந்த நாடகம் அரைகுறையாகவிடப்பட்டிருப்பதைக் கண்டு பலரும் விசனப்பட்டனர். அப்பொழுது நாவருக்கு "ஒன்பது வயதுதான் நிரம்பியிருந்தது. ஆனால் அவரே தன் தந்தை விட்டுச் சென்ற நாடகக் குறைவை நிறைசெய்துகொண்டு தமயனரிடம் காட்டிவபோது பெரிய ஆச்சரியமாகப்போய்விட்டது.

அச்சகத்தோரே!
அச்சம் வேண்டாம்!!

இறக்குமதிக் கட்டுப்பாட்டினால் புதிய அச்சுக்களை வாங்க முடியவில்லையே என்று ஏங்க வேண்டாம்

இறக்குமதி அச்சுக்களை விட ஏற்ற மிகு அச்சுக்களை இலங்கையிலே வார்த்துக் கொடுக்கின்றோம.

புதிய தமிழ் ஆங்கில அச்சுக்கள்

விபரங்களுக்கு

சுதந்திரன் அச்சுவார்ப்பகம்

194 ஏ, பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12

தொலைபேசி: 23411 த. பெ. 1183

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் ஆற்றிய பல்வகைப் பணிகள்

ஈழவேந்தன்

ஈழத்தின் நிலப்பரப்பு 25,000 சதுரமையில் என்று கூறப்படுகிறது. அதனின் ஓர் உறுப்பாய் விளங்கும் யாழ்ப்பாணத்தின் எல்லைப்பரப்பு 3429 1/3 சதுரமைல் ஆகும். அந்த எல்லைப்பரப்பில் 75 சதுரமைலை சடல் கொண்டுள்ளது. அதனுல் அதனின் உண்மை நிலப்பரப்பு 3,354 சதுரமைல் என்றுதான் கணிக்கமுடியும். யாழ்ப்பாணத்தின் எல்லைப் பரப்பை வேறு சொற்களில் விளம்பின் ஏறக்குறைய ஈழத்தில் 1/8 அளவுடையது என்று கூறல் பொருத்துடையது. யாழ்ப்பாணம் அளவில் இவ்விதம் சிறியதாய் இருப்பினும் அதனின் உள்ளடக்கம் மிகப் பெரியது. ஈழத்தின் தேசப்படத்தின் அமைப்பை பார்க்கும்போது யாழ்ப்பாணம் அதனின் தலை உறுப்பாய் அமைந்திருப்பதுபோல் காட்சியளிக்கிறது. எங்கு தலையுண்டோ அங்கு மூளையுண்டென்பது பொருள். இக்கருத்துப்பட ஈழத்தின் தலை உறுப்பாய் விளங்கும் யாழ்ப்பாணம் காலத்திற்குக் காலம் நாட்டைப் பல்துறையில் வழிநடாத்தும் மூளை வளம்படைத்த தலைவர்களைத் தோற்றுவித்துள்ளது. இதனுற்தான் போலும் சில காலத்திற்கு முன் ஒரு மூதவை உறுப்பினர் பின்வருமாறு கூறினுர். "When-other grow their grains we grow our brains" (மற்றையோர் தானியங்களைவளர்க்க யாம் எம் மூளையை வளர்க்கிருேம்).

யாம் வரலாற்றுக்கண் கொண்டு பார்க்கும்போது ஏறக்குறைய இதுவரை குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் உடைய 75 பல்துறை அறிஞர்களை யாழ்ப்பாணம் உருவாக்கியுள்ளது ஒவ்வொருவருடைய பணியும் தனிச் சிறப்புடையதெனினும் ஆறுமுக நாவலர் தன்னகத்தே பல சிறப்பியல்புகளைக் கொண்டு தமிழ் இனத்தின் மிக நெருக்கடியான காலத்தில் தோன்றி தலைக்கெனத் தனி ஒரு வழிவகுத்து பணியாற்றியதால் அவர் நாமம் மக்கள் நாவில் நிலைத்துவிட்டது. "நற்றவா உன்னை யான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே" என்று ஒரு சிவனடியார் செப்பிய தற்கமைய நாமும் எம்மையறியாமலே எம் வாழ்வில் பல தடவை நாவலரின் பெயரை உச்சரிக்கும் அளவிற்கு அவர் எம் வாழ்வோடு கலந்துவிட்டார்.

1822 டிசம்பர் 18இல் தோன்றிய நாவலர் 5-12-1879இல் தனது 57 வயதை எட்டிப்பிடிக்கையில் தன் வாழ்வை முடித்துக் கொண்டார். அவர் இன்று மறைந்து 90 ஆண்டுகள் ஆகின்றன. ஆம்; ஒரு நூற்றுண்டை எட்டிப்பிடிக்கும் அளவிற்குக் காலம் கடந்து செல்கிறது. ஆனல் அவர் நினைவு மட்டும் காலவெள்ளத்தில் அழுந்தாது அந்த வெள்ளத்தில் மிதந்து எம உள்ளத்திலஒளி விடுகிறுர். இது வொன்றே அவரின் பணியின் பாங்கினைப் பாரினுக்குப் பறைசாற்றப்போதிய சான்ருய் அமைகிறது.

## நாவலின் பிறப்பிடம் நல்லூர்:

யாழ்ப்பாணத்தின் தலைநகராய் விளங்கிய நல்லூர் மணிமுடி தாங்கிய மன்னர் ஆண்டதினுல் மட்டும் பெருமையுடையதல்ல. மணிமுடி தாங்கிய மன்னரோடு தமிழ் அன்னைக்கு இலக்கிய அணிகள் அணிந்த அறிஞரைத் தோற்றுவித்ததாலும் சிறப்புப் பெறுகிறது. அரசர் அரசகேசரி தொட்டு சொற்கலை வல்லுனர் நல்லூர் ஞானப்பிரகாசர் (அருள் ஒளியாளர்) ஈருகத் தமிழ்வளர்த்து சான்றோர் பலர் கல்லூரிலேயே தோன்றினர். இந்த நல்லூர் தான் நாவலரின் பிறப்பிடம் நற்றமிழன் வளர்ப்பிடம்.

## நாவரை நாவலியூர் கவிஞர் வாழ்த்தும் முறை

நாவலர்இவ்வுலகில் குறிப்பாக யாழ்பாண மண்ணில் ஏன்தோன்றினுர் என்ற கேள்விக்கு பலர் பல விளக்கம் கூறுவார்கள். எனினும் "தெய்வத் தமிழ் வளநாடு செய்த தவப்பயனுல் செய் தமிழ் மக்கள் புந்தியினிக்க தெள்ளமுதத் தேனுய் வரமருள் சைவத் திருநெறியுய்ய வந்தருள் தேசிகள்" என நாவலியூர் தமிழ்த் தாத்தா தகைசான்ற முறையில் வாழ்த்தும் முறையாம் ஏற்கத்தக்க எழில்மிகு கூற்றேயாகும். நாவலரே தன்வாழ்வின் குறிக்கோளை 'நிலையில்லாத என் சரீரம் உள்ள பொழுதே என்கருத்து நிறைவேறுமோ நிறைவேருதோ என்னுங் கவலை என்னை இரவும் பகலும்வருத்துகின்றது. அக்கருத்து இது. தமிழ்க் கல்வியும், சைவசமயமும் வளர்ச்சியடைவதற்குக் கருவிகள் முக்கிய தலந்தோறும் வித்தியாசாலைதோற்றுவித்தலும் சைவப்பிரசாரம் செய்வித்ததுமேயாம் என நவின்ற கருத்துமேலே மதியழகனுர் (சோமசுந்தரனுர்) வாழ்த்தியவளம் தெரிந்த மொழிக்கு வலிவூட்டுகிறது.

## நாவலர் வாழ்ந்த காலத்தில் யாழ்ப்பாண நிலைமை என்ன?

நாவலர் தோன்றியகாலத்தில் தமிழ் மக்கள் மொழியில் ஆங்கிலத்திற்கும், நெறியில் கிறித்தவத்திற்கும், பண்பாட்டில் மேல் நாட்டு வாழ்க்கை முறைக்கும் அடிமையாகி தன் நிலை கெட்டுதாம் ஒரு தனியினமாக வாழ முடியாத நிலையில் தத்தளித்தனர். இன்று ஆளுகின்ற இனத்தின் மொழிக்கும் சமயத்திற்கும், பண்பாட்டிற்கும் அடிமையாகிக்கொண்டு வரும் சில தமிழர் போல் அன்று அரசாண்ட ஆங்கிலேய இனத்தின் மனப்போக்கிற்தமைய எம் முன்னேரின் மனப்போக்கும் மாறத்தொடங்கியது உயிரினும் பெரிது மானம் என்றும், எப்படியும் வாழ்வதைவிட இப்படித்தான் வாழ்வதில் பொருள் உண்டு—பயன் உண்டு என எம் முந்தையோர் முடிவுகட்டியிருப்பினும் நாவலர் காலத்தில் வாழ்ந்த தமிழர் பலர் யாம் உண்டு எம் குடும்பம் உண்டு எம் வயிறு நிறைந்தாற்போதும் என்ற உளப்போக்கோடு வாழ்ந்தனர். வழி தவறிச் சென்ற இவர்கள் வாழ்க்கையை வழுப்படுத்தி செம்மையுறச் செய்தவர் நம் நாவலர். வடநாட்டில் தயானந்த சரசுவதி செய்த பணியை, தென்நாட்டில் இராமலிங்க வள்ளல் செய்த பணியை ஈழத்தின் தென்பகுதியில் அனகாரிக்க தருமபால செய் தொண்டை நாவலர் ஈழத் தமிழருக்குச் செய்தார்.

## நாவலர் செய்த புரட்சி

நாவலர் தோன்றியிராவிடின் தமிழர் ஆங்கிலேயராக மாறியிருப்பர் என்று யாம் கூறவரவில்லை. ஆனல் ஆங்கில வேட்கையில் ஓங்கி மேலை நாட்டு வாழ்க்கை முறைக்குஅடிமையாகி தமிழ் என்ற நிலையும் கெட்டு ஆங்கிலேயர் என்ற முழு நிலையையும் பெருது இரண்டும் கெட்ட நிலையில் வாழ்ந்து அழிந்திருப்பர். இவை அனைத்திற்கும் மேலாக 100க்கு 80 விழுக்காடு தமிழர் சிவநெறி விடுத்து புறநெறியாம் கிறித்தவ நெறி புகுந்திருப்பர். அம்பலவாணர் அந்தோனியாகவும், ஆறுமுகம் அலோசியசாகவும், இளையதம்பி இம்மானுவேலாகவும், மங்கையக்கரசி மாகிறட்டாகவும், திலகவதி திரேசாவாகவும், எழில் அரசி எலிசபெத்தாகவும் பெருமளவில் மாறியிருக்கும் வருந்தத்தக்க நிலை ஏற்பட்டிருக்கும். ஈழத்தில் வடமேற்கரையில் உள்ள நீர்கொழும்பு, சிலாபம் முதலிய இடங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் முதலில் மதம் மாறி இன்று இனமும் மாறி வரும் இழிநிலைநாவலர் பணியின் சிறப்பினை முக்கியத்துவத்தை உலகிற்கு எடுத்துக் காட்ட போதிய சான்ருய் அமைகிறது.

## எதிரிகளை எதிரிகள் கையாண்ட வழிகளிலே வெற்றிகண்டார்:

கிறித்தவ மதத்தினர் என்னென்ன வழிகளைக் கையாண்டு தம் மதத்தைப் பரப்பினரோ அதே வழிகளை நாவலரும் கைக்கொண்டு சைவத்தைப் பரப்பினுர். கிறித்தவ மதத்தினர் தம் கொள்கைகளைப் பரப்ப சிறு சிறு வெளியீடுகளை வெளியிட்டனர். அச்சகங்களை உருவாக்கி பள்ளிக்கூடங்களை தோற்றுவித்தனர். நாவலரும் உங்களுக்கு யான் குறைந்தவன் அல்ல என்று கூறுவதுபோல் அவர்கள் ஈடுபட்ட அதே துறைகளில் ஈடுபட்டு செந்தமிழை ஊட்டி சிவநெறியைப் பரப்பினர். அதோடு செய்யுள் நடையை விடுத்து மக்கள் புரியும் முறையில் எளிய வசன நடையில் குறியீடுகளோடு நூல்களை வெளியிட்டார். குறியீடு முறை தமிழுக்குப் புதிது எனினும் தமிழை வளம் படுத்த அது துணைபுரிந்ததால் அதனை ஏற்ருர் நாவலர்.

## நாவலரின் அரசியற் பணி

மொழிப்பணியும், சயத்தொண்டும் ஆற்றிய நாவலர் அரசியலைத் துறந்தார் இல்லை. அரசியலில் அறம் நிலைத்தாற்தான் வாழ்வில் நிலையான ஆக்கம் காணமுடியுமென்பதை நாவலர் உணர்ந்தார். அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்பதற்கமைய ஆளுகினறவரின் உளப்பாங்கை ஆளப்படுவர் ஏற்பர் என்பதை நாவலர் கண்டார். இவர் காலத்தில் இளைஞர் இராமநாதனுக்கும் முதிர்ந்த வழக்குரைஞர் பிரிட்டோ அவர்களுக்கும் 1879ஆம் ஆண்டிற் குரிய சட்ட சபைத் தேர்தல் நடைபெற்றது. இதில் பிரிட்டோ அவர்கள் வெல்லும் அறிகுறி கூடத் தென்பட்டது. ஆனல் நாவிறு படைத்த நாவலர் அவர்களோ இராமநாதன் அவர்கள் தான் தமிழரைத் தக்க வழியல் வழிநடாத்தத் தக்க தகமை உடையார் என்பதை உணர்ந்து தன் தொய்வு நோயையும் பொருட்படுத்தாது பல கூட்டங்களில் அவர் சார்பில் குரல் எழுப்பினுர். அவருக்கு வெற்றிவாகையும் சூட்டினுர். நாவலரின் நல் வாழ்த்தோடு அரசியலில் புகுந்த இராமநாதன் ஈழத்திற்கும் குறிப்பாக ஈழத்தமிழ் இனத்திற்கும் அரை நூற்றுண்டாக ஆற்றிய பணி அளவிடற்கரியது. அது காலத்தை வென்று ஞானத்தில் என்றும் நிற்கும் சாலச் சிறப்புடைய பணி என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. நாவலரின் அரசியற்பணி, நாம் சமயப் பணிதான் செய்வோம், எமக்கு இலக்கியப் பணியிற்தான் ஈடுபாடு எமக்கு அரசியல் வேண்டாம் என்று ஒடி ஒதுங்குபவர்க்கு பிரச்சனைகளை தட்டிக் கழிப்பவர்க்கு நல்ல பாடமாக அமையட்டும். எம் வாழ்வோடு பின்னிப்பிணைந்த அரசியலை யாம் வெறுப்பதில் பொருள் இல்லை. அரசியலில் அழுக்கு இருக்கலாம். அந்த அழுக்கைத் துடைக்கிற ஆற்றல் ஏன் நம்மிடை இல்லையென்று கருதவேண்டும். உள்ளத்தில் உறுதி உண்டெனில் வெற்றி நமதே.

## சமூகப் பணி

நாவலரின் பணி பல்துறையில் பரந்துகிடக்கிறதெனினும் அவற்றைத் தமிழ்ப் பணி, சமயப்பணியென இரு பெரும் பிரிவாக பிரித்துக் கூறல் தவறுடைத்தன்று. ஆனல் அதேநேரத்தில் நாவலருக்கு சமூகப் பணியில் நாட்டம் இல்லையெனக் கருதின் அது தப்பெண்ணம் என்றே கருதப்படும். நாவலரின் மாணவர் ஒருவர் அம்மை நோயினுல் வருந்திய பொழுது அவரை அடிக்கடி சென்று பார்வையிட்டு ஆவன செய்து ஆறுதல் மொழி கூறியவர் நம் நாவலர். உங்களுக்கு இந் நோய் தொற்றிவிடும் என நாவலரின் நண்பர்கள் அவரை எச்சரித்தபோதும் நாவலர் தன் கடையுணர்ச்சியில் இருந்து பின்வாங்க மறுத்தார். அது மட்டுமல்ல நாவலரின் இறுதிக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பேதிநோய் (Cholera) ஏற்பட்டுமக்கள் துயர் உற்ற காலத்தில் அரசாங்க அதிபர்களோடு வாதிட்டு மக்கள் நலம் கருதிப்பாடுபட்ட நாவலரின் தொண்டுள்ளத்தை யாம் எளிதில் மறக்கமுடியாது.

## செந்தமிழ் சிவ நெறிப்பணி:

செந்தமிழ் மக்கள் சிவநெறியிலிருந்து புறநெறி புகாதிருக்க கல்வி அறிவு வேண்டும் என்பதை நாவலர் நன்குணர்ந்தார். தன் சிந்தனையை செயலாக்கும் முறையில் யாழ்ப்பாணத்திலும் சிதம்பரத்திலும் கல்லூரிகளை நிறுவினுர். அச்சுப் பொறி நிலையங்களைத் தோற்றுவித்து சமய, இலக்கிய

(12ம் பக்கம் பார்க்க)

நல் வாழ்த்துக்கள்!

இலங்கையின் அபிமான சிகரெட்டான

திரீரோஸஸ்




தயாரிப்பாளர்களான

சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று சொல்லும் பொருளும் ஓசையும் ஒருங்கு ஒத்து முடிய வெட்டு ஒன்று துண்டிரண்டாக' வரைவிலக்கணம் கூறவந்தவர். ''ஆகா! சந்திரவதனம்! என்று காதல் வசனம் பண்ண வந்தவரல்லர்.

இப்போதைய எழுத்தாளர்களிற் பலர் தமக்கென ஒரு நடையை—பாணியை—வகுத்துக்கொண்டு எல்லாவற்றையும் — காதற்கதை என்றாலும், கட்டெறும்பைப்பற்றிய கட்டுரை என்றாலும்—கலித்தொகை விமரிசன மென்றாலும்—அந்த நடையிலே சொல்ல முயல்கிறார்கள். இதனால் தோல்வி அடைகிறார்கள்; வாசகர்களைச் சலிப்படையச் செய்கிறார்கள். சொல்லும் பொருளுக்கேற்ப, கருத்துக்கேற்ப—நடைவித்தியாசப்படும் என்பதை அவர்கள் உணர்வதில்லை. கருத்துக்கு நடையேயல்லாமல் தமது நடைக்குள் கருத்தைக் கொண்டு வருதல் கூடாது. சிலகாலமாக எளியநடைவேண்டும் என்று சிலர் கூக்குரலிட்டார்கள். அந்தக் கூச்சலைப்பற்றி விமர்சிக்கும்போது 'தி.ஜ.ர' கருத்துக்கேற்ற நடை வேண்டும் என்பதை அருமையாக வற்புறுத்தியிருக்கிறார். அவர் கூறுவது இது:—

''நடையில் ஓர் இயல்பும், ஜீவனும் தெளிவும் வேண்டுமென்றால் சாத்தியம். எதை எடுத்தாலும் எளிய நடையென்பது எப்படி முடியும்? கவிதைக் கனவுகளையும், ஓசையோடு பொருளையிழைக்கும் மதுரவர்ணனைகளையும், சிடுக்குகள் நிறைந்த கலா நுட்பக்கட்டுரைகளையும் எளிய நடையில் எழுதுவதென்றால் எப்படி முடியும்?... நல்ல கருத்துக்கள் அவற்றிற்குப் பொருத்தமான வார்த்தைகள்— இவைதான்நமக்கு வேண்டுமேயன்றி, அர்த்தமில்லாமல் 'இலக்கியத்தில் ஜனநாயகம்' வேண்டுமென்றோ 'எளியதமிழ், எளிய தமிழ், என்றோ போடும் வெறுங் கூச்சல்கள்வேண்டியதில்லை' இந்தக் கருத்துக்கேற்ற நடை— சொல்லும் பொருளுக்கேற்ற நடை— என்ற அம்சத்தில் நாவலரின் ஸ்தானத்தை யாரும் மிஞ்சிவிட வில்லை. ''உத்தியோகம் வேறுபட வேறுபட உடைகள் வேறுபடுவது போலநாவலருக்குச் சந்தர்ப்பங்களினாலே உணர்ச்சி வேறுபடும்தோறும் நடை அவர் அறியாமலே வேறுபட்டிருக்கிறது. பலவேறு நடையில் நாவலர்தந்த தமிழ் நடந்திருக்கின்றது. பாலர்கள் தொடக்கம் பண்டிதர்களுக்கும் அப்பாலே ஆகாயக்கப்பல்வரை அது அளாவியிருக்கின்றது'' என்று ஒரு விமர்சகர் குறிப்பிட்டிருப்பது உண்மையிலும் உண்மை.

### சில உதாரணங்கள்

''ஆஹா! அக்கவிதையின் சுவை தெவிட்டாதினிக்கிறது. ஆசிரியரின் கவிதைகளில் மின்னல் வெட்டுகிறது. தென்றல் வீசுகிறது. ஆனந்தம் குமிழியிடுகிறது.' என்று வார்த்தைப் பந்தல் போட்டுவிட்டு எந்த இடம் எதனால் சுவைக்கிறது என்று காட்டாமல் செல்லும் இக்கால விமர்சகர்களைப்போல, நாவலர் வசனநடை மிகமிகநன்றாயிருக்கிறது. என்று சொல்லிவிட்டு சில உதாரணங்களையாவது காட்டாமல் போக என்மனம் ஒப்பவில்லை.

பாலபாடங்கள், சைவவினா விடைகள் இலக்கணச் சுருக்கம் என்பவை சிறுவர்க்கென்றே நாவலரால்எழுதப்பட்டவை. முதலாம் பாலபாடத்துச் சொற் கூட்டங்களை அவதானித்தால் (புடைவை, பழமை, உடைமை, வெய்யில், தீபாவலி, சர்த்தி, எண்ணெய், சர்க்கரை கற்கண்டு திறவுகோல், சொப்பனம்) அவை பிற்காலத்தில் நாம் பிழைவிடும் சொற்களின் சரியான உருவங்களாக இருக்கும். அவற்றை இளமைக் காலத்தே பயிற்சிசெய்து வைத்திருந்தோமானல் சொற்பிழை நம் வாழ்க்கையிலே ஏற்பட முடியாது. அடுத்து வசனத்தொகுதிக்குப்போனால் 'கடவுள் ஒருவர் இருக்கிறார். கடவுள் எங்கும் இருக்கிறார். கடவுள் எல்லாம் அறிவார். கடவுள் எல்லாம் வல்லவர். கடவுள் இரக்கம்உடையவர். கடவுள் நம்மைக் காக்கிறார். கடவுளை ஒருநாளும் மறவாதே கடவுளை எந்நாளும் வணங்கு' எனக் கடவுளின் இலக்கணத்தோடு பலவகைப்பட்ட விடயங்களையும் ஓர் ஒழுங்கோடு சொல்வதுதெரியும். 'பள்ளிக்கூடத்துச்சுவரிலாவது தூணிலாவது சார்ந்து அதனைஅழுக்குப் படுத்தாதே, என்பது 37ம் பாடத்து முதலாவது வசனம். ஆவது, ஆயினும், ஆக எனும் என்ற சொற்கள் வரவேண்டிய இடம் எது? என்று உணராமல் அல்லது, அன்றி, அல்லாமல் என்பதைச் சேர்த்து இப்போது பலர் எழுதுகிறார்கள். நாவலர் பாலபாடங்கள் இளமையிலேயே அம்மயக்கங்களை நீக்கும் மருந்தாக நமக்கு உதவுகின்றன. விபூதியை எப்படித் தரித்தல் வேண்டும்? என்ற வினவுக்கு 'நிலத்திலே சிந்தாவண்ணம் அண்ணாந்து 'சிவ சிவ' என்று சொல்லி வலக்கையில் நடு விரல்கள் மூன்றினாலும் தரித்தல் வேண்டும்' என்று அருமையாக எழுத நாவலர் ஒருவரால்தான் முடியும்.

குற்றியலுகரமாவதுயாது? என ஒருபண்டிதரை கேட்டேன் தனிக் குற்றெழுத்தல்லாத மற்றைய எழுத்துக்குப் பின் சொல்லிறுதியிலே வல்லினமெய்யின்மேல் ஏறிநிற்கும் உகரமாம்' என இலக்கணச் சுருக்கத்து வார்த்தைகளாலேதான் பதில் கூறினார். அவர் மாத்திரமல்ல. எல்லாப் பண்டிதர்களுமே அப்படித்தான் கூறுவார்கள். நன்னூற்சூத்திரம் மறந்த பண்டமாகிவிட்டது; முதல் நூலையே மறக்கச் செய்து அருமையான வரைவிலக்கணத்தோடு மேலெழுந்து நிற்கச்செய்த வசனம் இந்த வசனம்.

சிறுவர்கள் மனப்பாடம் செய்வதற்காக வரைவிலக்கணமுறையிலே திட்டவட்டமாக எழுதிய இந்த வசனங்களோடு இரண்டாம் பாலபாடத்திலுள்ள இருபத்தொரு கதைகளையும் பார்த்தால் அந்த நடை பேதமடைந்து வேறொரு கோணத்துக்கு நம்மை அழைத்துச் செல்வது புலனாகும்.

பெரிய புராண, திருவிளையாடற் புராண வசனங்களின் ஆற்றொழுக்கமான நடையைப்பற்றி மு. அருணாசலம், செல்வக் கேசவராய முதலியார் என்போர் கூறிய சிறப்புகளை முன்னமே குறிப்பிட்டிருக்கிறேன். [illegible] ரிலே, வேடர்களுக்கு அரசனாகிய நாகன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் மனைவியின் பெயர் தத்தை. அவ்விருவரும் நெடுங்காலம் புத்திர பாக்கியம் இல்லாமையால் அதிதுக்கங் கொண்டு, குறிஞ்சி நிலத்திற்குக் கடவுளாகிய சுப்பிரமணிய சுவாமியுடைய சந்நிதானத்திலே சேவற் கோழிகளையும் மயில்களையும் விட்டு, அவரை வழிபட்டு வந்தார்கள்'' என அவ்வசனங்கள் செல்லும், சாதாரண படிப்புடைய மக்களும் கதைகளை அறிவதற்காக நீட்டி மூழக்காமல், கருப்பொருளைச் சிதைக்காமல், தூய்மை கெடாமல் இவற்றை நாவலர் பெருமான் எழுதியுள்ளார். இந்த நடையின் வெற்றியினாலே யாழ்ப்பாணத்துப் படித்த வர்க்கத்திலும்கூட, மூலநூலான பெரிய புராணக் கதைகள் இப்படியான வசனத்தில் செல்ல, முற்பகுதியிலுள்ள திருக்கைலாயவர்ணனை வசனத்துக்கே ஓர் எடுத்துக்காட்டாகவேறொரு விதமாக விளங்குகின்றது.

'அநாதிமலமுத்தாய், நித்தியராய், வியாபகராய் எல்லாவறிவும் எல்லா முதன்மையும் எல்லாவநுக்கிரகமுமுடையராய்'' என்று தொடங்கும் அந்த வசனம், 'திருக்கைலாச மலையிலே, செம்பொற் றிருக்கோயிலிலே, பூதர்களுட்பலர் நானாவித வாத்தியங்களை முழக்க, பலர் இருபுறத்தும் வெண்சாமரம்வீச, வேறுபலர் ஆலவட்டம் அசைப்ப'' என தொடர் வசனத்திலே வர்ணனைகளை எப்படி எழுத வேண்டுமென்பதை நன்கு விளக்கிக் காட்டி முப்பத்தாறு வரிகளிலே (சைவசமயத்திலுள்ள முப்பத்தாறு தத்துவங்களை ஞாபகஞ் செய்வதைப்போல) இடையிலே முற்றுப்புள்ளி ஒன்றுமில்லாமல் 'வீற்றிருந்தருளுவர்' என முடிகிறது. 'சிவபெருமான்— வீற்றிருந்தருளுவன்' எனவும் முடித்திருக்கலாம்; இந்த இடத்தில் வரும் 'ர' கா இறுவாயை 'ன' கர இறுவாயாகவே கொள்ளவேண்டும். திருக்குறள்கூட 'அகர முதல என்று தொடங்கி காமத்துப்பால் கடைசிக்குறளில்' கூடிமுயங்கப் பெறின்' என 'னகர' இறுவாய் பெற்று அழகாக முடிகிறது; அதே போல இந்த வர்ணனையும் 'அகர'த்தில் தொடங்கி 'ன' கர இறுவாய் பெறுதலைக் கண்டு உள்ளம் பூரிக்கிறோம்; இப்படியான ஒரு வர்ணனையை வேறு யாரும் இன்னும் எழுதிவிடவில்லை. என? நாவலர்கூட வேறோரிடத்திலும் எழுத முற்படவில்லை.

நாவருடைய கண்டனங்களின் வேகம் இராமபாண வேகம். எதிரியைச் சல்லடைக் கண்களாகத் துளைத்து அணு அணுவாகச் சித்திரவதை செய்யும். நாவலர் பிரபந்தத்திரட்டில் எந்த இடத்தைத் தொட்டாலும் இந்த உண்மை புலனாகும்.

''பெயர் வெளிப்படுத்தாது மறைவில் நின்று ''கத்தோலிக்கப் பாதுகாவலன்' வாயிலாக வம்பிலக்குத் தொடுக்கும் கோப்பாய் மாணுக்கனே! நீ எந்தப் பள்ளிக் கூடத்து மாணக்கன்? யார் மாணுக்கன்? உன் பெயர் யாது? சமயம் யாது? புரோடெஸ்டன்ட சமயம் என்னையாயின் விக்கிரக வணக்கஞ் செய்யுங்கத்தோலிக்கர் பொருட்டு வாதிகப்புகாய்...... கத்தோலிக்க சமய மென்னையாயின் கோப்பாயிலே கத்தோலிக்க வித்தியாசாலையாவது கத்தோலிக்க குடும்பமாவது கண்டுமிலேங் கேட்டுமிலேம். மாணுக்கனே! கத்தோலிக்க மதத்தில் எப்பொழுது புகுந்தாய்?''

நாவலர் அவர்களது கிலேடையும் நையாண்டியும் கண்டனத்தில் தனி உயிர்பெற்றுத் திகழ்கின்றன. எதிரியை எதிர்முகமாகநிறுத்தி நெருக்குவதுபோல அவை காணப்படுகின்றன. 'உங்கள் கோயிலுக்குக்'' குழந்தைவேல் அமையும்; முத்துக்குமார் வேண்டாம்'' என்னையாயின் முத்துக்குமாரரை ஏன் உள்ளே ஏற்றீர்களோ! ஏற்ற நீங்கள் முத்துக்குமார் தமக்குரிய தானத்துள்ளே புக விட்டு விடலாமே! 'முத்துக்குமார் உள்ளே புகுந்தால் தமது தேவியார் குழந்தைவேலோடிருக்கக்கண்டு கோபித்துக்கொண்டு புறப்பட்டு ஓடிவிடுவார்' என்பாயோ?...ஓகோ! முந்தியதற்கு அழுத நீ இதற்கு ஏன் உடம்பு குலுங்கச் சிரிக்கிறாய்? சொல்லு சொல்லு. ஒன்றுஞ் சொல்லுகிறாயில்லையே! முடிவு இதுதானென்றெண்ணிச் சிரிக்கிறாயோ'

நாவலர் மனிதர்களை அறிமுகஞ்செய்துஎழுதிய துணுக்குகளில் ஒன்றை பாருங்கள் ''தில்லையம்பலம், சங்கரப்பிள்ளை. இவர் தீவுபற்று நொத்தாரிசு குமரர். சுப்பிரீங் கோட்டுப் பிறக்கிறாசி. இத்தேசத்திலும் வடதேத்திலும் பற்பல தருமங்கள் செய்து புகழ் படைத்த சைவப் பிரபுவாகிய சிதம்பரசுப்பையச் செட்டியாருடைய மருமகன் பிரசித்திபெற்ற வர்த்தகராகியமுத்துக்குமாரச் செட்டியாருடைய மைத்துனர்: வெகுசுற்றத் தொடர்புடையவர்; பரம்பரைச் செல்வர்.

தனது கண்டனங்கள் கற்றோர்க்கும் மற்றோர்க்கும் விளங்குமாறு எழுதப்பட்டவை என்பதை நாவலர் பல இடங்களில் சுட்டிக்காட்டியிருக்கிறார், என்பதைநாம் மறந்து விடலாகாது.

நாவலர் எழுதிய முன்னுரைகள் நூலின் பிண்டப் பொருளை எடுத்துக் காட்டுவதோடு அமைந்து விடுகின்றன. அதில் தான் ஏடுதேடி ஊர்கள்தோறும் ஓடிய வரலாறுகள், மெய்வருத்தங்கள், பரோபகாரங்கள் வருவதில்லை.

பெரிய புராண சூசனம் படித்த பண்டித வர்க்கத்துக்கே உரியனவாய் தடையும் விடையுமாகச் சென்று முடிகின்றன.

நாவலர் எழுதிய, 'ஓசை பெற்றுயர் பாற்கடலாகிய' வசன சமுத்திரத்திலே என்னால் காட்டப்பட்டவைகள் சில திவலைகள். சிறுவர்க்கெழுதியவரைவிலக்கண வசனங்கள், வினாவிடைகள், பெரிய புராண திருவிளையாடற் புராணக்கதை நடைகள், திருக்கைலாய வர்ணனை நடை, குத்திட்டி போற்குத்தும் கண்டனநடைகள், அறிமுகம், முகவுரை, பண்டிதர்களுக்கேற்ற சூசனம் என்பனவற்றைத் தொட்டுக் காட்டியிருக்கிறேன். அறிஞருலகு நாவலர் நடைபற்றி இன்னும் ஆராயலாம். ஆராய வேண்டும். அது என் ஆசை. 'வன்னநடை வழங்குநடை வசனநடை எனப் பயிற்றி வைத்த மன்னிவளர் நாவலன் தன் அழியா நல்லொழுக்கநடை வாழி வாழி!

---

## விற்பனையாளர்கள் தேவை

சுதந்திரன் விற்பனையாளர்கள் இல்லாத ஊர்களில் சுதந்திரன் விற்பனை செய்வதற்கு முன்பணம் செலுத்தக்கூடிய ஏஜண்டுகள் தேவை

விண்ணப்பிக்கவும்; நிர்வாகி,
சுதந்திரன்.
த. பெ. இல 1183
கொழும்பு.

---




REGD: TRADE MARK

ரணசிகிச்சையின்றி வலிமயமான நமைச்சலையுடைய இரத்த சீழ் மூலத்தை குணமாக்குவது

# ரிஷி லேகியம்

(ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்)

எமது ஆயுர்வேத டாக்டர் T. H. மதுரநாயகம் வைத்தியாராஜ் வைத்தியமணி அவர்களின் மேற்பார்வையினாலும், எமது ஸ்தாபனத்தின் 69 வருட அனுபவத் திறமையினாலும், ஆயுர்வேத சாஸ்திர முறைப்படி அணுவளவும் தவறாது தயாரிக்கப்பட்டதுமான எமது ரிஷி லேகியத்தைப் பாவித்து பலர் வயிற்றுவலி, வயிற்றில்கட்டி, அசதி, சோம்பல், கைகால் உளைச்சல், பித்தவாய்வு, சொறி, சிரங்கு, அரிப்பு, தடிப்பு, ஊரல், கண் எரிச்சல், பசியின்மை, அஜீரணம், உள் மூலம், வெளி மூலம் முதலான வியாதிகளிலிருந்து குணம் பெற்றுள்ளார்கள். சுகபேதியாகவும் உபயோகிக்கலாம்.

இன்றே ரிஷி லேகியம் பாவித்துப் பயனடையுங்கள்.

சிறியது 4/00. பெரியது 7/00 தபால் செலவு 1/35

தயாரிப்பாளர்:—

ஞானசுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் இன்றிருந்தால்....!

த. இராசலிங்கம் எம். ஏ.

ஈழவள நாட்டின் இந்து சமய மறுமலர்ச்சியின் முன்னோடி நாவலர் அவர்கள், அம்மறுமலர்ச்சியின் பிரதம சிற்பியும் நாவலரே யாவர். எனவே அப்பெரியாருக்கு இன்று பெருவிழா எடுக்கப்படுகின்றது. இன்றைய சைவப் பெரியார்களுடைய சக்திகள் யாவும் ஒன்று திரட்டப்பட்டு, அரசியல் அந்தஸ்துகளுக்கு அப்பால் பேணப்பட்டு ஆக்கம் பல புரியும் நோக்கமாக வலுப்பெற்று இயங்கி வருவதை நாம் காணுகின்றோம். இம்முயற்சியைப் பாராட்டுகின்றோம். சைவ சமயத்தின் பாதுகாப்பிற்கும் வலிமைக்கும் சவால் விட்டுக் கொண்டு இருக்கும் சக்திகள் எத்தனை! இச்சூழ்நிலைகளின் கோரத் தாக்கங்களின் மத்தியிலும், கருமமே கண்ணாயிருந்து நாவலர் பெருமானுக்குப் பெருவிழா எடுக்கும் சைவப் பெரியார்களுக்கும், சைவாபிமானிகளுக்கும் அவர்களுடைய சிந்தனைக்கு ஒரு கூற்று நல்லதோர் நயமான வேண்டுகோள்.

மேன்மை கொள்சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம் என்ற கோட்பாட்டை, தூய முறையில் உருவாக்கிய பெருமை நாவலருக்கும் உண்டு. நாவலர் பெருமான் வாழ்ந்த காலம் பத்தொன்பதாம் நூற்றாண்டு. அன்று இந்நாட்டின்கண் நிலவிய சமூக, பொருளாதார நிலை மிகக் குன்றியிருந்த காலம். வெளிநாட்டுத் தொடர்பு ஈழநாட்டு மக்களுக்குக் குறைவாக இருந்த காலம். வாழ்க்கை வசதி, கல்வி அபிவிருத்தி, வாழ்க்கை முறை, அறிவியல், அபிவிருத்தி முதலிய அம்சங்கள் குன்றிக் குறைவாக இருந்த காலம் அது. எனவே நாவலர் அவர்களை சைவ சமயத்தின் பாதுகாவலன், இந்து மத மறுமலர்ச்சியின் பிரதமகர்த்தா ஆக்கிய பெருமை அன்று நாவலர் அவர்கள் வாழ்ந்த பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலவிய சமய சமூகச் சூழ்நிலையே என்பதையே நாம நினைவில் கொண்டு அல்லவா செயலாற்ற வேண்டும். காலத்தால் உருபெற்றோர் பலர் ஆனால் காலத்தை உருவாக்கியவர் சிலர்.

அன்று நிலவிய அந்நிய ஏகாதிபத்தியத்தின் செல்வாக்கால் பல்வேறு காரணங்களைக் குறிக்கோளாகக் கொண்டு மதமாற்றம் நடைபெற்றது. சைவ சமயத்தவர் பலர் கிறிஸ்தவ சமயத்திற்கு மாறிய காலம். அவ்வாறு தீவிரமான முறையில் பெருந்தொகையான இந்துக்கள் தம் சைவ சமயத்தை விட்டு கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிய சூழ்நிலை நாவலர் பெருமானுடையசிந்தனையைக் கிளறியது. உள்ளத்தைத் தொட்டது. கண்களை விழிப்புறச் செய்தது.

## நாவலரின் தொண்டு

'சைவ சமயம் குன்றிப் போகின்றது. மக்கள் பிறசமயத்தைத் தழுவுகின்றார்கள்' என்பதை நாவலர் அவர்களே உணர்ந்து கூறுகின்றார். அன்று நிலவிய இந்தச் சூழ்நிலையில் இந்த நாவலர் பெருமான் அவர்கள் செய்த தொண்டுதான் என்ன?

தனக்கு மிகவும்ஒவ்வாதவர்களுடைய கிறிஸ்தவ சமயச் சூழலிலே சேர்ந்து, அவர்களுடன் பழகி, அவர்களுடைய வழி வகைகளை நன்கு அறிந்து, அவர்கள் எவ்வாறு சைவ சமயிகளுடைய மனதைப் பற்றி இழுக்கிறார்கள் என்பதை நன்கு உணர்ந்து அறிந்து. அதாவது மதமாற்றம் என்னும் கொடிய நோயின் அடிப்படைக் காரணங்களை நன்கு அறிந்து உணர்ந்து அதே வழியில் சைவ சமயிகளைப் பொருளியல் முறையிலும், அறிவியல் முறையிலும் கடைத்தேற்ற முயன்றார்.

இதற்குவழிகாணும் நோக்கமாகப்பள்ளிக்கூடங்கள் நிறுவினார். இலவச கல்வி கற்பித்தார். சிதம்பரத்தில் நான் நிறுவ இருந்த பள்ளிக்கூடத்தில் வணிகம் வேளாண்மை முதலியன கற்பிக்கத் திட்டம் இட்டார்.

எனவே அன்று நாவலர் அவர்களுடைய காலத்தில் சைவர்கள் மதம் மாறச் செய்தமைக்கு அடிப்படையாக அமைந்து இருந்த பிரச்சினை தீண்டாமை என்னும் கொடிய பிரச்சினை அல்ல. ஏனெனில் நாவலர் அவர்களுடைய காலத்தில் மதம் மாற்றப்பெற்ற மக்கள் கூட்டத்தினர் தீண்டாமை என்னும் கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள் மட்டும் அல்லர். பெரும்பான்மை உயர்சமூகத்தினர் என்று அழைக்கப்படுகின்றவர்களுமே பலர் மதம் மாறினர். ஏன்? இதையே நாவலர் நன்கு உணர்ந்து தடுக்க முயன்றமையின் காரணமாகும். நாவலர் பெருமான் அவர்கள் நலிந்து வரும் ஒரு இனத்திற்காகவும, நலிந்து வரும் ஒரு சமயத்திற்காகவும் பாடுபட்டார். எனவே நாவலர் வாழ்ந்த அந்த நாளில் சாதிகளைப்பற்றியோ அல்லது சாதி என்னும் கொடுமையால் நிலவுகின்ற தீண்டாமை என்னும் கோரத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய ஒரு சூழ்நிலையே அமையவில்லை.

## இன்றைய சூழ்நிலை

ஆனால் நாவலர் பெருமான் அவர்கள் இப்பொழுது இருந்திருந்தால், வாழ்ந்திருந்தால் அவர் எந்தப்பக்கத்தில் இருந்திருப்பார்? அன்று நிலவிய ஒரு சூழ்நிலையிலும் மிக மோசமான ஒரு சூழ்நிலை அல்லவா சைவசமயத்தைப் பொறுத்தவரையில் மட்டும் அல்ல, எம் தாய்மொழியாகிய தமிழ் மொழிக்கும் பேராபத்து விளைவிக்கக் கூடிய இருண்ட கோரச் சூழ்நிலை இன்று ஈழவள நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்குச் சவால் விட்டுக் கொண்டு இருக்கின்றது.

சரித்திரம் திரும்பும்என்று கூறுவர். அன்று சைவ சமயிகள் பலர் கிறிஸ்தவ சமயத்தை நாடினர், ஆனால் இன்று சைவசமயிகள்பலர் பௌத்த மதத்திற்கு, மாறுகின்றனர். ஏன், தம தாய் மொழியாகிய தமிழ் மொழியை உதறித் தள்ளி மற்றொருவனின் தாய்மொழியைத் தழுவுகின்றனர். ஏன்? எனவே, அறிவியல் வளர்ச்சியின் பயனாக மண்ணுலக மனிதன் சந்திர மண்டலத்தில் வெற்றிகரமாக முயற்சித்துக் கால் எடுத்து வைக்கப் போகும் இந்நாளில், பலதுறைகளிலும் பல சமூக மக்களும் முன்னேற்றம் அடைந்துவரும் இந்நாளில், மண்ணுலகிலேயே அமர வாழ்வைக் காணும் இந்நாளில் விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் மனிதன்பால் அமைந்துள்ள அஞ்ஞானத்தை அகற்ற முயலும இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில், நாவலர் பெருமான் எமது மத்தியில் இருந்திருந்தால, நாவலர் அவர்கள் [illegible] பக்கத்தில் இருந்[illegible] நலிந்தார் பக்கம் இருந்திருப்பாரா? நலிவிப்பார் பக்கம் இருப்பாரா? நாவலர் அவர்களுக்கு முன்னைல் சிவாகமங்கள் நிற்குமா? திருமூல திருமந்திரங்கள் நிற்குமா? தனிப்பெரும் தமிழ் மறை திருக்குறள் நிற்குமா? அல்லது தமிழர்களின் சைவர்களின் ஒற்றுமையை, வலிமையைக் குழிதோண்டிப் புதைக்கும் இறுமாப்புக் கொண்ட பழமை விரும்பிகளின் இதயமற்ற பகுத்தறிவற்ற மனப்பாங்குடன் நிற்குமா? அல்லது அந்த மகானின் மனச்சாட்சி தான் குறுக்கே நிற்குமா? சிந்தியுங்கள் சிந்தித்தவற்றைச்செயல் படுத்துங்கள்.

### என்ன சொல்லியிருப்பார்

'கங்கைவார் சடைக் கரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர்நாம் வணங்கும்கடவுளாரே' என்ற திருமுறைக் கூற்றுக்கு இலக்கணமாக அமைந்துள்ள கங்கைவார் சடைகரந்தார்க்கு அன்பராகிய மக்களைநாவலர் அவர்கள் எட்டிப்போய் வெளியே நில் என்று சொல்வாரா? இதற்கு நேரே விடைதருமாறு சைவ சமயிகளை நாவலருக்குப் பெருவிழா எடுக்கும் நற்பணியில் ஈடுபட்டுள்ள பெரியார்களை, மனிதாபிமானமும், பகுத்தறிவும் கொண்ட சைவப் பெருமக்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

என் சிற்றறிவுக்கு எட்டிய வரை நாவலர் பெருமான் இருந்திருந்தால் அவர் கட்டாயம் வளர வேண்டிய சமூகத்திற்கு வேண்டிய பாடசாலைகளை நிறுவி, இலவசமாகச் சைவாசாரத்துடன் கல்வி கற்பிப்பார். நாவலர் பெருமான் அவர்களே தலைமை தாங்கி அவர்களைக் கோயிலுக்கும் இட்டுச் சென்று வணங்குவார். நாவலரை அப்படித்தான் நான் காணுகின்றேன்.

சிவாகமங்களைப் பற்றிக் குறிப்பிட்ட நாவலர் பெருமான் அவர்கள் 'சிவாத்மத்தைப் புறக்கணித்து மாயாவாதத்தைப் பின்பற்றுகின்றவர்கள் எரிவாய் நிலயத்திற்கு ஆளாகின்றனர்' என்று ஓரிடத்தில் கூறுகின்றார்.

எனவே மாயாவாதத்தைப் புறக்கணிக்கின்றவர்களை இப்பொழுது உள்ளவர்கள் என்ன செய்கின்றார்கள்? சிவனை வணங்குகின்ற ஒரு பகுதியினரை ஏன் ஒறுத்து வெறுத்துத் தள்ளுகின்றார்கள்? என்னே இவர்களது பகுத்தறிவு!

மேலும்நாவலர் பெருமான் அவர்கள் சைவ நெறியில் குறிப்பிடும் ஒரு கட்டத்தை எமது சிந்தனைக்குக் கொண்டுவர விரும்புகின்றேன்,

'அன்னியர்க்கும் பாசம் அறுத்திடுக பார்வையினாற் தன்னது கை வைத்தும் தலை...'

அதாவது சீடனுடையதலையில் கைவைத்து எங்கும் பரிசுத்தி அவரது பாசத்திரயத்தை நீக்கி அவனைச் சிவனாக்குதலாகும் இக் கட்டத்தில் எங்கே இந்தத் தீண்டாமை? இல்லையே! இதை நாவலர் அவர்களே ஒப்புக் கொள்ளுகின்றார். எனவே கருணை இருந்தால் எல்லாமக்களும் ஈடேற வேண்டும் என்று இருந்தும் இன்றைய ஆலயப் பிரவேச நிலை என்ன? மேற் கூறிய நாவலரே ஒத்துக் கொண்ட கருணை இருந்தால் ஆகமங்களும் ஆலயப் பிரவேசத்திற்குக்குறுக்கே நில்லா. சிவனும் குறுக்கே நில்லார். மக்களை முன்னேற்ற வேண்டும்என்ற நல்ல மனமே வேண்டும். அப்பக்குவ நிலையே மேன்மையானது; இப்பக்குவ நிலையையே சைவ சமயமும் நிலைநாட்டியுள்ளது. இந்நிலையில் நாவலர் பெருமான் இருந்திருந்தால் நம்பிக்கையாக இப்பக்குவ நிலைக்கு மக்களை, சைவர்களை இழுத்துச் சென்றிருப்பார். இருபதாம் நூற்றாண்டில் ஏற்றம் பெற்றுள்ள முன்னேற்றங்களை, அறிவியல் வளர்ச்சியை வாழ்க்கைவசதியை வாழ்க்கை முன்னேற்றங்களை நாவலர் பெருமான் அவர்கள் ஒருபோதும் புறக்கணித்திருக்கமாட்டார். மேலும் தனது சைவவினாவிடையில் அமைந்துள்ள பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கு ஏற்ற வாழ்க்கை முறைக்குத் தோதாக அமைந்துள்ள பல கருத்துக்களை மாற்றிஇன்றைய சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றி அமைத்திருப்பார் என்பதில் ஐயப்பாடில்லை.

### சிவஞான சித்தி சொல்வதென்ன?

சிவஞான சித்தியார் தான் சைவ சமய நிலைக்களனாக உள்ள பெரும் நூல். அதில் எங்கேயாவது, எந்த இடத்திலாவது சிவ வழிபாட்டிற்கோ, சைவ நெறியைப் பின் பற்றுவதற்கோ— அருகர் அல்லாதார் என்று எவரேனும் புறக்கணிக்கப்படவில்லை. இச் சிவஞான சித்தியார் சிவஞான போதத்தின் விருத்தி, இச்சிவஞானபோதம் ஓராவுக்கு, பொருள்களை வேறு வேறாகக் கூறும் சிவாகமங்களின் பிணக்குகளைத் தெளிவுபடுத்தும் பெருநூலாகும். இப் பெரும் நூலில் எங்காவது சிவனை வழிபடுகின்ற ஒருவனை வழிபாட்டிற்கு ஒவ்வாதவன் என்று கூறப்பட்டுள்ளதா? எங்கே நம் பகுத்தறிவு!

மேலும் நாவலர் ஒருஇடத்தில் கூறுகின்றார்- கலைஞானது சிவத்தன்மை அடையுமாகில சூத்திரன் அங்ஙனம் ஆகா என்பது எங்ஙனம்' நாவலர் மேற்கோள்

கந்தகலோத்திரத்தில் உள்ள ஒரு சுலோகத்திற்குத் தமிழ் உரைப் பகுதி இது. இதைத் தமிழ் ஆக்கம்செய்தவர் நாவலர் அவர்களே. இக் கூற்றின் உண்மையை நன்கு உணர்ந்து தமிழ் ஆக்கம் செய்த நாவலர் இன்று இருந்தால் ஆலயப் பிரவேசத்திற்குக் குறுக்கே நின்று, சிவனையே சிந்தையிற் கொண்டு வணங்கும் ஒரு பகுதியினருக்கு மாறுகநின்று நில் வெளியே என்று கதவுகளை அடைத்திருப்பாரா? சென்று வணங்குகின்றவர்களையும் வெளியேயர் தள்ளும் அநாகரிகச் செயல்களுக்குத் தலைமை தான்தங்கியிருப்பாரா?

இன்று சைவப் பெரியார்கள பலர் ஒன்றுகூடி நாவலர் பெருமானுக்குப் பெருவிழா எடுக்கிறார்கள். இப்பெரியார்களுக்கு பணிவான வேண்டுகோள் ஒன்று இன்று நாவலர் பெருமானுடைய நினைவுக்காகச் செய்யக் கூடிய மகத்தான பெரும் தொண்டு என்னவென்றால் வளர்ந்து வரும் சமூகத்தினருக்குக் கல்வி கற்க வசதிகளையும் தந்துதவும் முறையில் பாடசாலைகள் நிறுவுதல்என்பதே சாலச் சிறந்தது என்று நான் நினைக்கின்றேன். கல்வி கற்க வசதிகள் அற்ற இடங்களில் பள்ளிக்கூடங்களை நிறுவினால் போதாது. இவர்கள் படிக்கக் கூடிய பொருளியல் வாய்ப்பும் அமைக்க வேண்டும் சமூகத்தில் வரவேற்பு இருக்க வேண்டும். கற்றபின் நலம் பெற வாழவழி இருக்க வேண்டும்,

மேலும் நாவலர் பெருவிழாச் செயற் குழுவில் அங்கம் வகிக்கும் சைவப் பெரியார்கள் சைவ சமயத்திற்கு இன்று சவால்விட்டுக்கொண்டிருக்கும் சக்திகளுக்கும் மாற்று மருந்து காணும் துறையில் தமது சொந்தச் செல்வாக்கை, தாம் வகிக்கும் பதவிகளின் செல்வாக்கை, உண்மையான உள்ளத்தோடு. காலம் கடத்தும் சாதுரியங்களுக்கு இடம் கொடுக்காமல், தூய பணியைச் செய்து சைவத்தின் சாபக்கேடாக அமைந்துள்ள தீண்டாமை என்னும் வேண்டாமையை அகற்றி ஆலயப் பிரவேச மகத்தான தொண்டினை உடனடியாகச் செய்ய வழி அமைக்க வேண்டும். இதுவே நாவலர் பெருமான் அவர்கள்பாதுகாத்த இந்தச் சைவத் திருநெறிக்கு ஆற்றும் தூயமையும், அருமையும் மிக்க உடனடியான செயல் முறைநடவடிக்கையுமாகும் எனப் பகிரங்கமாக வேண்டுகின்றேன்.

சிம்கா (காமன்றஸ்) லிமிட்டெட்
ஸ்தாபனத்தாரின்
நல்வாழ்த்துக்கள்
தரம்வாய்ந்த பிரேசியர் தயாரிப்பாளர்கள்:
சிம்கா (காமன்றஸ்) லிமிட்டெட்
194 B, பண்டாரநாயக்கமாவத்த, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் ஆற்றிய பல்வகைப் பணிகள்

(9 பக்கத் தொடர்ச்சி)

கண்டன நூல்களை எழுத வெளியிட்டார். சைவவினு விடை, பெரிய புராண வசனம், திருவிளையாடற் புராண வசனம் நன் நூற் காண்டிகையுரைபாலபாட நூல்கள் இலக்கணச் சுருக்கம் சுப்பிரபோதம் முதலியவை அவர் எழுதிய நூல்களுள் ஒரு சிலவாகும். இவற்றை விட சொல்லுக்கு இரையாகாது பதிப்பித்த பழந்தமிழ் நூல்களும் பலவாகும். நாவலரின் பணியை தண்டதமிழ் வல்ல தாமோதரம் பிள்ளையின் பணியோடு ஒப்பிட்டு பண்டிதமணி கணபதிப்பிள்ளை பின்வரும் முறையில் கூறும் கூற்று சுவையும் உண்மையும் உடையது. இதோ அவர் பேசட்டும் "நாவலர் தமது சுற்றுடலில் உள்ள மக்களின் நிலைமையை நோக்கினார். தாமோதரம்பிள்ளை பழம் தமிழ்ச் செல்வம் பாழ் போகும் நிலையை நோக்கினார். நாவலர் அவர்களின் முயற்சி அரிச்சுவடியில் ஆரம்பமாயிற்று. தாமோதரம் பிள்ளையின் முயற்சி தொல்காப்பியத்தில் தொடங்கியது."

## அவர் வாழ்வின் குறிக்கோள்:

"ஒவ்வொரு கோயில்களிலும் சைவ சமயத்தை மக்களுக்குத் தாய் மொழியிலேயே போதித்தல் வேண்டும் என்று காமிகாமத்தில் இறைவனால் விதிக்கப்பட்டிருக்கிறது" என்று வலியுறுத்தி தமிழ் மொழி வழிபாட்டிற்கு வழிகோலியவர் வித்திட்ட நாவலர். "நிலையில்லாத என் சரீரம் உள்ள பொழுதே என் கருத்து நிறைவேறுமோ நிறைவேருதோ என்னும் கவலை இரவும் பகலும் வருத்துகிறது. ஆக்கருத்து இது. தமிழ்க் கல்வியுப சைவசமயமும் வளர்ச்சியடைவதற்குக் கருவிகள் முக்கியதலந்தோறும் வித்தியாசாலை தோற்றுவித்தலும் சைவப்பிரச்சாரம் செய்வித்தலுமேயாம்" என சிந்தை நெகிழ்ந்துருகத் தன் வாழ்வின் குறிக்கோளை எடுத்து இயம்பிய நாவலர் வீடுதோறும் சென்று பிடி அரிசி பெற்று அதுகொண்டு தென்னகத்திலும், ஈழத்திலும், பள்ளிகளும், அச்சுக்கூடங்களும் நிறுவி பண்பாட்டுப் பாலம் அமைத்து ஓயாது உழைத்த நாவலர் இவ்வுலகில் வாழ்ந்தது 56 ஆண்டுகளும் 11 திங்களுமே.

## நாவலரின் நாவன்மை:

நாவலர் பல் துறைப் பாங்கொடு விளங்கியதற்கு அடிப்படைக் காரணம் அவரின் உள்ளத் தூய்மையே. உள்ளத்தில் உண்மையொளி உண்டாகின் வாக்கினில் ஒளி உண்டாகும் என்ற பாரதியின் கூற்றும் இதனையே வலியுறுத்துகிறது. தூய்மையான உறுதிவாய்ந்த உள்ளத்தோடு நாவிறுபடைத்த நாவலர் பேசிய பேச்சில் மக்களிடை தனிமதிப்பு ஏற்பட்டது. "ஒரு பேச்சாளருக்கு நாவின் உதவி மட்டும் போதியல்ல டனையில் அடித்துச் சாணைபிடித்த போர்வாள் போன்ற பழுதற்ற கூரிய வார்த்தைகளும் போதியனவல்ல, நூலறிவு, உலகியலறிவு, பலவேறுபட்ட மக்களின மனவியல்பு, சித்தவிகாரம் ஆகியவற்றில் நனகு பழகி அவற்றுள் தோய்ந்து படிந்து இருத்தலே சிறந்த நாவன்மை பெற்ற நாவலரின் பண்பு" என்று சிறந்த பேச்சாளரின் இயல்பை "மேடைத்தமிழ்," என்ற நூல் மேன்மை மிகு முறையில் மொழிகிறது. இக் கூற்றிற்கு இலக்கணமாய் விளங்கியவர் நம் நாவலர். இதனைக் கேட்டு ...

றுந்தான் நாவலரின் சொல் கேட்க விழைந்தோர் உணர்ச்சியினுல் உந்தப்பட்டு செயல் வீரராக மாறி செந்தமிழையும் சிவநெறியையும் சிறப்புறச் செய்தனர். இந்த இடத்தில் நாவலரின் நாவன்மைபற்றி சேர் முத்துக்குமார சுவாமி அவர்கள் சட்ட நிருபண சபையில் 19-10-76 இல் கூறிய கூற்று பயனுடையதாய் அமைவதாய் இருப்பதால் அதனை அப்படியே ஈண்டுதருவோம்.

"He is one of those orientals, who can measure Swords even with such a giant as my Honourable friend, the Queen's Advocate in an argumentative way"

## உயர்நடையின் உயர்வு:

நாவலரின் உரை நடை தனித்தன்மை வாய்ந்தது. தமிழில் உரைநடைக்கு வழிகோலியவர்களுள் குறிப்பிடத்தக்க முதன்மை பெற்றவர் நாவலர். நாவலரின் உரை நடையின் உயர்வை யாழ்ப்பாண மண்வளம் பாடிய சோமசுந்தரனுர் பின்வருமாறு சுவை சொட்டச் செப்புகிறுர்:

"அன்னநடை பிடியிடை
யழகுநடை
யல்லவென வகற்றி
யந்நாட்
பண்ணுமுது புலவரிடஞ்
செய்யுணடை
பயின்ற தமிழ்ப் பாவை
யாட்கு
வன்னநடை வழங்குநடை
வசனநடை
யெனப்பயிற்றி வைத்த
வாசான்."

புலவன் புகன்றதற்கமைய நாவலரின் உரைநடையில் எளிமை, இனிமை பொருட் தெளிவு ஆகிய பண்புகள் உண்டு. ஆனுல் யாம் விரும்புகிற அளவு...... இக்கால அறிஞர் வரவேற்கின்ற அளவு மொழித் தூய்மையை நாவலரின் உரை நடையில் காண்பது அரிதுதான். எனினும் நாவலர் வாழ்ந்த அக்காலத்தில் மொழியின் தூய்மையை வற்புறுத்துகிற கொள்கை நிலவாததினுல் அதை ஒரு பெரும் குறையென்று கூற முடியாது. நாவலரின் உரை நடையில் வடசொற்களும் ஏனைய பிறமொழிச் சொற்களும் விரவியினும் இயன்றளவு இவை தமிழின் ஒலி அமைபபுப்பெறும் முறைவயில் தமிழ் வடிவுபெறமாற்றி அமைத்த பெருமை நாவலருக்குரியது.

## நாவலரின் நடை பற்றி:

நாவலரின் உரைநடையை ஊன்றிப் பயின்று அதில் ஊறித்திளைத்த திருமணம் செல்வக் கேசவராய முதலியார் "இவர் எழுதிய பாலபாடங்களை வசன நடை எழுத முற்படும் சிறுவர்கள் கைக்கொள்ளத் தக்க நடைவண்டியென்று சொல்லலாமென்றும், பெரிய புராண வசனத்தை வனமுங் கதையுமெழுத முற்படும் பெரியார்களும் விரும்பி நோக்கத்தக்க வழி காட்டியென்றியம்பலாமென்றும் கூறியுள்ளார், நாவலரின் உரைநடையில் நயத்தை முன்னைய உரையாசிரியரின் நடையுடன் ஒப்பிட முனைந்த சபாபதி நாவலர் அவர்கள் பின்வருமாறு அழகுற ஒப்பிடுகிறுர்" செயுணடை வாய்ந்த நக்கீரர் உரை நடையும் விளக்கங் குறைந்த இளம்புரணமும், கட்டுரைச் சுவை செறிந்த சேனைவரையரது இலக்கண நடையும் பொருட் செறிவுடைய பேராசிரியர் உரைநடையும் தங்கோன்றுத்தும் நச்சினுர்க்கினியர் சொன்னடையும், நாவலர்களின் வசன நடைகளிலேயே வந்து முடிவடைகின்றது.

## உரைநடையில் குறியீடு:

தமிழ் உரைநடையில் இல்லாத குறியீட்டு முறையையும் முதலில் கையாண்டு தமிழ் உரைநடைக்கு தெளிவும், உரமும் ஊட்டியவர் நாவலர் அவர்கள். இதனை "தூரமொழிகளில் சிறந்து கிடந்த குறியீட்டிலக்கணத்தையும் அதன் மாத்திரைக் கணக்கினையும் நிரூபித்துதவிய நாவலரவர்கள் தமிழுரை நடைகளின் தந்தையார்" என்று மணி திருநாவுக்கரசு முதலியார் மொழிந்து செல்லும் கருத்து யாம் முன்பு கூறிய கருத்திற்கு வலுவூட்டுகிறது.

## நாவலர் வாழ்த்தும் நாவலர்:

இவ்விதம் பல்துறையில் பாங்கோடு பணியாற்றிய நல்லைநகர் நாவலரை யாழ்ப்பாண நல்லூர் ஆறுமுக நாவலரவர்கள் ஒரு அவதார புருஷர். இடையில் கடைக்காலத்தில் விடியுமுன் விசும்பில் விளங்தும் வெள்ளிபோல் தமிழகத்தில் தளரும் சைவமும் தமிழும் அவ்விரண்டிற்கும் புத்துயிர் வழங்கப் பிறந்த வள்ளலாவார். முன்னே பல காலங்களிலும் தமிழகத்திலிருந்த தாள் பெற்ற சில சிறு நன்மைகளை வட்டியுடன் பெருக்கி, ஒரு காலத்து ஒருமுகமாகப் பழங்கடனைத் தீர்த்து என்றுந் தீர்க்கொணுவாறு தமிழகத்தை ஈழநாட்டிற்கு கடைமைப்படுத்திய பேருபகாரி நாவலரென்ருல் அது மிகையாகாது" என்று நாவலரை உள்ளம் திறந்த உச்சி மீதுவைத்து வாழ்த்துபவர் வேறு யாருமல்ல இன்னுமொரு தமிழக நாவலர் தான். தந்து ஆம் நாவலர் சோமசுந்தர பாரதியார் தான் இவர் எடுத்த எடுப்பில் எவரையும் வாழ்த்தவோ புகழவோ முந்துபவர் அல்ல. அனைத்தையும் அலசி ஆராய்ந்து முடிவுகாண விழைபவர். இத்தகையவர் மேற்குறித்த முறையில் நாவலரை வாழ்த்தியிருக்கிறுர் எனின் அது வெறும் வெற்றுரையோ புகழுரையோ அல்ல. அது அவ அவரின் உள்ளத்தின் அடித்தளத்தில் இருந்து எழுந்த உண்மையுரை என்று உணர்ந்து உள்ள நிறைவு கொள்வோமாக.

## அவரின் இறுதி உரையும், அவர் பணியின் பாங்கும்:

"யான் உங்களிடத்துக் கைம்மாறு பெறுதலைச் சிறிதும் எண்ணுது முப்பத்திரண்டாண்டுகள் உங்களுக்கு சைவசமயத்து உண்மைகளைப் போதித்துவந்தேன். எனக்குப்பின் சைவசமயம் குன்றிப்போம் என்று பாதிரிமார்கள் சொல்லுகிறுர்கள். யான் உயிருள்ள உங்களுக்காக ஒரு சைவப் பிரச்சாரகரைத் தேடிக் கொள்ளுங்கள். இன்னும் என்னைப்போன்று படித்தவர்களும் ஒழுக்க முடையவர்களும் பலர் வருவார்கள். ஆனுல் உங்களுடைய பழிப்புரைகளைக் கேட்டுக் கேட்டுக் கைம்மாறுகருதாது சமயத்தைப் போதித்த என்னைப் போன்ற ஒருவரும் வாரார். இதுவே என்னுடைய கடைசிப்பேச்சு" என்று உள்ளத்துடன் தன் வாழ்வில் இறுதிப் பேச்சை நிகழ்த்திய நாவலர் 5-12-1879 இல் உயிர் துறந்தார். அவர் மறைந்து இன்று 90 ஆண்டுகள் ஆகின்றன. நிலமிசை நீடு வாழும் புகழ்படைத்த நாவலர் பெருமையை........

"மும்மொழியில்
வல்லுனராய் மூதறிவுமிக்க
வராய் நம்மொழியும்
சிவநெறியும் நன்முறையில்
தழைத்திடவே
செம்மை நெறி தவறுது
துறவு நெறி தாம் மேவி
அம்மா! அவர் செய்
அருந்தொண்டுகள்
என்னெனபேன்."

என்று புலவர் கிரூர் வியப்போடு விளம்பும் கருத்து வெறும் வெற்றுரையோ அல்ல. ஆனுல் பொருள் பொதிந்த புகழ் உரை என்பதை யாம் உணர்தல் நலம்.

நாவலர் நற்புகழ் நாற்றிசையும் பரவுக!

# நாவலரைப் போற்றிடுவோம்

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே இந்நாட்டு மக்கள் சைவத்தையும், தமிழையும் புறக்கணித்து ஆங்கில, கிறிஸ்தவ மத மோகங் கொண்டு தம்மை மறந்து நிலைகுலைந்திருந்தனர். அச்சமயம் ஈழத் திருநாட்டின் தவப்பயனுக ஆறுமுக நாவலர் நல்லையூரிலே அவதரித்தார். இவர் இயல்பாகவே சைவத்திலும், தமிழிலும் ஆழ்ந்த ஞான முடையவராய் விளங்கினுர். தமது இளம் பிராயத்திலேயே ஈழத் தமிழ் மக்கள் தம்சமய நெறி பிறழ்வதையும், தமிழை பிற மறந்துமத, மொழி நாட்டங் கொண்டிருப்பதையும் கண்டு உள்ளம் குமுறினுர்.

சைவத்தையும், தமிழையும் தமிழ் கூறு நல்லுலகில் சிறப்புடன் சிதையாது பாதுகாத்தற் பொருட்டு ஆங்காங்கு சண்டமாருதப் பிரசங்கங்கள் செய்தார். சிறந்த பல சமய நூல்களையும், தமிழ் வளர்ச்சி நூல்களையும் வெளியிட்டார். கிறீஸ்தவ மதகுருமாரின் தவறுன பிரசாரங்கட்கு கண்டனங்கள் தெரிவித்தும், துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டும், சைவத் தமிழ் மக்கட்கு உற்சாகமும், எழுச்சியும் ஊட்டி வந்தார். மேலும் தமிழும் சைவமும் சிறந்தோங்க வேண்டி பாடசாலைகளையும் ஸ்தாபித்து தாமே முன்னின்று கல்வியும் புகட்டினுர். அச்சியந்திரசாலை ஏற்படுத்தி நல்ல நூல்களை வெளியிட்டு மக்கட்கு பெரும் ஊக்கம் கொடுத்தார். ஈழத்தில் மட்டுமன்றித் தமிழ் நாட்டிலும் இவர் பாடசாலை யேற்படுத்தி, கல்வி புகட்டி பிரசங்கங்களும் செய்தார். இவரது நாவன்மையின்ற் தமிழ் நாட்டிலேயே இவருக்கு 'நாவலர்' எனும் சிறப்புப் பெயர்வழங்கப் பட்டது.

மேலும் இப்பெருநாவலருக்குச் சிலை எடுக்கும் இந் நன்னுளிலே அவர் நெறி வழிப்பட நாமும் ஒரு விதி செய்வோமாக.

நாவலன் புகழ் நானிலமெங்கும் பரவுக.

கே. கே. ரி. சர்மா,
மாவனல்லை.

# தமிழினத்தின் தலைமகன்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்ப் பண்பாட்டை கற்றுக் கொடுத்தார். ஆங்கில ஏகாதிபத்தியத்தின் சிம்ம சொப்பனமாக விளங்கினுர்.

சலுகைகளுக்காக மதம் மாறிய சைவர்களை தடுத்து நிறுத்தினுர். சைவ நெறி அழிந்து விடாதபடி காத்தார்.

ஆங்கிலக் கல்விமுறைக்கு எதிராக தமிழ்ப் பாடசாலைகளை நிறுவி தமிழ்க்கல்வியை வளர்த்த முதல்வர் ஆறுமுகநாவலர்.

ஆங்கிலேய ஏகாதிபத்தியம் நாவலரையும் விலைக்கு வாங்கமுயற்சித்தது. ஆனுல் சிங்கம் சிறுநரிகளின் வலையில் சிக்குமா?

அச்சுக்கூடங்களை நிறுவி தமிழ் நூற்களை அச்சு சுத்தமாக வெளியிட்டார். தமிழ்ப் பிள்ளைகள் கற்பதற்கு ஏற்றதமிழ் பாலபாடங்களை நாவலர் வெளியிட்டார்.

இத்தகைய அவரது சேவைகளால்தான் பொங்கியெழுந்துவந்த ஆங்கில ஏகாதிபத்தியமென்னும் சுழியில் சிக்கி அழிந்து விடாமல் தமிழும் சைவமும் இந்நாட்டில் தப்பிப் பிழைத்தன.

அவரது சேவைகள்,
காலத்தால் அழியாதன.
எத்தனையுகமானுலும் நிலைத்து நிற்கக் கூடியன.

தமிழும் சைவமும் வாழும் வரை நாவலர் பெயர் நிலைத்து நிற்கும் சக்திவாய்ந்தது

சைவத்துக்கும் தமிழுக்கும் நெருக்கடி ஏற்பட்டுள்ள இத்தருணத்தில் நாவலருக்கு சிலைநிறுவி பெருவிழாவெடுக்கிறேம்.

சைவர்களை பௌத்தர்களாக்கத் திட்டமிட்ட சூழ்ச்சி நடக்கிறது!

தமிழ் மூலம் தமிழ்க்குழந்தைகள் கல்வி கற்கும் உரிமையைப் பறிக்க திட்டமிடப்படுகிறது.

நாட்டிலுள்ள சைவாலயங்களை பாலாத்காரமாக பறிமுதல் செய்ய சதி நடக்கிறது

சைவாலயங்களிருக்கும் இடங்களிலெல்லாம் பௌத்த விகாரைகள் இருந்ததாகவும் அவற்றை இடித்துதள்ளிவிட்டு சைவ ஆலயங்கள் நிறுவப்பட்டதாகவும் பொய்ப்பிரசாரம் நடத்தப்பட்டு வருகிறது.

சைவத்துக்கும தமிழுக்கும் இத்தனை பெரிய ஆபத்துக்கள் நிறைந்திருக்கும் வேளையிலே நாவலருக்கு விழாவெடுக்கின்றேம்.

நாவலரது உறுதியும், தன்னம்பிக்கையும் நம் தமிழர்களுக்கு ஏற்படட்டும்! நம்மினத்தை அழிக்கவரும் பகைவரை விரட்டுவதற்கு நாவலர் நாமம் பயன்படட்டும்!

ஆம், நம் இனம் காக்க அன்று தோன்றிய நாவலர் இன்று நம் இனத்துக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களைத் தீர்க்க [illegible] நிச்சயம் வழிகாட்டுவார்!

நாவலர் பெருமை நாடெலாம் ஓங்குக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்த சபைத் தலைவர் பதவியிலிருந்து 'ஆழ்வாப்பிள்ளை வெளியேறவேண்டும்'

## சபை உறுப்பினர்கள் கருத்து!

கொழும்பு விவேகானந்த சபையின் நடப்பு வருடத் தலைவர் (6917 0) பதவியிலிருந்து, திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை, விலகுவதே நல்லதெனறு பல சமயப் பெரியார்களும் முகாமைச்சபை உறுப்பினர்களும் கருத்துவெளியிட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

"விவேகானந்த சபையை சீர்செய்வதற்காகத்தான் ஆறு மாதங்களுக்கு மட்டும் தலைவர் பதவியை ஏற்றுள்ளேன் 'என்று 1967ம் ஆண்டு திரு. ஆழ்வாப்பிள்ளை பகிரங்கமாகக் கூறினர். ஆனல் அவர் கொடுத்த வாக்குறுதியை இன்றுவரையும் நிறைவேற்ருமல், தொடர்ந்தும் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்க ஆசைபடுவது அவரைப் போன்றவர்களுக்குப் பெருமையில்லையென்று முகாமைச்சபை உறுப்பினர் ஒருவர் "சுதந்திரன்" நிருபரிடம் தெரிவித்தார்.

அதிக நாட்கள் அவர் வெளிநாடுகளில் சுற்றுப்பிரயணாம் செய்ய வேண்டியிருப்பதால் சபையின் முன்னேற்றத்தில் அவரால் கவனம் செலுத்த முடியாமலிருக்கின்றது. எவ்வளவுதான் திறமைசாலியாக இருந்தாலும் பொது நிறுவனங்களில் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் பதவி வகித்தால பலரக வெறுப்பிற்கு உள்ளாவதுடன் அந்த நிறுவனங்களின் அபிவிருத்தியும் தடைப்படும்.

வழக்குரைஞர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் அவர்கள் சபையின் தலைவர் பதவியை ஒரு ஆண்டுக்கு மேல் ஏற்றுக்கொளள மறுத்த பெருந்தன்மையையும் அவர்கள் சுட்டிக்காட்டினர். சபை புதிய கட்டிட வேலையை ஆரம்பிக்க விருப்பதால், அதற்காகத் தனது முழுக்கவனத்தையும் செலுத்தக் கூடிய ஒருதலைவரைத் தெரிவு செய்வதே சாலச்சிறந்தது.

கெந்தலையிலுள்ள தொழுநோயாளர்கள், வழிபடுவதற்காக முருகன் கோவிலைத் திரு பட்டக்கண்ணு குமாரசாமி அவர்களும், காலம் சென்ற பெரியார் திருவிளங்கம் அவர்களும் முயற்சி செய்து கட்டுவித்தார்கள். அதன் கட்டிடம் சில மாதங்களாக உடைந்திருந்தது. இப்பொழுது சபையால் ரூபா 2000-வரை செலவு செய்து புதுப்பித்துள்ளார்கள். இதில அக்கறை எடுத்த திரு. சிவராசா, திரு. பட்டக்கண்ணு குமாரசாமி ஆகியோரைப பலரும் பாராட்டுகின்ருர்கள்.

---

### ஜீ. ஜீ மீது..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாணத்தில் இந்துப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட வேண்டும் என்றும், கல்வி அமைச்சரைக் கண்டித்தும் பேசினர்.

திரு. பொன்னம்பலத்தின் இப்பேச்சைக்கேட்டுநாவலர் சபைப் பிரமுகர்கள் பலரும் ஆத்திரமடைந்தனர். கட்சி சார்பற்று, தேசிய அடிப்படையில நடைபெறும் நாவலர் பெருவிழாவில் திரு. பொன்னம்பலம் கட்சி அரசியல் பேசியது கேட்டு வந்திருந்த பல்லாயிரக் கணக்கான மக்களும் விழி பிதுக்கினர்.

செனட்டர் நீதிராசா ஆத்திரமடைந்தவராகக் காணப்பட்டார். இந்தக் குமுறல் நாவலர் சபைத் தலைவர் நீதியரசர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் அவர்கள் பேச்சிலே எதிரொலித்தது. அவா கூறினர்.

"இங்கு பேசிய திரு. ஜீ. ஜீ. பொனனம்பலம தமக்குக கொடுககப்பட்ட எல்லையை மீறிக் கட்சி அரசியல் பிரச்சினையைத் தமது பேச்சில் கிளப்பினர். நாவலர் விழாவில் பிரச்சினைக்குரிய கட்சி அரசியலை அவர் கிளப்பியதை நானவன்மையாகக் கண்டிக்கிறேன். இந்துப்பல்கலைக் கழகமா தமிழ் பல்கலைக் கழகமா என்ற பிரச்சினை பற்றிப் பேசுவதறகு இடம் நாவலர் வழியனுப்பு விழாவல்ல.

"இங்கு இவ்விழாவில் நாவலர் பெருமை பற்றிப் பேசவே கூடியிருக்கிறேம். இத்தகையவிழாக்களில் சர்ச்சைக்குரிய அரசியற் பிரச்சினைகளைக் கிளப்புவது நாவலர் பெருமானையே அவமதிப்பது போன்ற செயலாகும். திரு. பொன்னம்பலத்தின் எல்லை மீறிய பேச்சை நாவலர் சபைத் தலைவர் என்ற முறையில் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்"

—இப்படி திரு. சிவசுப்பிரமணியம் கூறியபோது கூடியிருந்த மககள் கையொலி எழுப்பி அதை வரவேற்றனர். பொன்னம்பலம் முகத்தில் அசடு வழிந்தது.

இதுபற்றி நாவலர்சபைப் பிரமுகர் ஒருவர் நமது நிருபரிடம் கூறியதாவது:—

"திரு.பொன்னம்பலத்தை நாவலர் விழாவுக்கு நாம் அழைத்தபோது அவர் இப்படி பண்பாடு மீறிப் பேசுவார் என நாம் எதிர்பார்க்கவில்லை. நாவலர் விழாவைப் பயன்படுத்தி அரசியல் லாபம் பெற திரு. பொன்னம்பலம் முயற்சிப்பதை நாம் முற்றாக எதிர்க்கிறேம். இவ்விழாவில் பெருந்தன்மையுடன் அமைதியாக வந்து கலந்துகொண்ட திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களைப் பாராட்டுகிறேம்.

"திரு. பொன்னம்பலத்தை நாவலர் சபை இனி எந்த முக்கிய நிகழ்ச்சிகளுக்கும் நம்பி அழைப்பதில்லையெனமுடிவுசெய்திருக்கிறது."

---

### கதிர்காமம்...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

தால் சங்காரம் நிசம் என்பதை அறிந்து கொள்ளட்டும்.

திரு.பண்டாரநாயகா அரசாங்கம் சிங்கள மொழியைத் திணித்தது. டட்லி சேனனுயகாவின் அரசாஙகம் பௌத்த மதத்தைத் திணித்து வருகின்றது. அடுத்து வரும் அரசாங்கம் சிங்களப் பெயர்களையே வைக்க வேண்டுமெனச் சட்டம் கொண்டுவந்தாலும ஆச்சரியப்படுவதற்கில்லை.

சைவசமய நிறுவனங்களும் பெரியார்களும் பாராளுமன்ற, மேலசபை உறுப்பினர்களும் சிற்றூர், பேரூர் சபைகளும் உடனடியாக ஒன்றுகூடி கதிரமலை முருகனை விடுவிப்பதுடன் இனி மேலும் இவ்வாறு அசமபாவிதஙகள் நடைபெருதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும.

(ந.நி)

---

### மத உரிமையை .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

"அறம், அன்பு, அகிம்சை, கருணை ஆகியவற்றைப் போதித்த சித்தார்த்தனின் சீடர்கள் என்று பறைசாற்றித் திரியும் புத்த பிக்குவின் ஆணவமான செயலைப் பெருமான் உயிருடன் இப்பொழுது இருந்திருப்பாரானல் நிச்சயம் அவர் கண்ணீர் சிந்திக் கசிந்து கசிந்து அழுதிருப்பார்.

கதிரமலைக் கந்தனின் ஆலயத்தை உடனேயே முன்பு நிர்வகித்துவந்த தெய்வானை அம்மன் ஆலய கர்த்தாக்சளிடம் ஒப்படைப்பதற்குரிய வழிவகைகளைச் செய்து தருமாறு தமிழரசுத தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களைக் கேட்டுள்ளேன்.

---

# திரைவாணன் பதில்கள்

ம. அன்ரன்
மிருசுவில்.

கே: இதுவரையில் நாகேஷ் எத்தனை படங்களில் நடித்துள்ளார்?

ப: 200 படங்களில்.

ஃ

ஜோ. இராஜன்
இல: 25 தக்கியா வீதி,
திருகோணமலை.

கே: எம். ஆர். ஆர். வாசு தமது தந்தையின் இடத்தைப் பிடிப்பாரா?

கே: எதில்! டூமீல்! டூமீலிலா? அல்லது நடிப்பிலா?

ஃ

எஸ். ஆர். கந்தசாமி
கைதடி.

கே: தென்னுட்டிலே திரையுலகில் சிங்கம போன்றவர் சிவாஜியா? எம். ஜி. ஆரா?

ப: குரலில் சிவாஜியும் சண்டையில் எம். ஜி. ஆரும் திரையுலகில் இரு சிங்கங்களே!

ஃ

கலைச்செல்வன்
ஏழாலை மேற்கு.

கே: சிரிப்பு நடிகர்நாகேஷ் என்ருல் அழுகை நடிகா யார்?

ப: அதிலும்நாகேஷ் சளைத்தவரல்ல. சாவர் சுந்தரம், நீர்க்குமிழி ஆகிய படங்களில் தன நடிப்பாற்றலால் ரசிகர்களை அழவைத்தவர் நாகேஷ்.

முருகுப்பிள்ளை,
தாழையூர்.

கே: சாவித்திரிக்குப் பின் தமிழ்ப்பட உலகில் சிறப்பாக நடித்து வருபவர் கே. ஆர். விஜயா தான் என்கிறேன் நான். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: நான் மறுக்கவில்லையே?

ஃ

நூறு முகமட்,
மண்முனை.

கே: ஆனந்தன் முஸ்லிம் வாலிபர் என்று சொல்லுகிறுர்களே உண்மை தானு?

ப: உண்மை தான்.

---

# மக்கள் குரல்

திரு. வ. நவரட்டினம்
அவர்கட்கு, பா. உ.
ஊர்காவற்றுறை.

ஐயா,

23-5-69 தினகரன் மூலம் "தமிழருக்கு தமிழரசுக்கட்சி செய்த துரோகம்" என்னும் தலைப்பின் கீழ் தாங்கள் வெளியிட்ட அறிக்கையைப் பார்வையிட்டேன், மேற்படி அறிக்கையில் தாங்கள் குறிப்பிட்ட கட்சிக்கு விரோதமான அத்தனை குறறச்சாட்டுகளும் கட்சியிலிருந்து தாங்கள் வெளியேற்றப்படும் வரை கட்சியின் லேபலில் தாங்கள் பா. உ. வாய் இருந்த பொழுதே நடைபெற்றதென்பதைத் தாஙகள் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

தங்கள் அறிக்கையில் சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தத்தை ஏற்றுக்கொணடதால அரைவாசி இந்தியர் நாடு கடத்தப்படுவார்கள் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். இதில் தங்கள் கணக்கு தப்பானது. ஏழில் நாலு வீதத்தினர் இலங்கைபபிரஜைகளாக ஏழில் மூன்று வீததினர் நாடுகடத்தப்பட்டால் அது அரைவாசியாகாது. 1948ல் திரு. பொன்னம்பலம் நடந்து கொண்டது மேலென்கிறீர்கள். 1948க்கு முன் 8 பிரதிநிதிகளை தெரிவு செய்த மலைநாட்டுத்தமிழ் பேசும் மக்கள 1948ல் பொன்னம்பலத்தின் செய்கைக்குப்பின் ஒருவரையும் தெரிவு செய்ய முடியாதிருப்பதை சில காலமாய் திரு. பொன்னம்பலத்துக்கா வக்காலத்து வாங்கிப் பேசும் தாங்கள் மறைப்பதில் ஆச்சரியம்எதுவுமில்லை.

அரசியல் ஆற்றலும் அறிவும் அனுபவமும் அற்ற சில தமிழ்த் தலைவர்களுக்கு வயது பின்னிட்டதின் மேல் சில கோளாறுகளை ஆண்டவன் ஏற்படுததுவது தமிழ் மக்களின் துர அதிஷ்டமே.

பி. மார்க்குப்பிள்ளை,
முல்லைத்தீவு.

---

# அண்ணுவுக்கு சிலையெடுப்பது ஏன்?

தமிழ் நாட்டுத்தலைவராகிய அறிஞர்அண்ணுவுக்கு இலங்கையில சிலை எழுப்புவனேன் என்று சில தமிழுணர்ச்சியற்ற மண்டுகங்கள் கேட்டு வருகின்றன அல்லவா? இதற்குப் பதிலளித்து அண்ணுவுக்கு சிலையெடுப்பது ஏன என்பது பற்றி கீழ் காணும் விளக்கத்தை கிரிமலை நகுலேஸ்வர ஜன சமூக நிலையத் தலைவரும், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் கிரிமலைக் கிளையின் செயலாளருமான திரு. கனக மகேந்திரா ஓர் அறிக்கை மூலம் கொடுததுள்ளார்:-

மறைந்து விட்ட மாணிக்கத் தமிழ் மறவன் அண்ணுவிற்கு ஒரு நிலையான நினைவுச் சின்னமாக அண்ணுரின் சிலையொன்றை அமைத்திட ஆக்க பூர்வமான நாம் வேலைகளில் ஈடுபட்டிருக்கின்ற இவ்வேளையிலே தென்னிலங்கையில் இருந்து வகுப்பு வாதக்குரல்கள் எல்லாம் எதிர்ப்புக்குரல்களாக எழுச்சி கொள்கின்றன. தென்னிலங்கைக் குரல் நமக்கு வியப்பைத் தரவில்லை ஆனல் நம்மை நோக்கி நம்ம வரும்சிலர் அண்ணுவுக்குச சிலை ஏன் அவர் நமக்கு என்ன [illegible] புதல் எண்ணி வியப்படைகிறேம். அவர்களது அறியாமைதனை அகற்றல் நம்கடன் என்பதால் தகுந்த விளக்கம் தந்திட முனைகிறேம்.

அண்ணுவால்தமிழ் வாழ்ந்தது. தமிழர் வாழ்ந்தனர். எமது தாய் மொழியின வளர்ச்சிக்கு அதனைக் காத்தற்குத் தன உடல் பொருளை ஈந்து உயிரையும் தந்து விட்டார. எனவே தான் அவருக்குச் சிலை எடுக்கிறேம்.

வள்ளுவன் வகுத்த பாதையிலே அறவழி அரசியலை நடாத்தினர். தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகைசெய்தார். இருபதாம் நூற்றுண்டின் வள்ளுவன் எங்கள் அண்ணு! வள்ளுவனின் கருத்துக்களுக்கு வடிவம் கொடுததவனுக்கு நாம் வடிவம் கொடுக்க முனைகிறேம்

அல்லற்பட்டு ஆற்ருது அகிலத்தில் வாழும தமிழர்கள் வடித்த கண்ணீர் தனைத் துடைக்க ஒரு தூயவன் இருந்தான் என்ருல் அது எங்கள அண்ணு ஒருவன் தான். அவனது இயக்கம் ஒன்றுதான்.

ஈழத் தமிழர்போராட்டத்துக்குத் தன் தார்மீக ஆதரவைத் தருவதற்கும் அகிலத்துக்கு அவர்களது போராட்டத்தை தெரியப் படுத்துவதற்கும் பண்டித நேருவை ஐ. நா. வைத் தட்டிக் கேளெனக் கூறிடுதற்குமாய் ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழர் படைகளைத் திரட்டி மெரீனக் கடற் கரையிலே சங்க நாதம் செய் தானே அந்தத் தமிழ் மகனுக்கு சிலை எடுபபதன் மூலமாவது எமது சிறு நன்றியுணர்ச்சி தனைக் காட்டா விட்டால் நாம் நாயினும் கீழானவர்களா அன்றோ! நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ சொல்வீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காமம் உச்சிமலையில் புத்த வெறியின் அட்டூழியம்.

## மத உரிமையை நிலைநாட்ட தமிழர்கள் ஒன்றுபட வேண்டும்!

கதிர்காமம் உச்சிமலை முருகன் கோவில் அர்ச்சகரையும் உதவியாளரையும் பௌத்த வெறியர்கள் அடித்துத் துரத்தி ஆலயத்தையும் கைப்பற்றியுள்ளார்கள்.

பௌத்த மதத்தைப் பரப்புவதற்குச் சைவ ஆலயங்கள் பலி பீடமா? அறத்தையும் அன்பையும் போதித்த போதிமாதவன், அவைகளை அடைவதற்கு மறத்தையும் பலவந்தத்தையும் கைக்கொள்ளச் சொன்னாரா? இதுதான் பௌத்த தருமமா? ஈழத்தாயே! நீதி எங்கே! கருணை எங்கே! காருண்ணியம் எங்கே?

ஆளும் வர்க்கத்தின் மதம் பௌத்தம் என்பதால் சைவ மதம் அழிக்கப்பட வேண்டுமா? அநீதி, அக்கிரமம், அயோக்கியம் ஆதியன அகிலத்தில் நிலைத்ததாக வரலாறில்லை. சைவத்தமிழ் மக்களே! சிந்தியுங்கள்!

கதிர்காமத்தில் முருகப் பெருமான் குடிகொண்ட நாள் தொடக்கம் கதிரமலை, பிள்ளையார்மலை வள்ளிமலை, செல்லக்கதிர்காமம் ஆதியன சைவசமயத்தவர்களுக்கு உரித்துடையதாகவும் சைவர்களாலே அங்குள்ள ஆலயங்கள் நிர்வகிக்கப்பட்டும் வருகின்றன.

இவைகளைக் கைப்பற்ற வேண்டுமெனச் சில பௌத்த சமயத்தவர்கள் திட்டமிட்டு வள்ளிமலை பிள்ளையார் மலையையும், செல்லக்கதிர்காமத்தில் ஒருபகுதியையும் கைப்பற்றியுள்ளார்கள்.

இப்பொழுது கதிரமலையையும் பலாத்காரத்தைப் பிரயோகித்துக் கைப்பற்றியுள்ளார்கள். அங்கு பூசை செய்து வந்த அர்ச்சகரையும் அவரது உதவியாளரையும் அடித்துத் துரத்தியுள்ளார்கள்.

தெய்வானை அம்மன் கோவில் நிர்வாகிகள் பொலிசில் புகார் செய்ததைத் தொடர்ந்து இப்பொழுது பொலிசார் அங்கு காவல் புரிகின்றனர். ஆனால் ஆலயம் பூட்டப்பட்டுள்ளது. கதிரமலை தெய்வானை அம்மன் கோவிலின் மாமூல் சொத்து. அங்கு செல்ல சில ஆண்டுகளாக ஒரு பௌத்த பிக்குவும் அவரது சகபாடிகளும் பௌத்த சிலையையும் வைத்து மலைக்குச் செல்லுவதற்குப் புதிய பாதையையும் வெட்டுவித்தார்கள்.

இந்தப் பாதையாலேயே யாத்திரீகர்களைச் செல்லுமாறு கட்டாயப்படுத்தினார்கள். இதனால் சென்ற ஆண்டும் தகராறு ஏற்பட்டது. இவ்வாறு அக்கிரமம் செய்வது அவர்களின் அழிவுக்குக் காலம் கிட்டிவிட்டதென ஒரு பக்தர் கண்ணீர் சிந்தியபடி என்னிடம் கூறினார்.

கதிர்காமக் கந்தனுக்குத் தீங்கு விளைவிக்க எண்ணியவர்கள், என்றுமே வாழ்ந்ததில்லை! இனிமேலும் வாழப் போவதில்லை என்பதை அரசாங்கமும் பௌத்தவெறியர்களும் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென முருகப் பக்தரான பெரியார் பட்டக்கண்ணார் கூறினார்.

புனிதநகர் என்ற போர்வைக்குள் சைவ அன்பர்களால் கட்டப்பட்ட மடங்கள் பெரும்பாலும் இப்பொழுது இடித்துத் தரைமட்டமாக்கப் பட்டு வருகின்றன. யாத்திரீகர்களின் வசதிக்காக இந்த கட்டடங்களை எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு பல அன்பர்கள் கட்டுவித்தார்கள். என்ன உயர்ந்த நோக்கத்துடன் அந்த மடங்கள் கட்டப்பட்டனவோ அவைகளை அழிப்பவர்களும், அதற்குக் காரணகர்த்தாவாக இருப்பவர்களும் அழிந்து ஒழியும் காலம் மிகவும் அண்மையில் வந்துள்ளதாக கதிர்காமத்திலிருக்கும் சுவாமி ஒருவர் கூறினார்.

சைவசமயத்திற்கு எந்தத் தீங்கைச் செய்தாலும் அவர்கள் பொறுமையுடன் இருப்பார்களே தவிர எதிர்க்க மாட்டார்களென இந்த மத வெறியர்கள் நினைப்பார்களானால் அது வெறும் பகற்கனவென்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஏனெனில் பொறுமையுள்ளவர்கள பொங்கி எழுந்

(13ம் பக்கம் பார்க்க)

---

## எங்கே நீயோ நானும் அங்கே ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பந்தப்பட்ட இன்னுமொருவள் இருக்கிறாள் அவளது அபிப்பிராயத்திற்கும் ஒரு சிறிது மதிப்புக கொடுப்போம் என இருவருமே எண்ணவில்லை. போகட்டும். இப்போது நான் என் வ[illegible] உங்கள் இருவர் முன்னிலும் எடுத்துரைக்க முன்வந்துள்ளேன். ஆகவே தயவுசெய்து என் பேச்சுக்குச் சிறிது செவிசாயுங்கள்.

பவானி உன் கணவருக்கு நான் சட்டப்படி மனைவியாகியது என்னவோ உண்மை தான். ஆனால் உள்ளத்தைப் பொறுத்தவரை அவர் உனக்கே சொந்தமாக இருந்திருக்கிறார். அந்தவகையில் அவரை நீ காதலனாக அடைந்ததையிட்டுப் பெருமைப்பட வேண்டும். மனதாற்கூட உனக்கவர் துரோகஞ் செய்ய விரும்பவில்லை. அதை நான் மெச்சுகிறேன். ஆனால் அதை நிலைநாட்ட அவர் கைப்பிடித்த வழியைத் தான் நான் வெறுக்கிறேன்; மது என்ற ஒரு பொருளை எம் சமூகத்தில் அறிமுகஞ் செய்திருக்காவிட்டால் இவர் என்ன செய்திருப்பாரோ...? அது சர்ச்சைக்குரிய விடயமாகவே இருக்கட்டும். நான் இந்த இடத்தில் இதை ஏன் கூற வந்தேன் என்றால் பெண்களைவிட ஆண்கள் மிகவும் பலயீனர்கள் என்பதைச் சுட்டிக் காண்பிப்பதற்காகவே.

உன் காதலர் குடித்திருக்க வேண்டிய அவசரமேயில்லை பவானி. அவர் மட்டும் தனது சுயசரிதையை என்னிடம் மனம் [illegible] தீர்த்திருந்தால் நானாகவே உன்னைத்தேடி அவரிடம் ஒப்படைத்திருப்பேன். குடிபோதையில் வரும்போதெல்லாம் இவர் எனைப் பற்றி எத்தனையோ பழிச்சொற்கள் கூறுவார். ஏன் இரவு கூடத்தான் உன் அண்ணாவையும் என்னையும் இணைத்து மிகவும் கேவலமாகப் பேசினார். உன் அண்ணாவை நான் காதலித்தது என்னவோ உண்மை தான். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் திருமணமாவதற்குமுன் ஒருவள் காதலித்தாள் என்பதற்காக அவளைப் பற்றி வாயில் வந்தபடியெல்லாம் பேசலாமா...? ஆயினும் நான் எ[illegible]றையும் பொறுத்தேன். எதற்காக... என்னைத் தொட்டுத் தாலிகட்டிய கணவன் என்ற ஒரே குற்றத்திற்காகத்தான். அதுதான் தமிழ்ப் பெண்களிடையே உள்ள சிறப்பு. இந்த மாங்கல்யம் இருக்கிறதே இது மிகவும் பவித்திரமான ஒரு பொருள், அதன் சக்தி மகத்தானது. விஞ்ஞானம் சாதிக்கமுடியாதவற்றையெல்லாம் இந்த மஞ்சள் கயிற்றில் இணைக்கப்பட்டிருக்கும் மாங்கல்யம் சாதிக்க வல்லது பவானி. அந்த ஒரேயொரு உண்மையை மட்டும் பெண்கள் உணர்ந்து நடந்தால் பெண்மை எப்போதும் வாழ்ந்துகொண்டிருக்கும் இதையிட்டு நான் அதிகம் பேசவிரும்பவில்லை:

இன்றுவரை உன் காதலரைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்றுமுதல் அந்த மாபெரும் பொறுப்பை உன்னிடமும் உன் குழந்தையிடமும் ஒப்படைக்கிறேன பவானி. இதோ உன் வீட்டுச்சாவி ம்... பிடி... பிடி பவானி... என்னைச் சுற்றியுள்ள இந்தப் பரந்த உலகில் எனக்காக எத்தனையோ சேவைகள் காத்துக் கிடக்கின்றன; இனிமேல் அதுதான் என் மூச்சாக இருக்கும்... என்று [illegible] சங்கம் செய்த உமா ஜெயநாதன் பக்கந் திரும்பி "உங்களுக்கு நான் ஒரு நல்ல மனைவியாக இருக்கமுடியவில்லை. அதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். என் தங்கை பவானியும் குழந்தையும் என்னால் வெறுமையாக்கப்பட்டு சூன்யமாகத் திகழ்ந்த அந்த இடத்தை நிறைத்துவிடுவார்கள் என்பதே என் நம்பிக்கை. நான் போவதற்கு எனக்கு விடை தாருங்கள். அதற்குமுன் என்னையும் உங்களையும் எதுவித உறவுமின்றிப் பின்னிப் பிணைத்திருந்த இந்தப் புனிதமான மாங்கல்யத்தையும் மஞ்சட் கயிற்றையும் இதோ உங்களிடம் ஒப்படைக்கிறேன். இனி இது யாருக்குச் சொந்தமோ அவளின் கழுத்தில் இதை அணியுங்கள். இதுவரை உள்ளங்களால் மட்டும் பிணைக்கப்பட்டிருக்கு உங்கள் புனிதமான உறவு இந்த மஞ்சட் கயிற்றால் இன்னும் பலப்படட்டும். என்னை மறக்காமல் இருக்க என் வாரிசாக இதோ குழந்தை உமா இருக்கிறான். எல்லாமே இறைவன் செயல்... நான் வருகிறேன்... கூறிவிட்டு விறுக்கென நடந்துசெல்லும் உமாவைப் பார்த்தபடியே ஜெயநாதன் நிற்கிறான்.

தன் கண்களிலிருந்து வடிந்தோடிய இரு சொட்டுக் கண்ணீரையும் தன் சுண்டுவிரலால் தெளித்து எறிந்த பவானி அவன் பக்கந் திரும்பி... 'என்னங்க அக்கா போய்க் கொண்டே இருக்கிற நீங்கள் பேசாமல் இருக்கிறீர்கள். அவளைக் கூப்பிடுங்கள்... தயதுசெய்து கூப்பிடுங்கள் எனப் பதட்டப்பட்டாள்.

என்னைக் கைப்பிடித்த இந்த மூன்று வருட காலத்துள்ளும தலைநிமிர்ந்து என்னுடன் உமா பேசியது இதுதான் முதற்தடவை பவானி. அவளை அடித்திருப்பேன்... சித்திரவதைபபடுத்தியிருப்பேன். ஒரு வார்த்தை எதிர்த்துப் பேசியிருக்கமாட்டாள். கடந்த சில நிமிடத்திற்கு முன்வரை அவள் என் மனைவியாக இருந்தாள். அந்த உறவை அவள் துண்டித்துக்கொண்டாள்; இனி அவள்மேல் எனச் [illegible] உரிமையும் கிடையாது. இனிமேலாவது அவள் சந்தோஷமாக வாழட்டும். அவள் புனிதமானவள். அவள் என்னை மன்னித்தால் அது ஒன்றே எனக்குப்போதுமானது. நான்செய்த பாவங்களுக்கெல்லாம் அதுதான் பிராயச் சித்தமளிக்கும்... உமா... நீ உத்தமி . உமா... உமா... அவன் வாய்விட்டுக் கதறியபோது குழந்தை உமா அவனை இறுகப்பற்றிக் கொண்டான்.

— அடுத்த இதழில் முடியும்

---

## உங்களுக்குத் தெரியுமா?

"கருடன்"

பிரதமர் டட்லி சேனநாயகா சமீபத்தில் எகிப்து நாட்டிற்கு நல்லெண்ணச் சுற்றுப்பிரயாணத்திற்குச் சென்றபொழுது அந்த நாட்டின் பிரதமர் கெய்ரோ விமானநிலையத்திற்கு இலங்கைப் பிரதமரை வரவேற்காதது சர்வதேச சம்பிரதாயத்தை மீறியசெயலாகும். இதன் உண்மையான காரணம் என்ன என்று எகிப்திய தூதுவர் இன்று வரையில் விளக்கம் தராதது சந்தேகத்தைத் தருகின்றதென அங்கலாய்க்கின்றார் ஒரு யூ. என். பி. அனுதாபி.

சிறுபான்மைத் தமிழர்களின் தலைவர்கள் எனத் தம்பட்டமடிக்கும் சிலர் எதிர் வரும் தேர்தலில் [illegible] கோரி. எல்லா எதிர் கட்சிகளுக்கும் விண்ணப்பம் அனுப்பியுள்ளார்கள். அவர்கள் கோரியுள்ள தொகுதிகள் உடுப்பிட்டி. கோப்பாய், உடுவில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகியவைகளாகும். தங்களைப் பற்றி சுய விளம்பரம் செய்வது இதன் மூலம் பணம் தேடுவதும் தான் முன்னணிகளின் நோக்கம்.

கொழும்பிலிருந்து வெளியாகும் தமிழ் தினசரிப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் கதை, கட்டுரைகள் கவிதைகளுக்குக் கொடுக்கப்படும் சன்மானங்களை அதன் ஆசிரியர்களே அபகரிக்கிறார்களென்று மேலிடத்திற்குக் குற்றச்சாட்டுகள் சென்று கொண்டிருக்கின்றன.

கல்வி சுகாதார அமைச்சர்களின் அனுக்கச் செயலாளர்கள் (புதல்விகள்) அவர்களது சொந்தப் பாவிப்புகளுக்கும் அரசாங்க வாகனங்களைப் பாவிக்கின்றார்களாம். இதனால் பொதுமக்களின் வரிப்பணம் வீணாக விரயமாகின்றது என அந்தந்த அமைச்சுகளிலுள்ளவர்கள் காதோடு காதாக முணுமுணுக்கிறார்கள்.

---

[illegible]டமை...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்தான் இரும்புக் கடைக்காரன்.

"நாமெல்லாம் ஒன்றாக இருக்கும் வரைக்குந்தான் நமக்கு மரியாதை என்பதல்ல, நான்பெரிது நீ பெரிது என்று சொல்லிப் போரிட்டு நமது கடமையை மறந்தால் அழிவுதான் மிச்சம்; அமைதியாக இருந்து அவரவர் தமது கடமையைச் சரிவரச்செய்தலே பெருமைதரும், முன்னாலிருப்பதிலோ பின்னாலிருப்பதிலோ பெருமையில்லை" என்றது இதுகாலவரை சங்கிலியை இழுத்துப் பின் சக்கரத்தை உருள [illegible]த பெடல்.

விடுவதா[illegible] கொண்டது. சக்கரங்கள் [illegible]னமாக இருந்தன அவைகளால் இப்போது ஒன்றும் செய்யமுடியவில்லை.

"சிச்சீ, நல்ல எளவுச் சைக்கிள், பேயும் போயும் இந்தப் பழைய சைக்கிளில் ஓடிக்கொண்டிருந்தால் எனக்குத் தான் ஆபத்து" என்றெண்ணிய சைக்கிள் சொந்தக்காரன் அதைப் பழைய இரும்புக்கடைக் காரனிடம் கொடுத்தான்.

சைக்கிளைத் துண்டு துண்டாகக் கழற்றிச் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரசு மாநாட்டுக் கவியரங்கில் பாடப்பட்டக் கவிதை!

# எங்கள் எதிர்காலம்

### கடவுள் வணக்கம்

வேலே எறிந்து பெரும்
வெற்பே பிளந்து நல்ல
வீரம் துலங்க உயிரைக் கொன்றவன்—திரு
சூரன் உயிரைக் கொன்றவன்—திரு
மாலே நடுங்க உமை
மாதே வியக்க மலர்
மேலோன் தலையிற் குட்டியோன்—அவர்
வாலே குறுக வெட்டியோன்—இரு
சேலே அனைய விழி
நூலே அனைய இடை
பாலே அனைய மொழியாள்—தேன்
போலே இனிக்கும் மொழியாள்—வள்ளி
காலே சரணமெனக்
கானம் தனை அடைந்த
கந்தன் கழல்கள் தொழுதே—இங்கு
எந்தன் கவிதை சொல்லுவேன்.

### தலைவர் வணக்கம்

சந்தமுறு செந்தமிழின் சாரமெலாம் ஒன்றாய்த்
தங்குதடை யின்றி மழை பொழிகின்ற வாறு
விந்தையுறு நற்கவிதை யாக வார்க்கின்ற
கந்தவன நற்றலைவ என் வணக்கம் ஏற்பாய்.

### சபை வணக்கம்

மருதனார் மடத்து மண்போல
மணக்கும் கவிதை பூக்கின்ற
அருமையான கவிஞர்களே!
அவைசேர் தாய்மார் தந்தையரே
பெருமை சான்ற தோழர்களே
பேணும் கற்புடை நங்கையர்காள்
அறிவின் மிக்க பெரியோர்காள்
அன்பு வணக்கம் ஏற்பீரே.

### அரங்கு வணக்கம்

செந்தமிழ் ஓங்கித் தழைத்து வளர்ந்து
செழித்த நற்பூமியிலே
வந்த அமரர் கந்தையர் அரங்கினை
வாழ்த்திக் கவிதை சொல்வேன்.

### நன்றி

எங்கள் எதிர்காலம் எனும் இனிய தலைப்பின்கீழ்
ஏற்ற கவிபாட எனை இங்கழைத்த ஈழச்
சிங்கநிகர் பொங்குதமிழ் வீர மறவர்க்கென்
சிந்தை கனிவான வுள நன்றி பல சொல்வேன்.

### எங்கள் எதிர்காலம்

சங்கு முழவங்களொரு சல்லடைக ளார்ப்பத்
தாரணியை வென்றதமிழ் வீரர்வழி வந்த
எங்களினம் இங்குபுவி மீது தடுமாறும்
ஏழ்மைநிலை கண்டு மனம் தாழ்வடையுதன்றோ.

இமயமலை உச்சியினில் எங்கள் கொடி நட்டோம்
இழித்துரைத்த ஆரியர்க்கும் ஏற்ற உதைவிட்டோம்
நமது புகழ் சாவகத்தில் புட்பகத்தில் கண்டோம்
ஞாலமெலாம் கப்பல் விட்டு
நல்ல பொருள்கொண்டோம்
எமது கலை உயர்வாலே இகம் எல்லாம் வென்றோம்
இலக்கியத்தின் மாண்பாலே அறியாமை கொன்றோம்
சமராடும் வலிமிக்க தமிழ் மக்கள் நாங்கள்
தடுமாறி நிலைமாறித் தாழ்வுற்று விட்டோம்.

கயிலாய மலையினையும் கையாலே தூக்கும்
கரங்கொண்ட ராவணனார் வழிவந்த மக்கள்
செயலாற்ற முடியாத சிறியோர்களாகித்
திசை மாறித் திகைக்கின்ற சிறுவாழ்வு கொண்டோம்
வயலுள்ள பயிருள்ள வளமுள்ள மக்கள்
வகையற்று மெலிவுற்று வலியற்று விட்டோம்
பயமற்ற மூவேந்தர் குடிவந்த தமிழர்
பழியுற்று வழியற்றுப் பயங்கொள்ளுகின்றோம்.

தமிழ் மக்கள் நாங்கள் தமிழ்ப் பற்றே இல்லை
தாழ்வுற்றுப் போதற்கு வேறென்ன வேண்டும்
தமிழ் மக்கள் நாங்கள் தமிழ் மூச்சே யில்லை
தடுமாறி வழிமாற வேறென்ன வேண்டும்
தமிழ் மக்கள் நாங்கள் தமிழ்ப் பண்பே இல்லை
தலைதாழ நிலைதாழ வேறென்ன வேண்டும்
தமிழ் மக்கள் நாங்கள் தன்மானம் இல்லை
தமிழர்க்கு வேறென்ன இழிவொன்று வேண்டும்.

முந்நாளில் தன்பிள்ளை தனைத் தேரினாலே
முடி மன்னன் கொன்றானும் நீதியைக் காக்க
இந்நாளில் நீதியை நாம் கொல்லுகின்றோம்
இலஞ்சப் பிசாசுக்குக் கைநீட்டுகின்றோம்
எந்நாளும் இலாபமே நோக்கமாய்க் கொண்டோம்
எதிர்காலம் பற்றிய எண்ணத்தை விட்டோம்
சொன்னாலும் கேளாத தமிழ்ச்சாதி மக்கள்
சுடுகாடு போனாலும் திருந்தார்கள் போலும்.

வருங்காலம் பற்றியோர் எண்ணமே இல்லை
வரலாறு பற்றியோர் சிந்தையும் இல்லை
இருக்கின்ற வரைக்கும் நாம் இருந்திட்டுப் போவோம்
என்கின்ற எண்ணம் அன்றி வேறில்லை
சுருக்கமாய்க் கூறில் சுரண்டியேனும் நாம்
சுகத்தோடு பொருளோடு வாழ்ந்திட்டால்போதும்
செருக்குற்ற தமிழ் மக்கள் சிந்தையில் இன்று
செறிந்துள்ள எண்ணமி தன்றி வேறில்லை.

நிலவுக்குப் பயணத்தை மேற்கொள்ளும் நாளில்
நிலமீது நாம்தொழிற் கல்வியற் றுள்ளோம்
புலவர்களும் கலைஞர்களும் வாழ்ந்த திருநாட்டில்
போலிகளும் நீலிகளும் புரளுவதைக் கண்டோம்
சிலைபேசும் கோயில்பல கண்ட தமிழ் நாட்டில்
சினிமாக்கா ரிகளுக்கே சிறப்பாக லாச்சு
பலதொழிலும் வளமுற்ற பைந்தமிழர் நாட்டில்
பாதம் பிடிக்கின்ற பணிவளர்தல் கண்டோம்.

### வேறு

தங்கம் வெள்ளி மணி பெறுதற்கும்
சார்ந்த பச்சைப் பயிர் வளர்த்தற்கும்
எங்குமே மண்ணை வெட்டி முயல்பவர்
இங்கிலாந்துபோல் மேலை நாட்டினர்
இங்கே என்னடா செய்கிறோ மென்றால்
இன்றும் மண்ணைத்தான் தோண்டுகின்றோம் நாம்
தெங்குவாழை நடுவதற்கல்ல
செய்வினைகள் எடுப்பதற் கேயாம்.

வானவீரர்கள் தங்குதற் கென்று
வானகத்திலே பந்த லமைக்க
ஞான முள்ளவர் எண்ணிடும் நாளில்
நாங்கள் வாய்ப்பந்தல் போடுகின்றோமே
போன காலப் பெருமையைப் பேசிப்
பொழுது போக்குவ தன்றி இந்நாளில்
ஆன காரியம் செய்திட மாட்டோம்
அனுமதேயக் கடித மெழுதுவோம்.

### வேறு

ஒழுங்காய்ப் பஸ்சில் ஏறுகிற
உணர்வு கூட இல்லாத
கிழங்குத் தமிழர் என்றெம்மைக்
கேலி பலரும் செய்கின்ற
அளவுக்கன்றோ தாழ்ந்து விட்டோம்
அயலான் கொண்ட இனப்பற்றோ
மொழியின் மீது தனிப் பற்றோ
முற்று மற்றே இருக்கின்றோம்.

### வேறு

வீட்டில் ஒரு மொழி வீதியில் ஓர் மொழி
மேடையில் ஓர்மொழியாய்—இங்கு
போட்டு முழக்கும் தமிழர் திருந்திற்
புதுவழி தோன்றிவிடும்.

கோடியிலே தமிழ் குசினியிலே தமிழ்
கூசிக் கதைப்பவர்கள்—தங்கள்
மாடியிலே பிறநாட்டு மொழிகளை
மாந்தி மகிழ்பவர்கள்

ஆடிக் கிடந்திடும் பால்ரூம் நடனத்தில்
ஆழ்ந்து கிடப்பவர்கள்—தினம்
பாடிடும் மேல்நாட்டு ஒப்பாரிப் பாடலால்
பல்லை இழப்பவர்கள்

செந்தமிழைத் தினம் நன்கு வளர்த்திடச்
சித்தம் இசைந்துவிட்டால்—அவர்
சொந்த மொழிப் பற்று உந்தப் புறப்பட்டுச்
சோர்வை அகற்றி விட்டால்

சந்த மிகுந்த தமிழ் வளரும் தமிழ்ச்
சாதி உயர்ந்து விடும்—இங்கு
எந்தையர் காலச் சிறப்பு மிளிர்ந்திடும்
இன்னல் தொலைந்து விடும்.

### வேறு

ஆயிரம் சாத்திரம் பேசி நிற்பார்—சைவ
ஆகமங்கள் பல சாற்றி நிற்பார்—நெற்றி
தேயும் வரைக்கும் வெண்ணீறணிவார்—சிவ
சின்னத்துடன் தேவா ரம்படிப்பார்—இவர்
வாயினால் பொய்யும் புரட்டுரைப்பார்—கொடும்
வட்டியும் வாங்கி மனம் களிப்பார்—தங்கள்
வாயைத் திறப்பர் பணத்தைக் கண்டால்—கோயில்
வாயில் திறக்க வழியறி யார்.

### வேறு

ஒன்றுபட் டன்று இருந்தகுலம் இன்று
ஓராயிரம் சாதி ஆகுவதா
தென்னவர் வாழ்ந்த நெறிதளர்ந்து தமிழ்த்
தேசத்தையே இருள் மூடுவதா.

சாதிப் பிரச்சினை தீரவேண்டும் இங்கு
சாந்தி சமாதானம் ஓங்கவேணடும்
சாதித் தமிழன் தகாத தமிழனென்(று)
ஓதித் திரிதல் ஒழிய வேண்டும்.

பாதியில் தாழ்ந்த தமிழினமே—புதுப்
பாதை அமைக்கப் புறப்படுவாய்
வாதிட்டு நிற்பதில் லாபமில்லை—வருங்
காலம் சிறக்கப் பணி புரிவோம்.

### வேறு

காட்டிக் கொடுத் தெங்கள் நாட்டைக் கெடுத்திடும்
கள்ளர் ஒழிந்துவிட்டால்—எம்மைப்
போட்டு மிதித்திடும் சாதிப் பிரச்சினைப்
பூசல் மறைந்துவிட்டால்—தினம்
ஆட்டும் பொருட் சிக்கல் யாவும் தொலைந்திட
ஆலைகள் தோன்றிவிட்டால்—தமிழ்
நாட்டினின் எதிர்காலம் சிறந்திடும்
நமக்கு வசந்தமாகிடும்.

**கவிஞர் செ. சுந்தரம்பிள்ளை**

---

சிந்தனை மருந்து
குளிகை 3.

## கடமை

(அனந்ததேவன்)

சைக்கிள் ஒன்று தெருவில் சென்றுகொண்டிருந்தது. அமைதியாக இருப்பதை விரும்பாத முன் சக்கரம் பின் சக்கரத்தை வம்புக்கிழுத்தது.

"நீ எப்ப பார்த்தாலும் என் பின்னாலேயே வருகிறாயே அப்படியிருந்தும் உன் அகம்பாவத்திற்கொன்றும் குறைச்சலில்லை. இனிமேலாவது தெரிந்துகொள் நான் காட்டும் வழியேதான் நீ வரவேண்டும்" என்றது முன் சக்கரம்.

"நான்தான் உன்னையும் ஓட வைக்கிறேன் என்பதை உணர்ந்துகொண்ட தாழ்வு மனப்பான்மையே உன்னை இப்படிப்பேச வைக்கிறது" என்றது பின்சக்கரம்.

"என்ன கதையளக்கிறாய் இப்போது நான் செய்யப்போகும் வேலையைப்பார் நீயும் சேர்ந்து அனுபவிக்கப்போகிறாய்" என்ற வண்ணம் அங்குமிங்கும் திரும்ப மறுத்து அடம்பிடித்தது. முன் சக்கரம். அதன் பயன் சைக்கிள் முன்னால் சென்ற ஒருவர் மீதுமுட்டிக்கொண்டது. சைக்கிள்ஓட்டிவந்தவன் கீழே விழுந்தான். பின் சக்கரம் அதனால் பாதிக்கப்படவில்லை அது தனக்குள் சிரித்துக்கொண்டது.

திரும்பவும் சைக்கிள் போய்க்கொண்டிருந்தது. "பார்த்தியா சரியான பாதையில் நான் உன்னை வழி நடத்திச் செல்லாவிட்டால் உனக்கு மாத்திரமல்ல மேலே இருக்கிறாரே அவருக்கும் ஆபத்துத்தான்" என்றது முன் சக்கரம், அடிபட்ட நோவையும் மறந்து.

பின் சக்கரத்திற்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. தன்னை இறுக்கிக்கொண்டு உருள மறுத்துவிட்டது. முன் சக்கரம் திகைத்துப்போய் நின்றது அதற்கு என்னசெய்வதென்றே தெரியவில்லை. சைக்கிளை ஓட்டி வந்தவன் கீழே இறங்கி பின் சக்கரத்தைத் திருத்தி எண்ணை போட்டான்.

திரும்பவும் சைக்கிள் போய்க்கொண்டிருந்தது. "எப்படிப்பார்த்தாலும் நான்தான் பெரியவன் என்னால் சைக்கிள்காரனையே விழுத்தமுடிந்தது உன்னால் அதுகூட முடியவில்லை" என்று கூறிச் சிரித்தது முன்சக்கரம்.

"தன் மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழையாக இருக்க வேண்டுமென்பது உன் எண்ணமானால் இன்னும் எங்கேயாவது போய் முட்டிக்கொள்" என்றது பின் சக்கரம்.

அதுவரை மௌனமாகவிருந்த சங்கிலி, "என்னைச் சற்றும் மதியாமல் பேசுகிறீர்களே நான் இயங்க மறுத்தால் உங்களால் என்ன பிரயோசனம் பாருங்கள் என் சாமர்த்தியத்தை" என்ற வண்ணம் தன்னை

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 வது வாரமாக காட்சியளிக்கிறது

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) விஜயா (மட்டுநகர்) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) வெலிங்டன் (யாழ்நகர்)

சிவாஜி, கே. ஆர். விஜயா, முத்துராமன், கீதாஞ்சலி கோபாலகிருஷ்ணன் —நடிக்கும்—


ஸ்ரீதரின்

# நெஞ்சிருக்கும்வரை

கிங்ஸ்லி (கொழும்பு)

எம். ஜி. ஆர். சாவித்திரி, —நடிக்கும்

# ‘வேட்டைக்காரன்’



## 9வது மகத்தான வாரம்!

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்) ஆனந்தா (கம்பளை)

ஜெய்சங்கர், டி. கே. பகவதி, எஸ். வரலட்சுமி முத்துராமன், நாகேஷ், கிருஷ்ணகுமாரி, ஓ. ஏ. கே. தேவர், நம்பியார், விஜயநிர்மலா

மற்றும் பலர் நடித்த,
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்

# உயிரா? மானமா?

கதை-வசனம்—டைரக்ஷன் கே. எஸ். கோபாலகிருஷ்ணன்,
இசை: ‘மெல்லிசை - மன்னன்’ எம். எஸ். விஸ்வநாதன்.



ஜெய்சங்கர், விஜயலட்சுமி, நாகேஷ், மாதவி, ஓ.ஏ.கே. தேவர் பண்டரிபாய், டி. எஸ். முத்தையா, சுந்தரிபாய் நடித்த
"பவித்ரா பிக்ஷர்ஸ்"

# அன்பு வழி

● எமது அடுத்த வெளியீடு! ●

## திருமாலின் பெருமைகளை எடுத்துக்கூறும் 3வது வாரம்

செல்லமகால் (கொழும்பு) ஈரோஸ் (பாமன்கடை) நெல்சன் (திருமலை) இம்பீரியல் (மட்டுநகர்) 4வது வாரம் வின்சர் (யாழ்நகர்)

★ நடிகர் திலகம் சிவாஜி ★ நாட்டியப் பேரொளி பத்மினி ★ எழிலரசி கே. ஆர். விஜயா ★ பட்டு மாமி சௌகார் ஜானகி

நாகேஷ், மனோரமா, எம். என். நம்பியார் சிவகுமார்

மற்றும் பலர் நடித்த

ஏ. பி நாகராஜனின் (ஈஸ்ட்மன் கலர்)

# திருமால் பெருமை



பத்து அவதாரங்களை எடுத்து மக்களுக்கு அறிவூட்டிய திருமாலின் பெருமைகளில் மூன்றை எடுத்துக் கூறும் படம் மாயக் கண்ணனின் ஆயற்பாடித் திருவிளையாடல்கள், கோதையை மணமுடித்தல், அரங்க நாட்டரசனுக்கு புத்தி புகட்டல் முதலியவற்றைக் கொண்ட படம்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஏ. இலக்கத்தில் 1969-ம் வருட மே மாதம் 29-ந் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது தொலைபேசி:23411

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org